
கவிமணி



க வெளியீடு

கழக வெளியீடு: எசு0

கவிமணி

ஆசிரியர்:

திரு. புலவர் 'அரசு'

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Jan., 1955.

KAVIMANI

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200

பதிப்புரை

'நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.'

என்பது வள்ளுவர் வாய்மொழி. உளதாகும் சாக்காடுறுவார் ஒரு சிலர். அவருள் நம் **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்** உளதாம் புகழுடல் பெற்று என்றும் பொன்றாத ஒருவராவர்.

கவிமணியவர்கள், தமிழ்க்கல்வியினும் அக்கலையினும் துறைபோய பெரியார்; அஃதோடு விரைந்து ஆன்ற பொருளாழமுடைய செய்யுளியற்றும் திறனும் படைத்தவர்; இத்தகைப் பெரியார், அண்மையில் இவ்வுலக வாழ்வு நீத்து இறையடிப்பேறுற்றனர்.

அவர்தம் வாழ்க்கை வரலாறு, நமக்கு வழி காட்டியாக அமைந்தது; அதனை அறிதல் அறிவதறிவதாகும்; எனவே, அவர்தம் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துத் தனித்தனிப் பகுதியாக்கி எழுதுவித்துக் '**கவிமணி**' என்னும் பெயரமைத்து வெளியிட்டுள்ளோம்.

இதனை நன்முறையில் ஆக்கியுதவியோர் திரு. புலவர் அரசு அவர்கள். இதனை வாங்கிக் கற்று யாவரும் நற்பயன் பெறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

பொதுவாக நம் நாட்டிலே அறிஞர்களுக்குத் தாமே தம் வரலாற்றை எழுதிவைப்பது நலம் என்ற எண்ணம் தோன்றாதது வருந்தத் தக்கது. அறிஞர்கள் எழுதும் நூலும் உரைக்கும் உரையும் அவர்களை நாட்டிலே நின்று நிலவச்செய்யப் போதுமானவை. எனினும், அவர்களுடைய நூல்களைப் படிப்போர்களுக்கு அவர்கள் சென்ற நெறியிலே செல்ல ஆர்வம் உண்டாகும்போது வரலாறுகள் வழிகாட்டும் என்பதும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. ஆகவே, டாக்டர் உ. வே. சாமிநாதையர், திரு. வி. கலியாணசுந்தரனார் போன்று தாமே தம் வரலாற்றை அறிஞர்கள் எழுதிவைப்பது நாட்டிற்கு நலம் பயக்கும்.


கவிமணி-தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் தாமே தம் வரலாற்றை எழுதிவைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். எழுதுவதாக முன் வந்த யோகி சுத்தானந்த பாரதியாரவர்களையும் எழுதவேண்டாவென்று தடுத்தாராம் கவிமணி. நல்லகாலமாக சுத்தானந்த பாரதியார் 1945-இல் சிறு குறிப்புப்போல எழுதிவைத்தார். பின்னர் 1948-இல் வித்வான் செ. சதாசிவம் பிள்ளையவர்களும் 'கவிமணி வரலாறு' எழுதினார்கள்.

இந்நூல் அவர்களிருவரும் எழுதிய வரலாற்றுக் குறிப்பையும், கவிமணியின் நூல்களையும் ஆதரவாகக்கொண்டு எழுதப்பெற்றது. அப்பெரியார்கள் இருவருக்கும் நன்றி. தமிழ்நாட்டின் செல்வங்களான மறைமலையடிகள், சண்முகஞ் செட்டியார், திரு. வி. க. ஆகியோரின் வரலாற்றுக்களுடன், கவிமணியவர்களின் வரலாற்றையும் எழுதித் தமிழ்நாட்டிலே உலவும்படி செய்யத் தூண்டிய தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கு என் நன்றி எப்போதும் உரியது.

26, பெருஞ்சாலை,
எழுமூர்.

நூலாசிரியன்.

உள்ளுறை



கவிமணியும், அவரின் இல்லக்கிழத்தியாரும்

கவிமணி

தோற்றுவாய்

உலகில் அறம் பொருளின்பங்களை விழையும் மக்களை அவர்களுக்கிடையூறின்றி ஆதரிப்பவன், மாநிலங் காவல ஞகிய மன்னன். மாநிலங் காவலில் மன்னனுக்குத் துணைபுரியுஞ் சுற்றத்தவருள் போர்வீரரும் கவிஞரும் சிறந்தவர்கள். போர்வீரர் தம் நாட்டு மக்களுக்கு நாட்டின் உள்ளும் புறமும் துன்பம் ஏதும் நேரா வண்ணம் தம் உயிரை யீந்தும் காக்கும் கடமை யுடையோர். கவிஞர்கள் அவ் வீரர்களுக்கு வீரத்தையும், நாட்டுப் பற்றையும் ஊட்டும் இனிய பாடல்களைப் பாடி மனக் கிளர்ச்சியை ஊட்டுவதுடன், நாட்டு மக்களுக்கும் வாழ்விலே சுவை யேற்படும் வண்ணம் காவியங்களையும் தனிக் கவிகளையும் படைத்துத் தரும் பெருந்திருவினர். மற்றும், மன்னன் நன்முறையிலே செங்கோல் நடாத்த அறவுரைகளைச் செவியறிவுறுத்தித் திருத்திவரும் சிறப்புடையோருமாவர். பண்டைத் தமிழ்நூல்களிற் கவிஞர்களால் மன்னர்கள் அடைந்த நன்மையை விரிவாகக் காணலாம். எனவே, அரசனுக்கு அவைக்களக் கவிஞர்கள் இன்றியமையாதவராயினர். இக் காலத்தும் நம் நாட்டிலே காங்கிரசு அரசேற்றவுடன் அரசவைக் கவிஞர்களை அமைத்திருந்தது கருதத்தக்கது.

கவிஞர் என்போர் புலவர்களில் ஒரு பிரிவினர். சிறந்த நூல்களைத் தக்க ஆசிரியர்களிடம் முறையே கற்றுத் தேர்ந்தவர்களே புலவர்களாவர். புலவர்கள் கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வகையினர், இவர்களுள் தாம் கற்றவற்றை உலகியலுடன் கற்பனைத் திறம் படக் கவிகளாக இயற்ற வல்லவர் கவிஞர்; மாணவர்களுக்கும் பிறருக்கும் உரைத்திறம்பெற உரைக்கவல்ல ஆசிரியர் கமகர்; தம்மைப் போன்ற புலவர்களிடம் திறம்பெற வாதித்துத் தம் கொள்கையை நிறுவவல்லவர்கள் வாதிகள்; பெருந்திரளான மக்களிடையேயும் கற்றுவல்ல புலவரின் பேரவையிலேயும் தாம் கற்றவற்றை எடுத்தியம்பவல்ல -சொற்பொழிவாற்ற வல்ல - புலவர்கள் வாக்கிகள். புலவர்கள் இங்ஙனம் தம் இயற்கைத் திறனுக் கேற்பப் பிரிவுறுவர்.

ஆகையால், மேற் கூறியாங்கு நன்முறையிலே நூலாராய்ந்து கற்றுத் தேர்ந்த புலவர்களே ஏதேனும் ஒரு துறையில் மேம்பட்டவர்களாக முடியும். எனவே, இயற்கையிலேயே கவிவளமுடையோர், தாம் கற்ற கல்வியினாலேதான் கவிஞராய்ச் சிறப்புற முடியும். 'கல்லாதான் சொற்காமுறுதல்' இயலாதவாறுபோலக் கல்லாதான் கவிஞனாகவும் முடியாது. 'கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும், கொள்ளார் அறிவுடை யார்' என்பது ஆராய்ந்துரைத்த அறிவுரை.

இங்ஙனமாகவும் சிலர் கவிஞருக்கு இலக்கண இலக்கியப் புலமை வேண்டா என்பர். இது நகைதரும் மொழியே. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்ற பழமொழி, இயற்கையிலேயே கவியியல்பு உடையோருக்கே காரிகை கற்

பதனுற் கவியியற்றும் ஆற்றலுண்டாகும் என்பதை வற்புறுத்துகிறதேயன்றிக் கல்லாமலே கவிஞராக முடியும் என்று கூறுவதாகாது. புலவர் மரபிலே தோன்றிய சிலர், கல்லாமலே கவியியற்றும் ஆற்றலுடையவர்களாக இருப்பது உண்மையே. இது அவர்களுடைய மரபின் இயற்கை யாற்றலையே காட்டுகிறது. கவியிலே அமைக்கத் தகுந்த பொருள், கல்வியறிவின்றி வாராது. கல்லாதான் கற்ற கவி, வான்கோழி பொல்லாச் சிறகை விரித்தாடினுற் போலிருக்கும் என்று ஒளவையார் கூறுகிருர். மக்களுக்கு நலந்தரும் சிறந்த கருத்துக்களும் கற்பனைகளும் நூலுணர்வு இன்றி வருதல் எங்ஙனம் இயலும்? ஆகவே, கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும் கவிஞர்கள் இருத்தல் வேண்டும் என்பது உறுதியுடையது.

இந்த இருபதாம் நூற்றுண்டிலே தமிழ்நாட்டில் தோன்றிய மறுமலர்ச்சிக் கவிஞர்களிலே **கவிமணி - தேசிக விநாயகம் பிள்ளை** யவர்கள் சிறந்தவர்கள். இவர்கள் மேற்கூறியவாறு கற்றுவல்ல புலமையுடன் கூடிய கவிஞராக இருந்ததோடன்றிச் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் சிறந்த ஆசிரியராகவும் விளங்கினுர்கள். இப் பெரியார் சிறிதும் தந்நலம் விழையாமலே எப்போதும் தாம்பிறந்த நாட்டின் நலனெலாங் கருதி யுழைத்தார். ஆகவே, இவர் கவிமணியாகவும் புலவர் மணியாகவும் விளங்கியதோடு, தம் நாட்டு மக்களின் கண்மணியாகவும் விளங்கினுர். இப் பெரியார் வரலாறு நம்மைத் தூய நன்னெறியிலே கிளர்ச்சியுடன் செல்லும் சிறப்பினராக்கவல்லது.

I. வரலாறு

க. இளமைப் பருவம்

நாடு

முற்காலத்தில் வடவேங்கடம் தென் குமரியென்னும் எல்லையிலே இருந்த தமிழ்நாடு, சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ் முடி மன்னர்களாலே ஆளப்பட்டு வந்தது. பிற்காலத்திலே சேரநாடு திருவாங்கூரைத் தலைமையாகக்கொண்டு மலையாள மொழி பேசும் நாடாயிற்று. மலையாளமும் தமிழின் குழந்தைதானே! எனினும், மலையாள மக்கள் இப்போது பிரியத் திட்டமிட்டிருக்கிறார்கள். அவ்வாறு நினைக்கும் மலையாளத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையிலே திருவாங்கூர் இராச்சியத்தின் தென் பகுதியாக நாஞ்சில் நாடென ஒரு நாடு இருக்கிறது. உயர்ந்த கொடுமுடியையுடைய நாஞ்சில் மலையைத் தன்னகத்தே கொண்டதனாலே நாஞ்சில் நாடெனப் பெயர் பெற்றது. சங்ககாலத்திலே வள்ளுவன் என்னும் பொருநன் ஒருவனுக்கு இந்த நாடு உரிமையாயிருந்தது. 'நாஞ்சிற் பொருநன்' ஆகிய அவன் புறநானூற்றில் (௩௮௦) 'தென்னவர் வயமறவன்' என்று குறிப்பிடப்படுகிறான். ஆகவே, நாஞ்சில்நாடு, அக்காலத்தில் பாண்டியர்களுக்கு உரியதாயிருந்தது புலனாகும். பிறகு, சேரர் ஆட்சியிற் சிக்கியிருக்க வேண்டும் இந்த நாடு. இந்த நாட்டிலுள்ள விழிஞத்திலும் கோட்டாற்றிலும் நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னன் சேரனோடு போர் புரிந்த செய்தி பாண்டிக்கோவையால் விளங்குவதால் அப்போது சேரனிடம் இந் நாடிருந்தது புலப்படுகிறது. நெடுமாறன் சேரனிடமிருந்து அப்போரிலே இந்த நாட்டைக் கைக்கொண்டிருக்க வேண்டும்.

எனினும் பிறகும் சேரரிடமே மாறியிருக்க வேண்டும். 10-ஆம் நூற்றுண்டிலே முதல் இராசராசன் கைக்கு வந்தது. இவனைப்பற்றியும் பின்னிருந்து சோழ நாட்டை யாண்ட சோழர்களைப் பற்றியும் 13-ஆம் நூற்றுண்டு வரை நாஞ்சில் நாட்டில் உள்ள கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. பிறகு, சேரர் கைக்குத் திரும்பிப், பின்னர் விசயநகர நாயக்கர் கைக்கு மாறி, இவ்வாறு நிலை கெட்டிருந்த நாஞ்சில் நாடு 18-ஆம் நூற்றுண்டிலிருந்து திருவாங்கூர் இராச்சியத்தில் இணைந்துள்ளது.

மேலே கூறிய வரலாற்றால் உணர்ந்தபடி நாஞ்சில் நாட்டில் வாழும் மக்கள் பாண்டிய நாட்டிலிருந்தும் சோழ நாட்டிலிருந்தும் குடியேறிய தமிழ்மக்களாகவே இன்றும் இருக்கின்றனர். அஃதாவது, திருவாங்கூர் இராச்சியத்தின் ஒரு பிரிவிலே இருக்கும் இந்த நாட்டு மக்கள் தமிழையே பேசி வருகின்றனர். அவர்களுள் பெரும்பாலோருடைய பழக்கவழக்கங்கள், தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களாகவே இருக்கின்றன. இந்த நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலியவைகளும் நாஞ்சில்நாடு தமிழ்நாட்டின் ஒரு பகுதியென விளக்குகின்றன.

இந்த நாஞ்சில் நாடு, பல தமிழ்ப்புலவர்கள் தோன்றும் பேறு பெற்றது, மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, செண்பகராமன் பள்ளு ஆசிரியர், பக்திரசக் கீர்த்தனைகள் பாடிய நீலகண்டசிவம், தமிழாராய்ச்சி நலனும் சட்ட அறிவும் மேம்படக் கொண்ட கே. ஜி. சேஷையர், ஆராய்ச்சி வல்லவரான கே. என். சிவராஜ பிள்ளை, இசைக் கவியரசு இலக்குமணபிள்ளை, அவதானம் வல்ல செய்குத்தம்பிப் பாவலர் முதலான பல

புலவர்கள் இந்த நாட்டில் தோன்றியவர்கள். இந்த நாட்டில் சுசீந்திரம், பறக்கை, கன்னியா குமரி, வாணன் திட்டு, வீமநகரி, அரும நல்லூர் முதலிய ஊர்களில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த பல சைவமடங் கள் இருக்கின்றன.

நாஞ்சில்நாடு நன்செய்வளம் மிகுந்த நாடு. பழை யாறு, புத்தனாறு, கோட்டாறு முதலிய ஆறுகள் இந் நாட்டை வளம்படுத்துகின்றன. பழையாறு காவிரி போல நீர்வளஞ் சுரப்பது. சங்க நூல்களிற் கூறப்படும் பஃறுளியாறே பழையாறு என்ருகியிருக்கலாம் என்று கவிமணியவர்கள் கருதுகின்ருர்கள். ஆனுல், 'பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' என வருஞ் சிலப்பதிகாரப் பகுதி (காடுகாண் காதை-கக—உ०) பஃறுளியாறு கட லிற் போய்விட்டதாகக் கூறுகின்றது. கோட்டாற்றின் கரையிலே கோட்டாறு என்னும் ஊர் இருக்கிறது. அஃது இப்போது நாகர்கோவிலுடன் சேர்ந்து விரிவான நகரமாக வளர்ந்துவிட்டது; கோட்டாறு நாகர்கோவி லின் ஒரு பகுதியாக இருக்கிறது.

ஊர்

இந்த நாட்டிலே சுசீந்திரம் என்பது தாணு மாலயப் பெருமான் கோயிலையுடைய பழம்பதியாகும். இக் கோயி லில் பாண்டியர், சோழர், சேரர், விசயநகர வேந்தர், நாயக்க மன்னர் ஆகியோருடைய கல்வெட்டுக்கள் நூற் றுக் கணக்காக இருக்கின்றன. ஒன்றிரண்டு கல்வெட் டுக்கள் மட்டும் வடமொழியில் உள்ளன; மற்றவை தமிழ். இக் கோயில் ஒரு காலத்தில் தெய்விக நீதிமன்ற மாக இருந்ததென்றும், நம்பூரிப் பிராமணர்கள் குற்ற வாளிகள் என்று ஐயமுற்ருல், திருமுன்னே காய்ச்சின

நெய்யிலே கையை இடச் சொல்வார்களென்றும் அறிந்தோர் கூறுகின்றனர். இதற்குச், 'சுசீந்திரம் கைமுக்கு' என்று பெயராம்.

சுசீந்திரத்துக்கு ஒரு கல் வடக்கேயுள்ள தேரூர் என்னுஞ் சிற்றூரே நம் கவிமணியவர்கள் தோன்றிய ஊர்.

பெற்றோர்

கவிமணியவர்களின் மரபு, சைவவேளாள மரபு. தந்தையார் **சிவதாணுப்பிள்ளை**; ஆங்கிலமும் தமிழும் அறிந்தவர்; நாஞ்சில் நாட்டில் அக் காலத்தில் ஆங்கிலங் கற்றவர்கள் சிலரே. அக் காலத்தில் நாஞ்சில் நாட்டு வேளாளரிற் சிறந்தவர்களுக்கு அரசாங்கத்தார் மூத்தபிள்ளை என்று பட்டமளிப்பர். சிவதாணுப் பிள்ளையவர்களுக்கும் மூத்த பிள்ளை என்ற பட்டமுண்டு. அழகிய பாண்டிய புரம் என்னும் ஊரிலே உப்புப் பண்டக சாலையிலே அலுவல் பார்த்து வந்தார். கவிமணியவர்களின் அன்னையார் தமிழ்ப்புலமை பெற்ற மரபிலே தோன்றியவர்; **ஆதிலட்சுமி** என்னும் பெயரினர். இந்த அம்மையாரின் தந்தை மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், 'காரியந்தாதி' என்னும் நூலொன்றும் பாடியிருந்தாராம். காரி என்பது ஐயனார் பெயர். இந் நூல் இப்போது இல்லை. ஆகவே, கவிமணியவர்களின் பெற்றோர் தமிழ்ப்பற்று மிகுந்தவர்களாயிருந்தனர் என்றறியலாம். இத்தகைய மரபை விளக்கும் விண்மணியாக நம் கவிமணியவர்கள் நம் நாடு செய்த நல்வினையினாலே **1876-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில்** (தாது, ஆடி, கச) **பிறந்தார்கள்.**

கல்வி

கவிமணியவர்களின் தொடக்கப்படிப்புத் தேரூரிலேயே தொடங்கித் தேர்ந்து வந்தது. கல்வி கற்கத்

தொடங்கிய காலம் ஐந்தாம் வயது. தொடக்கப் படிப்பு முடிந்ததும் இப்போது நாகர்கோவில் என வழங்கும் கோட்டாற்றிலுள்ள ஆங்கிலப்பள்ளியிலே சேர்ந்து படித்தார். இவருடைய தந்தையார் இவருடைய பத்தாம் வயதிலேயே (*1895*-இல்) தம் ஊனுடலை விட்டார். ஆகவே, தாயாரே இவருக்கு ஆதரவாக இருந்து இவரை மெட்றிகுலேஷன்வரை படிக்கவைத்தார். கல்லூரிப் படிப்புக்காகக் கல்லூரியிற் சேர்ந்தாரெனினும் குடும்ப நிலைமையால் தொடக்கத்திலேயே நின்றுவிட நேர்ந்தது. கல்லூரிப் படிப்பை விட்டவுடன் போதனுமுறைப் படிப்பைத் திருவனந்தபுரத்தில் முடித்தார்.

இவர் படித்த பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் கற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை; மலையாளமே அங்குத் தாய்மொழி நிலையில் இருந்தது. ஆகவே, இவருக்குத் தமிழ் கற்கும் ஆர்வம், மரபையொட்டியே எழுந்திருக்கவேண்டும். இவர் தந்தையார் தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பார். தமிழ்க்கவிஞர்கள் இவரை நாடி வருவர். ஒரு கவிஞர் தம் தந்தையாரைப் பாடிய கவியொன்றை இவர் பள்ளியிலிருந்து படித்துவிட்டு வந்தபோது பார்த்தார். அக் கவி இவரைத் தமிழ் கற்றுக் கவிபாட வேண்டும் என்ற எண்ணத்தை எழுப்பியது. இவர் தாமரைக்குளம் என்னும் ஊரில் இருந்த தம் தாய்வழிப் பாட்டனாரான மாணிக்கவாசகம் பிள்ளையவர்களைப் பார்க்கச் சென்றால், பாட்டனார் கவியியற்றும்போது உடனிருந்து கண்டு மகிழ்வார். அப்போதும் இவருக்குக் கவிபாட வேண்டும் என்ற எண்ணம் எழும்; தமிழ் கற்க விரும்பிய இவருடைய ஆர்வம், தந்தையாராலும் தாய்வழிப் பாட்டனாராலும் வளர்ந்தது. அவர்களிடமே இவர் தமிழ் கற்றார். மற்றும், பள்ளிப்படிப்பிலே கிடைத்த ஓய்வு

நேரத்தில் தேரூருக்கு அருகில் ஏரியின் நடுவில் இருந்த வாணன் திட்டு என்னும் இடத்தில் சைவமடத்தில் இருந்த சாந்தலிங்கத் தம்பிரானிடம் சென்று தமிழ் கற்ருர். இந்த மடம் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்ததென்று முன்னரே கூறப்பட்டது.

சாந்தலிங்கத் தம்பிரானிடம் இலக்கண இலக்கியங் களைப் பாடங் கேட்கும்போது வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் இயற்றிய நெல்லைச் சிலேடை வெண் பாவையும் இவர் பாடங்கேட்டார். அப்போது முதலியா ரின் கல்வியறி வொழுக்கங்களைத் தம்பிரான் பாராட்டிக் கூறினர். அப்பொழுதிருந்தே முதலியாரிடம் கவிமணி பெருமதிப்புக் கொண்டார். முதலியாருக்கு எண்பதாவது ஆண்டுவிழா நடைபெற்றபோது (1937) கவிமணி அவரை 'எண்பதாண்டான இளைஞர்' என்று பாராட்டி வாழ்த்தியிருக்கிருர். மற்றும் அவருடைய அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், சுவர்க்க நீக்கம், கம்பராமாயண சாரம் ஆகிய நூல்களையும் சிறப்பித்து எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மலரில் எழுதியிருக்கிருர்.

குழந்தைக் கவிஞர்

இவர் தமது பத்தாம் வயதிலேயே கவியியற்றத் தொடங்கினர். தேரூரில் நல்ல மாடன் கோயிலென ஒன் றுண்டு. அதற்குத் திருவிழா நடக்கும்போது ஆடு கோழி களை நல்ல மாடனுக்கு உணவாகப் படைப்பது வழக்கம். தேசிக விநாயகத்திற்கு இவ்வாறு உயிர்க்கொலை செய்வது தவறெனத் தோன்றியது. ஊனுண்பது எல்லாவற்றி னும் கொடிய பாவம்.

'உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு'

என்றும் வேறு பலவாற்ருனும் புலாலுண்பதைத் திருவள்ளுவர் வெறுத்துள்ளார். இத்தகைய கொடுஞ் செயல் செய்வோரைக் கண்டால், மயங்கி உள் நடுங்கி ஆற்ருமல் என்பெலாங் கருக இளைப்புத் தோன்றுவதாக இராமலிங்க அடிகள் எழுதியுள்ளார். அறிவில்லா மக்கள் தாம் ஊனுண்பதோடு நில்லாமல் தெய்வங்களுக்கும் ஊனை உணவாகப் படைக்கவும், 'உயிர்ப்பலி' செய்யவும் எண்ணுவதும், புரிவதும் எத்துணைக் கொடுமை !

> 'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
> எங்ஙனம் ஆளும் அருள்'

என்னும் வள்ளுவர் விஞவுக்கு ஊனுண்போர் விடைகூறுவதெப்படி? இங்ஙனம் தமிழ்நூல்களெல்லாம் ஒருமுகமாகத் தடுக்கும் உயிர்க்கொலையை நல்லமாடன் என்னும் நற்பெயர் பூண்ட தெய்வத்தின் பெயரால் நடத்துவது நம் கவிமணிக்கு மனநடுக்கத்தை உண்டாக்கியது. ஆதலால், மனம் நொந்து ஒரு செய்யுள் பாடினுர். அச் செய்யுள் இப்போது உருவாகக் கிடைக்கவில்லை. 'நாடியறம் தேடியிடும் நற்றேரூர் தன்னிலமர் நல்ல மாடன்' என்று தொடங்கும் அச் செய்யுளை அரைகுறையாக யோகி சுத்தானந்த பாரதியார் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள்.

வாணன்திட்டு மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரானுக்குப்பின், சங்கரலிங்கத்தம்பிரான் என்பவர் கட்டளைத் தம்பிராஞக இருந்தார். அவர் ஒருமுறை சா. போற்றிக்கண்ணு என்பவனிடம் பணங்கொடுத்து நல்ல உருத்திராக்கம் வாங்கியனுப்பக் கேட்டிருந்தார். அவன் மதுரையில் இருப்பவன்; பிறரை ஏமாற்றும் இயல்பினன். ஆகவே, அவன் இவரையும் ஏமாற்றி

விட்டான். சிறு பருவத்தினரான நம் கவிமணி, வாணன் திட்டு மடத்திற்கு ஒருமுறை சென்றபோது தம்பிரான் தம்மை ஏமாற்றிய போற்றிக்கண்ணுவின்மேல் ஒரு செய்யுள் பாடும்படி கூறினர். இவரும் விளையாட்டாகப் பாடினர். அப்பாட்டைத் தம்பிரான் ஓர் உறையில் இட்டு மதுரைக்குப் போற்றிக்கண்ணுவின் பேருக்கு அஞ்சல் மூலமாக அனுப்பினர். அச்செய்யுள் மதுரை செல்லு முன்னரே போற்றிக்கண்ணு ஊற்றையுடலை விட்டொழிந்து விட்டானும். இந்நிகழ்ச்சி 'காக்கை யேறப் பனம்பழம் விழுந்த கதை'யாக முடிந்ததென்று சுத்தானந்தபாரதியார் தாம் எழுதிய தேசிகவிநாயகம்பிள்ளை வரலாற்றிலே குறிப்பிட்டிருக்கின்றனர். இச்செய்யுள் எழுதி வைக்கப்படவில்லை.

இவ்வாறு பாடுவது **அங்கதம்** எனப்படும். தொல்காப்பியம் பொருளதிகாரத்திற் செய்யுளியலில் (களஅ),

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

என்னும் சூத்திரத்திற்கு உரையெழுதிய பேராசிரியர், "'மறைமொழிதானே' என்று பிரித்தான், இவை தமிழ் மந்திரம் என்றற்கும், பாட்டாகி **அங்கதம்** எனப் படுவனவும் உள, அவற்றை நீக்குதற்கும் என உணர்க," என்று குறிப்பிடுகிறார்.

அங்கதத்திற்கு எடுத்துக்காட்டாகக் குயக்கோடன் என்பானை நக்கீரர் பாடிய செய்யுட்களைப் பேராசிரியர் குறிப்பிடுகிறார். அச் செய்யுட்களில்,

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரணர் கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்கசுவா கா."

என்பது "ஆரியம் நன்று தமிழ் தீது" எனவுரைத்த காரியத்தால், அவனைச் சினந்து பாடியது. இச்செய்யுளைப் பாடியவுடன் அவன் இறந்துவிட்டானும்; பிறகு, அவனைச் சார்ந்தோர் வேண்டிக்கொண்டதன்மேல் அவன் உயிர்த்தெழவும் பாடினாராம். அவ்வாறே அவன் உயிர்பெற்றெழுந்தானும்.

இவ்வாறே ஔவையாரும் நன்னன் மரபிலே பிறந்தவனும் மேற்குமலைத் தொடரிலுள்ள ஏழிற் குன்றத்தின் தலைவனுமாகிய ஏழிற்கோ என்பவன் தம்மை மதியாமலிருந்ததைப் பொறுமல்,

> "இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
> குருடேயும் அன்றுநின் குற்றம்—மருடீர்ந்த
> பாட்டும் உரையும் பயிலா தனவிரண்
> டோட்டைச் செவியும் உள."

என்று பாடினாராம்.

புறநானூற்றிலும் பாரிமகளிரை மணக்க மறுத்த இருங்கோவேள் என்னும் குறுநில மன்னனைக் கபிலர் இகழ்ந்து பாடும்போது, அவன் முன்னோருள் ஒருவன் கழாத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததனால் அவனுடைய அரையம் என்னும் நகர் அழிந்ததென எச்சரிக்கிறார், என்று காணப்படுகிறது. (புறம்: ௨0௨)

பிற்காலத்திலும் 'வசைபாடக் காளமேகம்' எனக் காளமேகப் புலவரைச் சிறப்பிக்கின்றனர். கம்பர் தம் மகன் அம்பிகாபதியைக் கொன்ற சோழன்மரபு அழியும்படி தம் வாய்ச்சொல் சுட்டதென்று பாடியதாகக் கதையுள்ளது.

இவ்வாறு பண்டைநாளிலிருந்து இன்றுவரையிற் புலவர்கள் ஆக்கவும் அழிக்கவும் வல்ல தெய்வத்தன்மை

யுடையவர்களெனப் பாராட்டும் நோக்கத்துடன் கதைகள் கூறப்பெற்ருலும், "இன்ஞ செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் - என்ன பயத்ததோ சால்பு" என்று வினவும் வள்ளுவர் வாய்மொழியைச் சிந்திக்கும்போது அங்கதம் பாடுவது ஒரு நற்பண்பாகக் கருதப்பட மனம் ஒப்பவில்லை. நம் கவிமணியவர்களும் அறியாப்பருவத்திலே விளையாட்டாகப் பாடியிருப்பார்கள் என்றும், இச் செய்யுள் தரும் பயனை விழைந்து பாடியிருக்கமாட்டார்கள் என்றுமே கொள்ளவேண்டும்.

திருவாவடுதுறையாதீனம் சாந்தலிங்கத் தம்பிரானிடம் கவிமணி தமிழ் பயின்ருரென முன்னரே கூறப்பெற்றது. அப்போது இவர் திருநெல்வேலி உமையொருபாகக் குருக்களிடம் சைவதீக்கை பெற்ருர். அப்போது அவரைப் புகழ்ந்து ஒரு செய்யுள் பாடினர்.

அச் செய்யுள் :

வேறு மொருதுணையான் வேண்டுவனே வேணுவனந்
தேறுமுமை யோர்பாகத் தேசிகனே !—கூறுமெனக்
கெய்யாப் பிறவி யிருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது.

இவ்வாறு, தனிப்பாடல்களே யல்லாமல், சாந்தலிங்கத்தம்பிரானிடம் பாடங்கேட்கும்போதே அவர் விருப்பத்தின்படி தாம் பிறந்த தேரூரில் எழுந்தருளிய அழகம்மையின்மேல் '**அழகம்மை ஆசிரிய விருத்தம்**' என்னும் சிறு நூல் பாடினர். கன்னி நூலாகிய இந்நூலிலேயே கவிமணியின் புலமை சிறந்து விளங்குகிறது. தாயுமானவர் பாடிய 'வளர்காதலிப் பெணுமை' விருத்தம்போல 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' அமைந்தது. அப்போது இவருக்கு வயது பதினெட்டுக்குமேல் இருபதுக்குள் இருக்கலாம்.

திருமணம்

கவிமணிக்குக் கல்லூரிப் படிப்பிலிருக்கும்போதே (1901) திருமணம் நிகழ்ந்தது. இவருக்கு வாழ்க்கைத் துணேவியாராக வந்த அம்மையார் புத்தேரியில் பிறந்தவர்; உமையம்மையார் என்னும் பெயரினர். நாகர்கோவிலுக்கு வடக்கே இரண்டுகல் தொலேவில் புத்தேரியுள்ளது, புத்தேரியிலே போகீசுவரர் என்ற பெரியார் ஒருவருடைய சமாதியின்மீது வளர்ந்திருந்த புற்ருலும் அதன் அருகிலுள்ள ஏரியாலும் புற்றேரி என்னும் பெயர் உண்டாகி நாளடைவில் புத்தேரி என மருவியதாம். மற்றும் 'புத்தர் சேரி' என்பது 'புத்தர் தேரி' என ஆகிப், பிறகு புத்தேரி என மருவியதென்றும் கூறுகின்றனர். புத்தேரிக்கு அருகிலே உள்ள பெரிய ஏரியும் மலேயும் வயல் வெளியும் புத்தேரியை அழகு செய்கின்றன. கவிமணி தம்முடைய பிற்காலத்திலே ஓய்வெடுத்துக்கொண்டபோது புத்தேரியிலேயே வாழ்ந்தார்.

உ. ஆசிரியப் பணி

கல்லூரிப் படிப்பை நிறுத்திக்கொண்டு 'செகண்டரி கிரேடு' ஆசிரியர் பயிற்சி பெற்றபின், தம் இல்லற வாழ்விலே ஈடுபட - குடும்பச் சுமையை ஏற்க - ஆசிரியரானார். முதன்முதலாகக் கோட்டாற்றிலே தொடக்கப்பள்ளி ஆசிரியராயிருந்தார். பிறகு, நாகர்கோவில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிலும், திருவனந்தபுரம் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப்பள்ளியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர்த் திருவனந்தபுரம் அரசர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும், திருவனந்தபுரம் அரசர் பெண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். 1901-இல் தொடங்கிய ஆசிரியப்பணி 1931 வரையிலும் நடைபெற்றது. பிறகு, ஓய்வெடுத்துக்கொண்டு புத்தேரியில் தங்கிப் பொதுப்பணியிலே ஈடுபட்டார்.

ஆசிரியப்பணி மிகவும் சிறந்தது; தூயது. நாட்டிலே தோன்றும் இளம்பயிர்களைக் களையெடுத்து, நீர் பாய்ச்சி, வேண்டும் எருவிட்டு, நன்கு விளையச்செய்யும் ஆசிரியப்பணிக்கு நிகராவது வேறொன்றும் இல்லை. கல்வி என்பது உள்ளத்திலே மறைந்து கிடக்கும் அறிவாகிய மணியைக் கல்லியெடுத்து விளக்கமுறச்செய்வது. மக்கள் தம் வாழ்நாளை எங்ஙனம் கழிப்பது என்பதையும், எவ்வாறு பிறருடன் பழகவேண்டும் என்பதையும், இன்னோரன்ன பிறநெறிகளையும் கற்றுக்கொள்வதே கல்வி. இக்கல்வியைக் கற்க மாணவர்கட்கு உடனிருந்து வழிகாட்டும் ஆசிரியர்கள் மக்கள் இனத்திலேயே மிக மிக உயர்ந்தவர்கள். பெற்றோர்கள் குழந்தைகளின் ஊனுடலை வளர்க்கிறார்கள்; ஆசிரியர்கள் அக் குழந்தை

களின் உள்ளத்திலே தூய அறிவாகிய ஒளியை வளர்க்கிருர்கள். ஊனுடல் அழியுந் தகையது; அறிவுடல் அழிவற்றது. கல்வியின் சிறப்பைக் கூருத நூல்களில்லை; அறியாத மக்களுமில்லை.

ஆனுல், ஆசிரியர்கள் இத் தகுதியை நன்கு பயன் படுத்திக் கொள்வதில்லை; நற்பணி புரியும் வாய்ப் பொன்று தமக்குக் கிடைத்துள்ளபோதே அப்பணியைச் செப்பமுறச் செய்து தம் உள்ளத்தைக் களிப்பினுல் நிறைத்துக்கொள்வதில்லை. அவர்கள் பொருள் வருவாயைத் தரும் பண்டமாற்றுப் பொருளாகக் கல்வி கற்பிக்கும் தூயபணியை எண்ணுதல் பெருந் தவருகும். வருங்காலத்து நாட்டின் செல்வமான செல்வச்சிருர் களைத் தந்நலமற்றவர்களாக, நாட்டுப்பணியில் ஈடு படும் பெரியோர்களாக, நாட்டின் ஞாயிறுகளாக ஆக்கும் வாய்ப்புத் தமக்குக் கிடைத்துள்ளதை நினைத்து அப்பணியை நன்கு திருத்தமுறச் செய்தலே ஆசிரியர் களின் கடமையாகும்.

நம் கவிமணியவர்கள், ஆசிரியர் மணியாக முப்ப தாண்டுகள் சேவை செய்திருக்கிருர்கள். பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவிகள் இவருடைய கல்விக் கூடத்திலே கடைசல் பிடித்து நன் மணிகளாகத் தங்கள் வாழ்வைத் தொடங்கியுள்ளனர். நாட்டுப்பணியிலே சிறந்த ஆசிரியப்பணி ஒன்றையே தம் பிறப்பின் பயனு கக்கொண்டு கவிமணி அமைதி யடைந்திருக்கலாம். எனினும், இவர் அவ்வாறு ஆசிரியப் பணியோடு மட்டும் இருந்துவிடவில்லை; ஒழிந்த நேரத்திலெல்லாம் தமக்கு விருப்பமான கவிப்பணியிலும் ஈடுபட்டார். குழந்தை களின் உள்ளத்திலே இன்ப ஊற்றை எழுப்பக் 'குழந்தைச்

செல்வம்' அமைத்து வந்தார்; கல்வெட்டு ஆராய்ச்சியிலே ஈடுபட்டார்; ஆங்கிலப் பாடல்கள் சிலவற்றைக் கவிதை வடிவிலே மொழிபெயர்த்தார்; திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்த 'தமிழன்' 'கேரளசொசைட்டி' முதலான இதழ்களிலே கவிகளையும், தம் ஆராய்ச்சிகளையும் வெளியிட்டார்.

திருவனந்தபுரத்தி லிருந்தபோது (1917-18-ல்) மருமக்கள்வழி மான்மியம் என்னும் நூலைத் 'தமிழன்' இதழில் தொடர்ச்சியாக வெளியிட்டார். அக்காலத்தில் இவர், பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் மனோன்மணீயத்தை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டதற்குத் துணைபுரிந்தனர்; இப்பதிப்பின் விளம்பரமாகத் 'திராவிடன்' இதழிலே மனோன்மணீயத்தின் மறு பிறப்பு என்னும் கட்டுரையொன்றை எழுதினார். 'செந்தமிழ்' இதழிலே சில கவிதைகள் எழுதி வெளியிட்டார்

திருவனந்தபுர வாழ்க்கை இவருக்கு மிகவும் இனியதாக அமைந்தது. இதற்குக் காரணம் புலவர் பலருடைய கூட்டுறவேயாகும். புலவர் பலர் ஒன்றுகூடி நூலாராய்ச்சி செய்வதினும் இன்பம் வேறுண்டோ?

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி"

என்னும் நாலடிச் செய்யுள் எத்துணைப் பொருள் நிறைந்தது! 'தவத்துக்கொருவர்; தமிழுக்கிருவர்' என்னும் பழமொழியும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது. தமிழுக்

கிருவர் என்பதனுல் இருவரே என்றுமட்டும் கொள்ள வேண்டுவதன்று. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, இசையரசு இலக்குமணப் பிள்ளை, ஆராய்ச்சி வல்லுநர் கே. என். சிவராஜ பிள்ளை, கம்பன் புகழைப் பரப்பிய கே. என். குமரேசப் பிள்ளை, 'தமிழன்' இதழாசிரியர் பண்டித - முத்துசாமிப் பிள்ளை முதலான புலவர்களுட னும், தமிழ்ப்பற்று மிக்க நீதிபதி கே. ஜி. சேஷையர், கே. ஜி. சங்கரையர் போன்றவர்களுடனும் அளவளாவ வும் அவர்களுடன் நூலாராய்ச்சி செய்யவும் கூடிய பேறு பெற்ருர் நம் கவிமணி. திருவனந்தபுரத்தில் புத்தன் சந்தையிலுள்ள சைவப் பிரகாசசபை இவர்க ளுக்கு நூலாராய்ச்சி செய்யும் இடமாக அமைந்திருந்தது.

அக்காலத்தில் வழக்கறிஞர் பி. சிதம்பரம் பிள்ளை பி.ஏ., பி எல். அவர்களால் வெளியான 'முதலியார் ஓலை கள்' என்ற ஆராய்ச்சியைப்பற்றி நம் கவிமணி 24-11-1930-இல் 'கேரளா சொசைட்டி'யில் ஒரு சொற் பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்தி ஆக்கம் அளித்தார். மற்றும், வெற்றி கொண்டான் புலவர் பாடிய 'திவான் வெற்றி' என்னும் விற்கவிதை நூலை வெளியிடும் வண் ணம் டி. கே. ஜோசப் என்பவருக்களித்து, வெளிவரு வதற்கு வேண்டும் துணையும் நம் கவிமணி புரிந்தார்.

நீதிபதி சேஷையர் அவர்களின் தமிழ்ப்பற்ருல் அடிக்கடி தமிழாராய்ச்சிகள் நடைபெறும். ஒரு முறை சுசீந்திரம் ஆறுமுகம் பிள்ளையவர்களால் தசாவதானம் நடைபெற்றது. அதற்கு நீதிபதியாக சேஷையர் அவர் களே வீற்றிருந்தார்கள். புலவர் பலரும் கூடிய அப் பேரவை, பிள்ளையவர்களின் தசாவதானத்தை வியந்து பாராட்டியது. சேஷையரும் 'சபாஷ்! பேஷ்!' என்றனர்;

பிறகு, கவிமணியவர்களின் கருத்தை வினவினர். இவரும்,

“ ஆறுமுகம் பிள்ளை அவதானங் கண்டெளியேன்
வேறுமுக மன்கூற வேண்டுமோ?—தேறுமதி
சேஷையா மெச்சித் திருவாய் மலர்ந்து, ‘சபாஷ்!
பேஷையா!’ என்ற பிறகு!”

என்று விரைந்து பாடிச் சிறப்பித்தனர். இச் செய்யுளில் கவிமணியவர்களின் அடக்கமும், எளிய சொற்களால் இனிய பாட்டமைக்குந் திறமையும் விளங்குவதைப் பாருங்கள்.

௫. கவிமணி

ஆசிரியப் பணிபுரியும்போதும் கவிகளும் கட்டுரைகளும் எழுதித் தமிழ்ப்பணி புரிந்தாலும் கவிமணியவர்களைக் கவிமணியாக நாடறிந்தது 1931-க்குப் பின்னர்ப் புத்தேரியிலே தங்கிய பிறகுதான் எனலாம். ஆசிரியராக இருந்தபோது பாக்களையும் கட்டுரைகளையும் புனைபெயராலே வெளியிட்டுவந்ததனால் இவரை நாடறிய முடியாதிருந்திருக்கலாம். இவர்கொண்ட புனைபெயர்கள் **ஆண்டான் கவிராயர், ஐயம் பிள்ளை, தே. வி., குயில், யதார்த்தவாதி** என்பவை. ஆசிரியப் பணியை விட்டுப் புத்தேரியிலே தங்கிய பிறகே இவர் தம் உண்மைப் பெயராலே கவிதை முதலியவற்றை வெளியிட்டார்.

கவிமணியவர்கள் ஆசிரியராக இருந்த காலத்திலேயே 1926-முதல் சென்னைப் பல்கலைக்கழகத்தினர் ஒரு தமிழ்ப் பேரகராதி வெளியிடத் தொடங்கினர். அப்போதிருந்து அது முடிந்த 1936 வரை இவர் அப் பேரகராதியின் 'ஆனரரிரெபரி'யாக இருந்து பணிபுரிந்தார்; மற்றும், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் பதிப்பித்த பல தமிழ் நூல்களுக்கும் ஏட்டுப் பிரதிகளைத் தேடித் தந்தார். 'காந்தளூர்ச்சாலை' என்னும் ஆராய்ச்சி நூலொன்றை ஆங்கிலத்தில் 1936-இல் வெளியிட்டார்.

இவருடைய கவிக்கதிர்கள் தமிழ்நாடெங்கும் பரவி மூலை முடுக்கிலிருந்த சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை எல்லோரையும் உறக்கத்திலிருந்து எழுப்பிக் களிகொளச் செய்தன. ஆகவே, இவருடைய கவிப் பெருமையை எல்லோரும் அறியத் தொடங்கினர். அப்போது 1940-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 24-ஆம் நாளில் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே நடைபெற்ற

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழாவிலே தே. வி. க்குக் கவிமணிப் பட்டம் கிடைத்தது. 1941-இல் திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பாடக் குழுவின் உறுப்பினராக நம் கவிமணி அமர்ந்தது தமிழுக்குச் சிறப்பாகும். 1942-இல் திருவிதாங்கூர் அரசாங்கப் பள்ளிப் பாடநூல்களைத் திருத்தும் குழுவிலே இருந்து பணியாற்றினர்.

நம் புலவர்மணிக்குக் கவிமணிப் பட்டங் கிடைத்த நாளிலிருந்து அங்கங்கே பாராட்டுக்கள் நடைபெறத் தொடங்கின. 1943-இல் செட்டிநாட்டுப் பெரியோர்களின் பாராட்டு நிகழ்ந்தது; கவிமணியை ஆத்தங்குடிக்கு அழைத்துப் பொன்னுடை போர்த்தினர். அப்போது செட்டிநாட்டு வேந்தர் சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் கவிமணியைத் தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்று பாராட்டினர்; பரிசாகப் பணம் நல்க விழைந்தனர். அதனைக் கவிமணியவர்கள் மறுத்தனர். பண்டைய நாளில் தமிழ் முடிமன்னரும் குறுநில மன்னரும் செல்வரும் தமிழ்ப்புலவர்களுக்கு வரைவின்றிப் பொருள் நல்கி ஆதரித்தனர். அதனால், தமிழ்ப் புலவர்களும் வறுமை நீங்கித் தம்மையாதரித்தவர்களைப் பாராட்டி நன்றியறிதலாலே தனிச்செய்யுட்களும் நூல்களும் இயற்றிப் புகழ்ந்தனர். அவ்வாறே, இக்காலத்துத் தமிழ்நாட்டின் ஒரு பகுதியான செட்டிநாட்டு வேந்தராலே நம் கவிமணி பாராட்டப் பெற்றார். எனினும், வேந்தரளித்த கொடையை இவர் மறுத்தது புலவர்களுக்கெல்லாம் பெருமிதத்தை நல்கக் கூடியது.

ஒருவர் தம் நிலையைக் கூறிக் கேட்கு முன்னரே குறிப்பறிந்து கொடுக்கும் கொடை உயர்ந்ததாம். அதனினும் உயர்ந்தது ஒன்றுண்டாம். அது அவ்வாறு

கொடுக்கும் கொடையைக் கொள்ளேனென்று மறுப்ப தாம். இவ்வாறு,

'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்(று) ; அதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று'

என்னும் புறநானூற்றுச் செய்யுள் (உ0ச) ஒன்று கூறு கிறது. நம் கவிமணியவர்கள் தமக்கு அண்ணாமலை மன்னர் கொடுத்த கொடையை மறுத்த செயல், அச் செய்யுளடி களை நினைவுறச் செய்கிறது.

செட்டி நாட்டு மன்னர் தமிழுக்குச் செய்த தொண்டு தமிழ் நாடறியும். அம் மன்னர் கவிமணியின் சிறப்புக் குத் தகுந்தவாறு பாராட்டி ஆயிரம் ரூபா பரிசும் கொடுக்க விழைந்தனர். ஆனால், நம் கவிமணி, அப் பொருளை ஏதேனும் அறவழியிலே செலவிட வேண்டி னர். ஆனால், விடாக்கண்டராக வெள்ளிக் கலங்களாக அப் பொருளை மாற்றிக் கவிமணியவர்களின் வீட்டுக்கு டி. கே. சி. முதலான தக்க சான்றோர்களின் வாயிலாக அண்ணாமலைச் செட்டியார் அனுப்பிவிட்டார். வேந்தரின் அன்புப் பிணைப்பினாலே கவிமணி அவைகளை ஏற்றாலும், அப்பரிசு தமிழுக்கே செல்லவேண்டுமென்று கருதித் திருவனந்தபுரம் கல்லூரியிலே ஆண்டுதோறும் பி. ஏ., வகுப்பில் தமிழில் முதன்மையாகத் தேறும் மாணவர்க் குப் பரிசு கொடுக்கும்படி தம் அன்னையார் பெயரால், வெள்ளிக் கலங்களின் மதிப்பு விலையை மூலப் பொரு ளாக அளித்து விட்டனர். இத்தகைய உயர்பண்பு எல்லோருக்கும் கிடைக்குமோ?

"வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்குச் சான்றாக விளங்கினார் நம் கவிமணி என்பதில் ஐயமில்லை.

அடுத்த ஆண்டில் மதுரையில் விளங்கிய சில அன் பர்கள் கவிமணியை வரவழைத்துப் பாராட்டுரை கூறி னர். அப்போது பாரதியார் பெயராற் கட்டப்பெற்ற கட்டடத்தைத் திறந்துவைக்கும் பணி, நம் கவிமணிக்குக் கிடைத்தது. தம் வாழ்நாளிலே வறுமையும் தமிழுந் துணையாகக் கொண்டு நாட்டுப்பற்றைத் தமிழ்மக்களின் உள்ளத்திலே அழுந்தப் பதியவைத்துப் பயனையறியாது மறைந்து, மறைந்த பின்னரே பாராட்டுரையும் மண்டப மும் கட்டடமும் பெற்ற பாரதியாரின் கட்டடத்தைத் திறந்துவைக்கும்போது கவிமணியின் உள்ளம் என் னென்ன எண்ணியதோ? பாரதியாரைப் பாராட்டி ஆத ரிக்காத தமிழுலகம், தன் தவற்றை யுணர்ந்ததனாலன்றோ கவிமணியையும், பிற கவிஞர்களையும் அவர்கள் வாழ் நாளிலேயே பாராட்ட விரைந்தது. இத்துறையிலே பாரதியார் பெறாத பேற்றைக் கவிமணி பெற்றார் என்பு தில் தவறில்லை. இக் கட்டடத்தைத் திறந்த காலம் 1944 செப்டம்பர் 11-ஆம் நாளாகும். அங்கிருந்து செல்லும் போது திருநெல்வேலியிற் கலையன்பர்களின் அன்புரை களிலே கவிமணி திளைத்தார்.

கவிமணிக்கு 70-ஆம் ஆண்டு பிறந்தது. தமிழன்பர் கள் நாகர்கோவிலிலே நீதிபதி உயர்திரு. ஐ. சத்திய நேசன் தலைமையிலே கவிமணிக்கு ஆண்டு விழா நடத் தினர். அப்போது, கவிமணியைப் பலரும் பாராட்டினர். 'கவிமணி மலர்' வெளியாயிற்று. அந்த ஆண்டிலே சூலை யில் 'தே. வி.-யின் கவிக் கனிகள்' வெளியாயின, 'குழந்தை', 'தாலாட்டு', 'கிளி', 'பசுவும் கன்றும்', 'முத்தந் தா' ஆகிய கவிக்கனிகள் குழந்தைகளின் கையினும் வாயி னும் சுவையூட்டின. அந்த ஆண்டிலேயே யோகி

சுத்தானந்த பாரதியார் கவிமணியின் வரலாற்றை எழுதினார். 'உமர்கயாம்' பாடல்கள் கவிக்குயில் வெளியீடாக வந்தன.

1947 இல் அருள்நிலைய வெளியீடாகக் 'காதல் பிறந்த கதை' தமிழ் நாட்டிலே பரவியது. அடுத்த ஆண்டிலே 'கவிமணி வரலாறு' வித்துவான் சதாசிவம் பிள்ளையவர்களால் வெளிவந்தது. அந்த ஆண்டிலே நாகர்கோவிலில் தமிழ்எழுத்தாளரின் மூன்ருவது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலே கவிமணி தமிழ் எழுத்தாளர்களை வரவேற்று நிகழ்த்திய வரவேற்புரை மிகச் சிறப்பாக அமைந்தது. அது 'கவிமணியின் உரை மணிகள்' என்ற நூலிலே இடம் பெற்றுள்ளது.

1950-இல் கன்னியா குமரியில் தமிழ்நாட்டின் தென்குமரி எல்லை மாநாடு நடைபெற்றது. அப்போது கவிமணி மாநாட்டைத் திறந்துவைத்து நிகழ்த்திய சொற்பொழிவு பொன்னெழுத்திலே பொறிக்கத் தக்கது. இதுவும் 'கவிமணியின் உரைமணி' யிலே பதிந்துள்ளது. அந்த ஆண்டிலே டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் தலைமையிலே தமிழன்பர்கள் கவிமணி இருக்குமிடத்திற்கு வந்து பொன்னுடை போர்த்தி வாழ்த்தினர். அண்ணமலைப் பல்கலைக்கழகம், நம் கவிமணியைக் 'கௌரவத் தமிழ்ப் பேராசிரிய' ராக அமரும்படி கேட்டுக்கொண்டது. ஆனல், தம் உடல்நிலை காரணமாக அதனை ஏற்றுக்கொள்ள இயலாதென்று கவிமணியவர்கள் கூறிவிட்டனர். திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் அந்த ஆண்டு நாகர்கோவிலுக்கு வந்தனர். அப்போது கவிமணியை வரவழைத்துப் பாராட்டிப் பொன்னுடை போர்த்தினர்.

1952-இல் கவிமணி பிறந்த ஊராகிய தேரூரில் வாழும் அன்பர்கள் 'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நினைவு நிலையம்' என்னும் பெயராலே பெரு மண்டபம் ஒன்று கட்டினர். இந்த ஆண்டிலே கவிமணியின் உடல் நிலை நோயால் தாக்கப்பெற்றது. இவருக்கு ஏற்கெனவே 'எக்ஸிமா', 'ஆஸ்துமா' என்னும் நோய்கள் இருந்தன. இவற்றுடன் சிறுநீர் போகவியலாமல் வருந்த நேர்ந்தது. இந் நோய் சத்திர சிகிச்சையால் விலகியது. 1953-இல் கல்கத்தாவில் பாரதி சங்கத்தினர் கவிமணியின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினர். 1954 மார்ச்சு 13-இல் திருவனந்தபுரம் வானொலி நிலையத்தார் கவிமணியைக் கண்டு உரையாடினர். அப்போது கவிமணியின் பாடல்கள் சிலவற்றைக் கவிமணியவர்களே பாடக் கேட்டனர்.

1931-க்குப் பிறகு கவிமணி, புத்தேரியில் தங்கியிருந்த காலத்திலிருந்து 1954-வரையில் எப்போதும் பாராட்டுக்களே நிறைந்திருந்ததைக் காணலாம். தமிழ்க் கவிக்கு இத்தகைய ஆதரவு தரத் தமிழகம் முன்வந்தது இவர் காலத்திலேதான்.

௪. திறமையும் பண்பும்

கவிமணியவர்களுக்குக் கவியியற்றுவதிலும் கல்வெட்டு ஆராய்ச்சி செய்வதிலும் பிற்காலத்தில் இருந்த திறமைக்கு இளமையிலேயே சான்றுகள் கிடைத்தன. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற பழமொழிக்கு மற்றோரைப் போலவே இவரும் சான்றாக விளங்கினார்.

பாடஞ் செய்யுந் திறன்

கவிமணிக்கு நினைவாற்றல் மிகுதி. இது எல்லோருக்கும் கிடைக்கும் செல்வமன்று. இக்கால மாணவர்களிற் பலரும் மறதியுடையவர்களாகவே இருக்கிறார்கள். இரண்டொருவரே ஒருமுறை அல்லது இருமுறை படித்தாலும் கேட்டாலும் பசுமரத்தாணிபோல் உள்ளத்திற் பதியும் பேறு பெற்றுள்ளனர்.

"வெண்பா இருகாலிற் கல்லானை, வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளென்(று)
எற்றோமற் றெற்றோமற் றெற்று."

'இருமுறை ஒரு வெண்பாவைப் படித்தாலும் கேட்டாலும் கல்லாதவனையும், ஒன்றைப் பார்த்தால் பார்த்தவாறே எழுதத் தெரியாதவனையும் பெற்றவள் தீவினையாட்டி' என்பது இப்பாட்டிலுள்ள கருத்து. ஒரு பாழுஞ் சத்திரத்திலே நள்ளிரவிலே தம்மை எற்ற வந்த பேயைப்பார்த்து ஔவையார் இத்தகைய கல்லாதவரையே நீ எற்றவேண்டும் என்று இப்பாட்டைக் கூறினாரென்று நம் நாட்டிலே ஒரு கதை வழங்குகிறது. கதை எப்படியாயினும் நினைவாற்றல் இல்லாதவர் இகழப்படுவது நம் நாட்டு வழக்கமென்று தெரிகிறது

கவிமணியின் நினைவாற்றலை விளக்க அவருடைய இளமை நிகழ்ச்சி ஒன்றைப் பாருங்கள் :

தேரூருக்கு அருகிலிருந்த வாணன்திட்டு மடத்திற்கு இவரும் இவருடைய மாணவத் தோழர்களும் அடிக்கடி வருவது வழக்கம். ஒருமுறை சிவராத்திரிக்கு மறுநாட் காலையில் அவ்வாறே இவர்கள் வந்தார்கள். அன்று சுசீந்திரம் பேரம்பலவாணர் மடத்திலிருந்து கட்டளைப் பிரசாதம் வந்திருந்தது. பொங்கலும் வடையும் அப்பமும் இவருக்கும் பிற சிறுவர்களுக்கும் நாவில் நீரூறச் செய்தன. கட்டளைத்தம்பிரான் எளிதிற் கொடுக்க விரும்பவில்லை. பள்ளிச்சிறுவர்களின் திறமையைக் காண, அதை ஒரு வாய்ப்பாக வைத்துக்கொண்டார். அவர் கையிலே தேவாரத்திரட்டு என்னும் நூல் இருந்தது. அதை மாணவர்களிடம் காட்டி, "இந்நூலிலிருந்து ஒரு பாடலை நான் படிப்பேன். பிறகு உங்களில் ஒருவனிடம் இந்நூலைக் கொடுத்து அச்செய்யுளையே ஒருமுறை படிக்கச் சொல்வேன். பிறகு, இதை வாங்கிக் கொண்டு பின்னும் ஒருமுறை நான் படிப்பேன். ஆக மூன்றுமுறை ஒரு பாடல் படிக்கப்பெறும். அவ்வாறு படிக்கப்பெற்ற பாடலை எவன் பிழையின்றி ஒப்புவிக்கிறானோ, அவனுக்கே ஒரு வடை அல்லது அப்பம் கிடைக்கும்," என்று போட்டிமுறை கூறினார். மாணவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனால், அப்போட்டியிலே வெற்றிபெற்ற சிறுவர், கவிமணி ஒருவரே. கவிமணிக்கே எல்லா வடைகளும் அப்பங்களும் கிடைத்தன. யாவரும் கவிமணியின் நினைவாற்றலை வியந்தனர். பிறகு, கவிமணி தமக்குக்கிடைத்த வடை முதலியவற்றை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்.

முன்னளில் அந்தகக் கவி வீரராகவ முதலியார் நினை வாற்றல் மிக்கவர் என்பர். இருபதாம் நூற்றாண்டிலும் பூண்டி - அரங்கநாத முதலியார் வியக்கத்தக்க நினைவாற் றல் உடையவராக இருந்தார். அவர் ஒருமுறை டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களிடமிருந்து, 'பூவாளூர்ப் புராணம்' என்னும் நூலை வாங்கிப் படித்தார். ஓரிரவி லேயே அந்நூல் முழுவதும் படித்துவிட்டு மறுநாள் திருப்பிக்கொடுக்கும்போது தமக்குப் பிடித்தமாக அந் நூலிலிருந்த சில செய்யுட்களை ஒப்பித்தார். மற்றொரு முறை மறுநாள் நடைபெறவேண்டிய ஆங்கில அவை யிலே ஒப்பிக்க நானூறு வரிகளையுடைய ஓர் ஆங்கிலச் செய்யுட்பகுதியைப் பாடஞ்செய்து தடங்கலின்றி ஒப்பித்தார். அவ்வாறே நம் கவிமணியவர்களின் நினை வாற்றலும் நாம் வியக்கத்தக்க முறையில் உள்ளது. நினைவாற்றல் அமைவது இயற்கைத்திறன்.

கவியியற்றல்

கவிமணியின் சிறுபருவத்திலேயே - கவியிலக் கணங் கற்பதற்கு முன்னரேயே - பாடுந்திறன் மிக்கிருந் தது. உரிமைக்கவிஞர் பாரதியாரைப் போலவே இவருக்கும் பாட்டியற்றுவதிலே ஆர்வம் இருந்தது. பிறர் எழுதிய செய்யுட்களைப் பார்க்கும்போது தாமும் இயற்றவேண்டும் என்று விழைவார்; எழுதுவார். இவ் வாறு எழுதிய பாடல்கள் எண்ணிலவாம். விளையாட் டாக இயற்றப்பெற்ற அவைகளெல்லாம் தொகுக்கப் பெற்றிருந்தால் நன்றாயிருக்கும்.

இவர் ஆங்கிலப் பள்ளியிலே படிக்கும்போது தாம் பாடிய ஒரு செய்யுளின் மதிப்பை அறிய விழைந்தார். அதற்காகத் தம் வகுப்பிலே மாணவர்களும் ஆசிரியரும்

வருமுன்னரே அச்செய்யுளை ஒரு காகிதத்தில் எழுதி ஆசிரியர் அமரும் நாற்காலியருகிலே ஒருவருமறியாமல் வைத்துவிட்டார். பின் எல்லா மாணவர்களும் வந்த பிறகு தாமும் சென்ருர். ஒரு மாணவர் அக்காகிதத்தைக் கண்டு எடுத்துப்பார்த்து, அப்போது வகுப்பிற்கு வந்த தமிழாசிரியரிடங் காட்டிஞர். அவர் அச்செய்யுளைப் புதியதென்றறிந்து சொல்லழகையும் பொருளழகையும் வியந்து, வகுப்பிலே படித்துக்காட்டிப் பாராட்டிஞர்; கவிமணி மகிழ்ந்தார். தாம் எழுதும் செய்யுளுக்குப் பாராட்டுக்கிடைத்தால், தாம் பெற்ற மகனைச் சான்ருே னெனக் கேட்ட தாயின் உள்ளம் போலன்ருே கவிஞ ருடைய உள்ளம் களிகொள்ளும்? தேரூர் அழகம்மை ஆசிரிய விருத்தம் இளமையிலேயே பாடப்பட்டதென் பதை முன்னரே அறிவோம்.

ஆராய்ச்சித்திறன்

இளமையிலேயே இவருக்குத் தென்னிந்திய வரலாற்ருராய்ச்சியிலும் கல்வெட்டாராய்ச்சியிலும் பற்று மிகுதி. கவியியற்றுதல் போலவே கல்வெட்டும் பிற்காலத்தில் மேம்பாடடையக் காரணமாயிருந்தது. இத்தகைய ஆராய்ச்சியிலே பெரிதும் ஈடுபட ஆதாரமாக இருந்த ஒரு நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது:

அக்காலத்திலே அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சித் துறையில் ஒருவர் அலுவல் பார்த்துவந்தார். திருவனந்த புரத்திலேயிருந்த அவர், தம் மனைவியின் உறவினர் வாழும் தேரூர்க்கு அடிக்கடி வருவார். அவரிடம் கவி மணிக்குப் பழக்கம் உண்டு. ஒருநாள் அவர் தம் சேவக னுடன் தேரூருக்கு வந்தார். அவர் கையில் ஒரு காகிதக் கட்டு இருந்தது. அது யாதென நம் கவிமணி வினவினர்.

அவர் சரியான விடைதரவில்லை. அவர் கல்வெட்டு ஆராய்ச்சி வேலையில் இருப்பவராதலால், கல்வெட்டு ஆராய்ச்சியிலுள்ள ஆர்வம் நம் கவிமணியை அதைத் தெரிந்துகொள்ளும்படி தூண்டியது. ஆகவே, கவிமணி அவருடைய மைத்துனனான ஒரு சிறுவனைக்கொண்டு அக்காகிதக் கட்டை வரவழைத்துப் பார்த்தார்; அதிலுள்ள ஆராய்ச்சி தகுதியற்றதாக இருந்ததைக் கண்டார். உடனே, சிறுகுறிப்பொன்றை எடுத்துக்கொண்டு கொடுத்துவிட்டார். அந்த ஆராய்ச்சியாளர் இரண்டொருநாள் தேரூரில் தங்கியிருந்துவிட்டுத் திருவனந்தபுரம் போய்ச்சேர்ந்தார். அங்கே 'திருவாங்கூர் டைம்ஸ்' என்னும் ஆங்கில வார இதழிலே தாம் பலநாள் முயன்று ஆராய்ந்த ஆராய்ச்சிக்கு மறுப்பொன்று தக்க ஆதாரங்களுடன் வெளிவந்திருக்கக் கண்டார். கவிமணி தம் புனைபெயரிலே அம்மறுப்புரையை எழுதியதால் அவரால் யாரென்றறிய முடியவில்லை. இவ்வாறு, இளமையிலேயே கவிமணி ஆராய்ச்சி வல்லுநராக விளங்கினார்.

கவிமணி தம் வாழ்நாளிலே கல்வெட்டாராய்ச்சி செய்தவண்ணமிருந்தார். இவருடைய கல்வெட்டாராய்ச்சி பலருக்கும் ஆதரவாக இருந்தது. '**காந்தளூர்ச்சாலை**' என்னும் ஆங்கில ஆராய்ச்சிநூல் எல்லோராலும் போற்றப்படுகிறது. தம் ஆராய்ச்சியின் பயனைப் பிறர் பெற்றுக் கட்டுரை முதலியன வெளியிடுவதில் இவர் வெறுப்புக் காட்டுவதில்லை. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பழமொழி இவர்தம் கடைப்பிடி. இவர்தம் ஆராய்ச்சித் திரு '**ஊருணி நீர் நிறைந்தற்று.**'

உரிமையுள்ளம்

கவிமணி உழைப்பினுல் வாழவேண்டிய நிலை ஏற்பட்டதாலேயே கல்லூரிப் படிப்பைவிட்டு ஆசிரியரானுர். தொடக்கப்பள்ளி ஆசிரியராக அடியெடுத்து வைத்த இவர் கல்விப் பொழிலெங்கும் உலவி, மாணவ வண்டுகளுக்குத் தமிழ்க்கல்வித் தேனைப் பருகுவிக்கும் வழிகாட்டியாக இருந்து படிப்படியாகக் கல்லூரி ஆசிரியராகப் பணிபுரிந்து அப்பொழிலைவிட்டு வெளிவந்தார்.

பொதுவாக ஆசிரியத்தொழில் வருவாய்குறைந்த தொழில்; இக் காலத்தே மதிப்புக் குறைந்த தொழிலாகவும் விளங்குகிறதெனலாம். பிற தொழில் கிடையாவிட்டாலே ஆசிரியர்களாகப் பலரும் வருகிறுர்கள். வந்த பிறகு, அத் தொழிலைக் காத்துக்கொள்ளத் தம் மனச் சான்றையெல்லாம் விட்டுவிட்டு, மேலிடத்தாரை மகிழ்விக்கும்படி, கூனிக் குறுகி நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறுர்கள். பிற துறைகளில் இருப்பவர்களைப்போல் இவர்கள் தாம் செய்த வேலையின் தொகுதியைப் பிறர் காண உருவாக எடுத்துக்காட்ட இயலாது. மாணவர்களாகிய நிலத்திலே கல்வியாகிய விதையை விதைத்துவிட்டு விளைவை எதிர்பார்க்கிறவர்கள். மேற்பார்வையாளர் கண்களிலே ஆசிரியர் உழைப்பு உருவாகக் காணப்பெறுவது சில நிமிடநேரத்திலே இயலாத ஒன்றுகும். ஆகையால், மேலிடத்தார் மனம் நெகிழும்படி இவர்கள் குழைவாக நடந்துகொள்ள வேண்டியவர்களாய்விட்டனர். பண்டைக்காலத்தே ஆசிரியருக்கிருந்த மேம்பாட்டுடன் இக்கால நிலையை ஒப்பிட்டு நோக்கினுல் நெஞ்சு வேகும். எல்லாப்படியாலுமெண்ணினும் ஆசிரியர் பொல்லாப்புடையராய்ப் போகின்றுர்.

ஆனால், இக்காலத்தும் சில ஆசிரியர்கள் ஆசிரியப் பணிக்குரிய மதிப்பைக் காத்து, நல்லாசிரியர்களாக விளங்குகின்றனர். நம் கவிமணி இத்தகைய நல்லாசிரியர் குழுவிலே சிறப்புறத் தக்கவராக இருந்தார்; எப்போதும் தம் மதிப்பைக் கைவிடாமலே இருந்தார். இவருடைய போக்கறிந்த மேலிடத்தார் இவருக்குப் பாராட்டும் நன் மதிப்பும் அளித்தனர்.

கவிமணி திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியைச் சார்ந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே தமிழாசிரியராக இருந்தபோது, பெண்கள் கல்லூரியிலே தமிழ் விரிவுரை யாளராகப் பணிபுரிந்தவர் விலகியதால், அப் பணிக்குக் கவிமணியை இருத்தவே கல்லூரித் தலைவியார் விழைந் தார். அந்த அம்மையாரின் வேண்டுகோளைக் கேட்ட கல்வித்துறைத் தலைவர், "தேசிகவிநாயகம் பிள்ளையவர் களை ஒரு சான்றிதழ் வாங்கியனுப்பச் சொல்லுங்கள்," என்றார். கல்லூரித் தலைவியார் அவருக்கு வேறொருவர் நற்சான்றிதழ் வேண்டியதில்லை யென்றும், தாம் சான் றிதழ் வாங்கிவரக் கூறினால், அவர் பிறரிடம் போய்க் கேட்க விழையாமல் வேலையை விட்டுவிட்டுப் போய் விடுவாரென்றும் கூறினார். கல்வித்துறைத் தலைவர் வியந்தார்; தமிழ்விரிவுரையாளராக இருக்க உத்தரவுங் கொடுத்தார். கவிமணியவர்கள் கல்லூரித் தலைவியாரிடம், "இவ் வேலைக்கு மாதர்கள் வரக்கூடுமானால், அவர்க ளுக்கே கொடுங்கள்; அவ்வாறு ஒருவரும் இல்லாவிட் டால், தங்கள் விருப்பப்படி நான் பார்க்கிறேன்," என்றார். என்ன நேர்மையான உள்ளம்!

கவிமணி தம் ஐம்பத்து மூன்றும் வயதிலேயே ஆசிரியர் பணியிலிருந்து விலகிவிட்டார். அவ்வாறு

விலகுதற்கும் மதிப்பைக் காத்துக்கொள்ளும் வகையே காரணமாக நேர்ந்தது. கவிமணி, பெண்கள் கல்லூரியில் இருக்கும்போது ஆண்கள் கல்லூரியிலே ஒருவர் விலகினர். அப் பணிக்கு இவரைக் கல்வித் துறைத் தலைவர் ஒப்புக்கொள்ளும்படி வினவினர். அந்த வேலை ஒரு மலையாள விரிவுரையாளரின்கீழ் அமைந்திருந்த தாகையால், இவர் வேண்டா என்றூர்.

கல்லூரித் தலைவர், "பெண்கள் கல்லூரியிற் பெண்களையே அமர்த்த வேண்டும் என்று பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது. ஆகையால், ஒருவேளை தனி ஊதியத்துடன் உங்களையே ஆண்கள் கல்லூரிக்கு அமர்த்தும்படி நேரும்," என்றூர்.

கவிமணி சிறிதும் தாழ்த்தாமல், "ஒரு வேளை என்பதென்ன? இப்போதே செய்யுங்கள். அதற்கு முன் என்னுடைய விலகல் விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள். பெண்கள் கல்லூரியில் பெண்களையே அமர்த்த வேண்டும். ஆனல், தங்கள் விருப்பத்தினலே தான் நான் இவ்வளவு காலம் பெண்கள் கல்லூரியில் இருந்தேனே அன்றி, நானே விரும்பி இருக்கவில்லை," என்று கூறி 'இராஜிநாமா' எழுத முற்பட்டார்.

தலைவர் வியப்படைந்து, "உங்களுக்கு விருப்பமில்லையாயின், ஆண்கள் கல்லூரிக்கு உங்களை அமர்த்தவில்லை. இப்போதிருக்கும் பணியிலேயே இருங்கள்," என்று கேட்டுக் கொண்டார். ஆனல், கவிமணியோ அந்த ஆண்டிலேயே கோடை விடுமுறைக்குப் பின் பிடிவாதமாக விலகிக் கொண்டார்.

அடக்கம்

உரிமையுளங் கொண்டிருந்தாலும் கவிமணி அடக்க முடையவர். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதை நன்கு கடைப்பிடிப்பவர். செட்டி நாட்டில் ஆத்தங்குடி யில் நகரவணிகர் குழுவினர் செட்டிநாட்டு மன்னர் அண்ணாமலைச் செட்டியார் தலைமையிற் கவிமணிக்குப் பொன்னாடை போர்த்து, வெள்ளிப்பேழையில் வாழ்த் துரை வைத்து அளித்துப் பாராட்டியபோது, கவிமணி கூறியவற்றை நோக்குக :

"ஒரு யானைக்கு அணிவிக்க வேண்டிய பொன்னா டையை ஓர் ஆட்டுக்குட்டிக்கு அணிவித்தார்கள் ராஜா சர். அவர்கள். இந்த ஆட்டுக்குட்டி இதைத் தாங்குமா என்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள்."

"ஆயுதங்களினால் உலகத்தை வெல்லலாம் என்று சில சண்டாளர்கள் நினைக்கிறார்கள். அது தவறு. அன் பினால் யாவற்றையும் வெல்லலாம். இப்பொழுது என்னை உங்கள் அன்பினால் விலைக்கே வாங்கிவிட்டீர்கள். ஏதோ நான் பித்தன்போல் பாடிய பாட்டுக்களை டி. கே. சி. அவர்கள் மெருகு கொடுத்து அழகு செய்து உங்களை ரசிக்கச் செய்கிறார்."

கவிமணியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவை நாகர்கோவில் அன்பர்கள் சிறப்புறக் கொண்டாடிய போது, தமக்கு அளித்த பாராட்டுரைக்கு நன்றி கூறும் முறையில், "நானோ சாதாரண மனிதன். இவற்றை என் உடலும் மனமும் தாங்கிக் கொள்ளுமா? நீங்களே யோசி யுங்கள். இந்தப் புகழ்மொழிகளை எல்லாம் கேட்டு என் உள்ளம் ஒருக்கால் பொங்கிப் பெருமிதங் கொண்டு

விடாதா? ஆனுல், நீங்கள் வாசித்தளித்தது உபசாரப் பத்திரம் என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆதலால், இதில் பொறிக்கப்பட்டவை எல்லாம் வெறும் உபசார மொழிகள் என்றே கருதி அமைகின் றேன்,” என்று கூறினுர்.

அன்பும் நட்பும்

“அன்பீனும் ஆர்வ முடைமை; அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு”

என்ற பொய்யாமொழிக்கும் நம் கவிமணி சான்ருனர். தம்மைக் காணவரும் தமிழன்பர்களைத் தம் அன்பும் ஆர்வமும் ததும்புகின்ற இன்னுரையாலும் உண்டியாலும் சிற்றுண்டியாலும் ஓம்பாத காலமேயில்லை யெனலாம். நோய் மிகுதியாலே வெளியிற் செல்ல முடியாமற் படுக் கையிலேயே இருக்கும் நிலையிலும், இந்த இனிய பண்பு கவிமணியிடம் காணப்பெற்றது. காணச் செல்லுவோர் புதியவராயிருப்பின் கவிமணியின் அன்புரையும் விருந் தோம்பும் பண்பும் கண்டு வியவாமல் இரார். கவிமணி யின் கலையுணர்வு சிறந்ததா, விருந்தோம்பும் பண்பு சிறந் ததா என்று தெரியாமல் திகைப்பர்; தமிழ்ப்பண்பு இதுதான் என்று தெரிந்து கொள்வர். இத்தகைய பண்பும், கவியுமே சிறந்த அறிஞர்களை யெல்லாம் அவருக்கு நட்பினராகச் செய்தன.

ஒரு சிற்றூரிலே சிறுவீட்டிலே அமைதியும் அடக்கமுமே துணையாகக் கொண்டு, புனை பெயர்களாலே தமிழ்ப்பணி செய்துகொண்டு நாடறியா மணியாக இருந்த இவரைத் தமிழுலகு நன்குணர்ந்து மற்ருேருக்குக் கிட்டாத பாராட்டுச் செல்வத்தை இவருக்குக் கிடைக்கும்

படி செய்யச் செய்த ரசிகமணி டி. கே. சி., பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை போன்ற நண்பர்களைக் கவிமணிக்கு அளித்தது கவிமணியின் அன்புருவமே எனலாம். இவருடைய முதுமைக் காலத்திலே வற்றியுலர்ந்த ஊனுடலை இருப்பிடமாகக் கொண்டு தமிழ் நாடெங்கும் ஒளியைப் பரப்பியவை கலையுணர்வும் அன்புரையுமே. தம்மிடம் வருவோரிடம் கவர்ச்சியுற உரையாடும் திறன் இவர்போல் வேறெவருக்கும் இல்லை.

இவரிடம் வரும் அன்பர்கள். காலங்கடப்பது தெரியாமல், இவர் உரையாடலிலே மயங்கித் தேனுண்ட வண்டெனக் கிடப்பர். இவருக்கும் அவர்களிடம் உரையாடும்போது தாம் முதுமையில் நோயால் வருந்திக் கொண்டிருக்கிறோம் என்பது மறந்துவிடும். இவரிடம் நட்புக்கொண்டிருந்தோர்களிற் காலஞ் சென்றவர்களில் டி. கே. சி., டாக்டர் ஆர். கே, சண்முகஞ் செட்டியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், நடுவர் சத்திய நேசன் என்போராவர். இப்போதிருப்போரிற் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை யவர்கள் கவிமணியுடன் நீண்ட நாள் பழகிய நண்பர். கவிமணியின் நூல்களுக்கெல்லாம் இவருடைய அணிந்துரை கவின் செய்கிறது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும் அவர் வாழ்க்கைத் துணைவியார் டி. ஏ. மதுரமும் கவிமணியைத் தம் தந்தையெனப் பாராட்டி வழிபட்டனர்.

கவிமணியவர்களின் நட்பின் சிறப்பை விளக்க அவருடைய வாழ்க்கையிலே நிகழ்ந்த மற்றொரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டவேண்டும். நண்பர்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர் கவிமணி என்பதை இது விளக்குகிறது.

கவிமணி திருவனந்தபுரத்தில் இருந்தபோது அடுத்த வீட்டில் இருந்த நண்பர் ஒருவர் ஒரு விருந்து நடத்தத் தம் வீட்டில் இடம் பற்றவில்லையாகையால், கவிமணியின் வீட்டிலே நடத்த விரும்பினர். கவிமணி தம் நண்பருக்குத் துணையாக உடனிருந்தார். விருந்தன்று விருந்தினர் எல்லோரும் வந்து சேர்ந்து விட்டனர். அப்போது கவிமணிக்கு ஒரு தந்தியைத் தந்திச் சேவகன் கொண்டு வந்தான். தந்தி யென்றால் நண்பர்கள் எல்லோரும் என்னமோ ஏதோ என்று கலங்கிவிடுவார்கள் என்றும், அது தீயதாக இருந்தால் விருந்து நடத்தும் நண்பருக்குத் தம் துணையில்லாமற் போய்விடுவதுடன் விருந்தே மகிழ்ச்சியற்றதாகப் போய்விடுமென்றும் எண்ணிய கவிமணியவர்கள் தந்திச் சேவகனைத் தனிமையில் அழைத்துச் சென்று, தந்தியை வாங்கி மறைத்து வைத்துக்கொண்டார்.

விருந்து முடிந்த பிறகு, தனிமையில் தந்தியைப் பிரித்துப் பார்த்தார். அது அவருடைய மருமகள் நாகர்கோவிலில் திடீரென இறந்துவிட்ட செய்தியாக இருந்ததைக் கண்டார்; தம் மனைவியிடமும் சொல்லிக்கொள்ளாமல் விரைந்து நாகர்கோவிலுக்குச் சென்றார். தந்தி வந்தவுடன் பலர் முன்னிலையிலும் அதனைப் படித்திருந்தால், என்ன நிகழ்ந்திருக்கு மென்று சிந்தித்துப் பாருங்கள். இந்நிகழ்ச்சி அவருடைய நட்பின் திறனையும் கலங்காத உள்ள நிலையையும் காட்டுகிறது.

நாட்டுப்பற்று

எந்தக் கவிஞருக்கும் நாட்டுப் பற்றில்லாமல் இராது. கவிஞருடைய கவிமலர் நாடாகிய கொடியிலேதான் மலரும். தாம் பிறந்த நாடாகிய நாஞ்சில் நாட்டிலே

வழங்கிவந்த மருமக்கள் தாயத்தை ஒழிக்கக் கவிமணி எடுத்துக்கொண்ட முயற்சி எண்ணுக் கடங்காத தன்மையதாகும். கவிமணி வரைந்த மருமக்கள்வழி மான்மியம் தமிழுலகிலே புரட்சியை உண்டாக்கும் புத்தமுதமாக விளங்குகிறது. 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்ற பாட்டைத் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெங்கணும் கேட்டுக் களிதுள்ளக் குதிகொள்ளுகிறோம். இப்பாட்டு நாட்டுப் பற்றின் அடையாளமே. தாம், ஓய்வெடுத்துக் கொண்டு புத்தேரியில் வாழ்ந்த காலமெல்லாம் இவர் செய்த பணி, பேசிய பேச்சு, நினைவு யாவும் நாட்டுப் பணியிலே தோய்ந்தவை. நாஞ்சில் நாடு தமிழ் நாட்டுடன் இணைய வேண்டுமென்று இவர் கொண்டிருந்த பேரவாவை 1950-இல் கன்னியாகுமரியில் நடைபெற்ற எல்லை மாநாட்டிலே இவர் நிகழ்த்திய வரவேற்புரையிலே காணலாம்.

ரு. ஊனுடல் பிரிவு

கவிமணிக்குக் குழந்தைகள் இல்லை. ஆனால், தமிழ் நாட்டுக் குழந்தைகள் எல்லோரும் அவருடைய குழந்தைகளே. உலகியலாகக் கூறுவோர்கள், 'மரபை விளக்கக் கால் முளை வேண்டும்,' 'புத்திரன் புத் என்னும் நரகத்திற் செல்லாமல் மீட்பவன்' என்று பலவகையாகக் கூறுவார்கள். உண்மையிலே நன்றாக நினைத்துப் பார்த்தால், மரபை விளக்குவோன் நன்றாகக் கல்வி யறிவாலும் ஒழுக்கத்தாலும் மேம்பட்டு, 'இவனைப் பெற இவன் பெற்றோர் செய்த தவம் என்னைகொல்?' என்று பாராட்டும் நிலையிலே இருத்தல் வேண்டும். தாம் பிறந்ததனாலே தம் குலம் மாசுற நடக்கும் பிள்ளைகளால் என்ன பயன்? மற்றும், ஒருவரை உலகம் அறியச் செய்வது அவருடைய செயலேயாகும்.

நாட்டுப்பணியாலாவது, வீரத்தினாலாவது, திறமையினாலாவது நாடறிய வாழ்ந்தோருக்கு அவர் மரபை விளக்க வேறு குழந்தை வேண்டியதில்லை. அவர் பெயரை நாடே நவிலும்; பாராட்டும்; அவர்தரும் எச்சமாகிய பண்பைப் போற்றிக் கைக்கொள்ளும். ஆகையால், கவிமணிக்குக் குழந்தைகள் அவருடைய தூய அழகிய இனிய, கவிதைகளே. அவை அவருடைய பெயரை மரபை உயர்வைப் பறைசாற்றுகின்றன.

கவிமணி தாம் எழுதிய கவிதைத் தொகுப்பாகிய 'மலரும் மாலையும்' என்னும் நூலைச் "செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்—கிந்த நூல் உரியதாய் என்றும் வாழ்கவே," என்று கூறி உரிமைப் படுத்தியது

நாடெங்கும் உள்ள குழந்தைகளிடம் உள்ள அன்பைப் புலப்படுத்துகிறது.

கவிமணியின் முதுமைக் காலத்திலே அவருக்கும் மனைவியார்க்கும் ஆதரவாக இருந்தவர் கவிமணியின் மனைவியாரின் சகோதரர் புதல்வர் குமாரசுவாமி யென்பவர். அவர் கவிமணியின் முதுமையிலே படுக்கையிலிருந்தவாறே நூலெழுதுதற்குத் துணைபுரிந்தார்; அவர் கூறுவனவற்றை எழுதினர்; அவருக்கு வேண்டிய பணிகளை யெல்லாம் நன்கு புரிந்து மகனில்லாக் குறையைப் போக்கினர். கவிமணியும் 1950 அக்டோபரில் தம் நூல் உரிமையை அவருக்கே அளித்து ஆதரித்தார்.

எல்லாவகையாலும் உயர்ந்த குறிக்கோளும் சிறந்த கவிதைத் திறனும் ஆராய்ச்சி வன்மையும் உடையவராய் நாட்டின் மணியாய் விளங்கிய கவிமணியவர்கள்-' இனிய தமிழில், செந்தமிழில், எவர்க்கும் ஆசை தரும் தமிழில், கனியும் கண்டும் கனிந்தொழுகு கவி செய்துள்ளம் மகிழ்வித்த' கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் - 1954 செப்டம்பர் 26-ஆம் நாள் (மாளய அமாவாசையன்று) காலையில் நெற்றி நிறைய நீறணிந்து, பக்கத்திருந்தவர்களுக்குத் தரத்துக்குத் தக்கவாறு வாழ்த்துக் கூறித் திருவாசகத்தைப் படிக்கச் சொல்லி மிகுந்த ஈடுபாட்டுடன் அதனைக் கேட்டுக்கொண்டிருந்தார். பிற்பகல் 12-45 வரை அறிவு மயங்கவில்லை. திருவாசகத்தில் அதிசயப் பத்தில், 'பொத்தையூன் சுவர்' என்று வரும் பாடலில் உள்ள 'அசும்பு' என்ற மொழிக்குப் பொருள் கூறினர். பின்னர்ச் சிறிது சிறிதாக நினைவு மயங்கிக் கண்மூடி 2-30 மணிக்குத் தில்லைக்கூத்தன் திருவடியிலே கலந்தார்.

எழுபத்தெட்டாண்டுகள் தமிழ் நாட்டில் உலவிய கவிமணியவர்களின் ஊனுடலே மறைந்தது. அவருடைய கவிதையுடல் முன்னிலும் ஒளிவீசித் தமிழ் நாடெங்கும் சிறுவர் சிறுமியர் முதலாகக் கற்றோர் கல்லார் என்ற பாகுபாடின்றி எல்லோருடைய உள்ளத்திலும் அழகிய காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. ஊனுடலாலே புத்தேரி மக்களுக்குப் 'பாட்டையா'[1] ஆக விளங்கியவர் கவிதையுடலாலே தமிழ் நாடெங்கும் 'பாட்டையா'[2] ஆக விளங்குகிறார்.

நாடெங்கும் வானொலி வாயிலாகக் கவிமணியின் பிரிவு கேட்டு வருந்தியது.

நாஞ்சில் நாடடைந்த துயரம் மிகுதி. கவிமணியின் பிரிவுக்காக நாகர்கோயிலிலும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் உள்ள மக்கள் பெருந்திரளாக வந்து கவிமணியவர்களைப் பார்த்துத் தம் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர். கவிமணியவர்களின் இறுதிச் சடங்கிலே பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களும் மற்றும் பலரும் கலந்து தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தனர். நாகர்கோயில் நகரசபையின் மைதானத்திலே கூடிய பெருங்கூட்டத்திற் பல அறிஞர்கள் இரங்கலுரை கூறினர்.

திருவாங்கூர் இராச்சிய முதலமைச்சர் பட்டம் தாணுப்பிள்ளையவர்கள் வெளியிட்ட இரங்கலுரையில் கூறியது :

"கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் மறைவிற்காக நான் வருந்துகிறேன். அவருடைய உயர்ந்த கருத்துக்களும், எழுத்து வன்மையும் தமிழர்களுக்கேயன்றித் திருவாங்கூர் இராச்சியத்திலுள்ள எல்லோருக்

1. பாட்டனார். 2. பாட்டுப்பாடும் ஐயா.

கும் உரியவை. கவிமணி மக்களிடையே ஒற்றுமையை யும், அன்பையும் பரப்பிவிட்டுத் தம் இருப்பிடத்தை அடைந்துவிட்டார். திருவாங்கூரிலும் மற்றும் பாரத நாடெங்கிலுமுள்ள மக்கள் கலாசாரங்களிலே மாறுபட்ட போதிலும், அவர்களுடைய மனத்தில் கவிமணியின் நினைவும், உயர்ந்த பண்பும், நிலைபெற்ற புகழும் எப் போதும் இருக்கும்."

28-9-54-இல் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலே கவிமணிக்கு இரங்கற் கூட்டம் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி 29-9-54-இல் சுதேசமித்திரன் இதழில் வெளி வந்தது. அதிற்கண்ட குறிப்புக்களே இங்குக் கொடுப் பவை.

தலைவர் கூறியது:

"கவிமணியவர்கள் தமிழ்மொழிக்குச் செய்த பணி மறக்க முடியாததாகும். அவர்களது உடல் நம்மிடையே இல்லாவிட்டாலும், அவருடைய கவிதைகள் உள்ளன. அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். இதுவே நாம் அவருக்குச் செய்யக் கூடிய பிரதியுபகாரமாகும்."

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் கூறியது:

"கவிகளில் பல தினுசு உண்டு. பாரதி காட்டுப் புளியமரம் போன்றவர்; கரடு முரடு. ஆனால், உயிர் இருக்கும்; புளிப்பு, உரம் இருக்கும். சில கவிகளின் கவி கள் நகாசு வேலை மிகுந்திருக்கும். அழகு அன்பு மிளிரும், அத்தகைய கவி தேசிக விநாயகம் பிள்ளை.........

உள்ளத்து ஒளி, கருத்து கவியில் புக வேண்டும். அதிலுள்ள தர்மம், உண்மை பல பேருக்கும் ருசிக்கும்

படியாய் இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்கள் சிறந்தவை; குழந்தைகள் உட்பட எல்லோரும் படிக்கத் தகுந்தவை."

மற்றும் பல அறிஞர்களும் கவிமணிக்காக இரங்கலுரை நிகழ்த்தினர்.

தமிழ் நாட்டிலே உலாவும் நாளிதழ், வார இதழ், திங்களிதழ் ஆகிய யாவும் கவிமணியவர்களின் பிரிவுக்கு வருத்தம் தெரிவித்து, அவருடைய உருவப் படத்தையும் வரலாற்றுக் குறிப்பையும் வெளியிட்டன. பல அறிஞர்கள் தம் வருத்தத்தையும் தாங்கள் கவிமணியுடன் பழகிய பேற்றையும் விளக்கி இதழ்களிலே வெளியிட்டனர்.

௬. பாராட்டுக்கள்

உரை

ஒருவருக்கு அவருடைய ஊனுடம்பினும் புக ழுடம்பே மேம்பட்டது. ஊனுடம்பிலே காணப்படாத பண்புகள் பலவும் புகழுடம்பிலே காணப்பெறும். 'கவி மணியை 1931 முதல் தமிழுலகம் அறியத்தொடங்கியது. அறிஞர் பலரும் அவரை நாட்டுக்கு அறிமுகப்படுத்தத் தொடங்கினர்' என்பதை முன்னரே அறிவோம்.

யோகி சுத்தானந்த பாரதியார் தமக்கும் கவிமணிக்கும் உள்ள தொடர்பைத் தாம் எழுதிய கவிமணியின் வர லாற்றிலே குறிப்பிடுகிறார். அதில் ஒரு பகுதி :

"அவர் பாடல்களை முதன் முதல் நான் குமரனில் கண்டு மகிழ்ந்தேன். பிறகு, ஞானவித்யா என்ற பத்திரிகை யில் சில மொழிபெயர்ப்புக் கவிகள் வந்தன. பின்னால் கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், லக்ஷ்மி, தமிழ் நேசன் முதலிய பத்திரிகைகளில் தே. வி. இன் பாட்டைக் கண்டுகளித்தேன். என்னையும் அவரையும் ஒன்று சேர்த்தது தமிழ்ப்பணிதான். அன்பு நிலையத் தார் எனது அன்பு மலர்களை முதன் முதல் அவருக்கே அனுப்பி வந்தனர். "சுத்தானந்த அடிகளின் உருவத் தைப் படத்தில் கண்டேன்; உள்ளத்தை நூலில் கண் டேன்." என்று போற்றி எழுதியிருந்தார்கள்......'சிலம் புச் செல்வி' ஆராய்ச்சியின்போது அவரது நுண்ணறி வைக் கண்டு வியந்தேன்......' கவிக்குயில் பாரதியார்' நூல்களைப் பார்வையிடும் பணிகளில் இருவரும் பங்கு கொண்டோம்.....என் கண்முன்பே ஒரு தமிழ்க் கவியைத் தமிழர் போற்றிக் காணும் புண்ணியத்தை அடைந்தேன்.

பிறகு, கலைமகளில் இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்களின் ஆவேசமான புகழுரை வந்தது. அதுவே தேசிக விநாயகம் பிள்ளையின் கவிக்குச் சிறந்த சன்மானமாகும். அன்று முதல் தேசிக விநாயகம் பாடல்கள் தமிழகத்தில் உலாவிப் பெரும் புகழ்பெற்று விளங்குகின்றன.

"அன்புக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களுடன் என் உள்ளம் பல்லாண்டுகள் பழகியுள்ளது... தேசிக விநாயகம் பிள்ளையை நினைக்கும்போது கொஞ்சுங் குழந்தையின் அன்பே என்முன் நிற்கிறது. ஆதலால் நான் அவரை, **'அன்புப்புலவர்'**, **'அன்புக் கவிமணி'** என்கிறேன். அவர் உள்ளம் அன்பு; அவர் சொற்கள் அன்பிற் குழைத்த அமுதம்; அவர் கவிதைகள் கருணையிற் பூத்த அன்பிசை. அவரைக் கவிமணி என்பதைவிட அன்புமணி என்பதே பொருந்தும். அவர் உள்ளத்தில் ஓர் அன்புக் குழந்தை,

'பூமகளின் புன்னகை போல் பூத்திடுவோமே—கம்பன்
பாமணக்கும் தமிழினைப் போல் பரிமளிப் போமே'

என்று பாடுகிறது. தே. வி. இன்று எழுபது வயது தாத்தா (1945-இல்); ஆனால், உள்ளே ஏழு வயதுக் குழந்தையாகவே இருக்கிறார்.......தமிழ்ப்பணியென்றால், அவருக்கு வாலிபம் திரும்பிவிடும். 'சிலம்புச் செல்வம்' என்ற நூலை நான் எழுதியபோது, அவர் படுக்கையில் இருந்தார். அதை நான் அவர் பார்வைக்கு அனுப்பத் தயங்கினேன். 'தயங்காமல் அனுப்புங்கள்; தாங்கள் செய்யும் தமிழ்ப்பணியில் எனக்கும் பங்குண்டல்லவா?' என்று தாயகம் பேசி என் கையெழுத்துப் பிரதிகளை முற்றும் பார்வையிட்டு அனுப்பினார்."

வித்துவான் செ. சதாசிவம்பிள்ளையவர்கள் எழுதிய கவிமணி வரலாற்றிற்கு எழுதிய முன்னுரையிலே **பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார் :**

"கவிமணியின் தமிழ் என்றும் மனத்தில் போற்றி வைக்கத் தகும் பொற்களஞ்சியமாக உள்ளது. நல்ல தமிழ்; நம் மூதாதையரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ்; கற்றார்க்கும் கல்லார்க்கும், நகரத்தினருக்கும் நாட்டுப்புறத்தினருக்கும் ஒன்று போலவே இனிக்குந் தமிழ்....

"கவிமணியின் வாழ்க்கையின் அழகுதான் என்ன! வாழும் இடம் புத்தேரி; ஒரு சிற்றூர்; நாகர்கோவில் நகரத்திற்குச் சுமார் 2 மைல் வடக்காக உள்ளது; வயல் நிலங்கள் முற்றும் சூழ்ந்தது; நாகர்கோவிலிலிருந்து சென்று திரும்பும் 'பஸ்' அரவத்தைத் தவிர வேற்றரவம் இல்லாதது; அமைதி நிரம்பிய ஊர்; எளிமை எழில்கொண்டிருக்கும் ஊர். ஆசிரமம் என்று சொல்லத் தக்க சௌகரியமான ஒரு சிறு வீடு. இங்கே எத்தகைய உத்தம புருஷர் வசித்து வருகிறார்! தம் அருமை மனைவியும் அன்புடை மருகர் குமாரசுவாமிப் பிள்ளையும் அவர் மனைவியும் செய்துவரும் அன்புப் பணிவிடைகளை ஏற்று, அமைதி நிரம்பிய உள்ளத்துடன், எளியராய் இவர் வாழ்கின்றனர். இவர் வாழ்விலே அவா, வெகுளி முதலியன அறவே கிடையா. தம்மை விரும்பி வரும் மனமொத்த அன்பர்களோடு உறவு, அவர்களுடன் சல்லாபம், அவர்கள் இல்லாத சமயங்களில் ஆங்கிலக் கவிஞர்களின் கவிதையுறவு, கல்வெட்டு, சரித்திரம் முதலியவை பற்றிய ஆராய்ச்சி, தமிழ்க் கவிதையின் கூட்டுறவு, அன்பிழைத்த மனத்தோடு ஆற்றும் உபகாரச் செயல்கள்—

இவைகளால் கவிமணியின் தினசரி வாழ்வு நிரம்பி இனிதே செல்கிறது.

'நல்லாறெனினும் கொளல் தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று'

என்ற தமிழ் வேதக் கொள்கையைக் கடைப்பிடித்தவர். எவரும் எவ்வகையிலும் துன்புறச் சகியாத உள்ளம் படைத்தவர்."

கவிமணியைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்திய டி. கே. சி. அவர்கள் தம் ஒரே மகனார் தீத்தாரப்பனைப் பிரிந்து வாடியபோது, கவிமணியவர்கள் ஆறுதற் கடிதம் ஒன்று எழுதினார். அதற்கு விடையாக டி. கே. சி. அவர்கள் 25-3-1941-இல் எழுதிய கடிதத்திற்கண்ட பகுதி:

"தங்கள் உள்ளத்தின் கனிவு வெண்பாவிலே தெளிந்து கிடக்கிறது. தமிழ் உலகில் இந்த வெண்பா எழுத ஒருவர்தான். அது தாங்கள்தான். வேறு யாருக்கும் கவி என்பது வருகிறதில்லையே!

"நண்பர்கள் எல்லாரும் கவிதையில் உள்ள சோக ரசத்தைச் சுவைத்து வியந்தார்கள். எனக்கு என்னவோ ஒரு தமிழ்க் கவி உதயமாகி வருவதைப் பார்ப்பதில் அளவிறந்த ஆனந்தம். கவிக்கு உயிரையே கொடுக்கலாம் என்பது நம்மவர் மரபு. தங்கள் கவி உயிரைக் கொடுத்து வந்தமாதிரி இருக்கிறது.

"கீட்ஸ் சொன்னார், 'Truth is Beauty' என்று. தங்கள் பாடல் அதற்குத் தக்க இலக்கியம் என்று எல்லாருக்குந் தெரிகிறது. கல்கி, ராஜாஜி வெளியில் (சிறைக்கு) இருந்தால், தங்கள் வெண்பாவை ரொம்ப அநுபவிப்பார்கள்.

ஆசிய ஜோதியில் தங்கள் கவியை (மகனை இழந்த தாய்) வாசித்தேன். தாங்களும் தமிழுமாகச் சேர்ந்து எவ்வளவோ ஆறுதலைத் தருகிறீர்கள்.''

29-9-54-இல் இராஜாஜி மண்டபத்தில் கவிமணிக்கு நடந்த இரங்கற் கூட்டத்திலே இராஜாஜி அவர்கள் கவிமணியின் இல்லற வாழ்வின் சிறப்பைக் குறிப்பிடும் பகுதி:

''கவிமணியின் இல்லற வாழ்க்கை அற்புதமானது. அவர் மனைவி நிமிர்ந்து நிற்க முடியாமல் இருந்தார். முதுகு உடைந்த நிலை! என் ஊர் பாஷையில் 'டேக்கி டேக்கி' நடப்பது என்பார்கள். அப்படி மனைவி இக்காலத்தில் வாய்த்தால், இருவரும் கையொப்பமிட்டுக் கச்சேரிக்குச் சென்று விவாகரத்து செய்து விடுவார்கள், அந்தக் காலத்தில் இந்தக் கருத்தே எழாது. அது மட்டுமல்ல. கவிமணி தம் மனைவியை அறிமுகப்படுத்திய போது, 'இவர்தான் என்னைப் பாதுகாப்பது; எனக்கு எல்லாம் செய்வது' என்று கூறினார். அந்தக் காட்சி இன்னும் என் கண்முன் நிற்கிறது. நான் கற்ற படிப்பு அது ஒன்றே போதும் எனத் திருப்தி அடைகிறேன். அப்பேர்ப்பட்ட குடும்பம் இன்று சிதறிப்போய்விட்டது என்று வருத்தமாயிருக்கிறது.'

இதுவரை காட்டப் பெற்ற பாராட்டுக்களிலே கவிமணியை யோகி சுத்தானந்த பாரதியார் 'அன்புக் கவிமணி' என்கிறார். கவிமணியின் தமிழ்த் தொண்டார்வத்தைப் பாராட்டுகிறார். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கவிமணியின் எளிய வாழ்வையும், அமைதி நிரம்பிய உள்ளத்தையும் தமிழின் இனிமையையும் குறிப்பிடுகிறார். டி. கே. சி அவர்கள் கவிமணியைத் தவிர வேறு யாருக்

கும் கவிதை என்பதே வருகிறதில்லை என்கிறார். ராஜாஜி அவர்கள் கவிமணியின் இல்லற வாழ்வின் தூய்மையைக் குறிப்பிட்டுத் தாம் அதை ஒரு படிப்பினையாகக் கொண்டதாகக் கூறியிருக்கிறார். நாம் இவை யாவும் கவிமணியின் புகழுடம்பு என்று கொள்வோம்.

பாட்டு

இனி, இப் பாராட்டுரைகளுடன் கவிமணியவர்களைச் சிறப்பித்த பாராட்டுப் பாட்டுக்களின் பகுதிகள் சிலவற்றைப் பார்ப்போம் :

நாமக்கல் கவிஞர் :

" மாசிலன் என்ற வாழ்வும் மதிநலத் தெளிவாம் எங்கள்
தேசிக விநாய கத்தின் திகழ்தரும் சிறப்பை யாரும்
பேசிடும் பொழுதி லெல்லாம் பெருமிதம் என்னுள் ஊறும்;
கூசிடும் எனது சொற்கள் குணமிகும் அவற்கு முன்னால் "

" துரும்பென மெலிந்த தேகம், துலங்கிடும் குளிர்ந்த பார்வை,
இரும்பினும் வலிய உள்ளம், இனியவே செய்யும் எண்ணம்,
பரம்பொருள் நினைவே காட்டும் பாரெலாம் பரந்த நோக்கம்,
கரும்பினும் இனிய சொற்கள் கவிமணி வடிவ மாகும்."

பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை :

" தேனைப் பாலை முக்கனியைத் தெவிட்டா அமுதைச் சிந்திக்கும்
ஊனம் இல்லா உன் கவியை உன்னும் போதென் உள்ளந்தான்;
வானோர் நாஞ்சில் நாட்டில்வாழ் வண்மைப் புலவர் ! வையத்துத்
தானோர் இல்லாத் தமிழேபோல் தழைத்து நீடு வாழுதியே."

அழ. வள்ளியப்பா :

" தேனொழுகக் கவிபாடும் தேசிக விநாயகனே !
நானுனது கவிபாடி நாடோறும் மகிழுவனே "

அபிநவ காளமேகம் அனந்த கிருஷ்ண ஐயங்கார்:

"தேசிக விநாயகனும் சீரியனை நாஞ்சிற்சு
தேசிகவி நாயகனுத் தேர்ந்துகந்தேன்—காசினியில்
வாடலுரு தென்றும் மணக்கும் மலர்மாலைப்
பாடல் முழுவதுமே பார்த்து"

மேலேகாட்டிய செய்யுட்கள் கவிமணியின் உண்மையுருவையும் பண்பையும் விளக்குகின்றனவேயன்றிப் புனைந்து கூறியவையல்ல இதனைக் கவிமணியின் கவிதை நூல்களிலே காண்போம். அனந்த கிருஷ்ண ஐயங்கார் அவர்கள், 'தேசிக விநாயகனுஞ் சீரியனை நாஞ்சிலில் தோன்றிய சுதேசி கவி நாயகனுகத் தேர்ந்து உகந்தேன்' என்கிருர். எல்லோரும் அவ்வாறுதானே கொள்கிறோம்?

II. நூல்கள்

க. கவிதை நூல்கள்

கவிமணிக்குப் புகழுடம்பைக் கொடுத்தவை—தமிழர் உள்ளத்திலே அவரை ஒளி வீசி வீற்றிருக்கச் செய்தவை—கவிமணியின் கவிதைகளே என்பதை அறிவோம். நாம் அவருடைய கவிதைகளைக் காணுமுன் கவிதையைப்பற்றி அவர் கொண்ட கருத்தை அறிந்து கொள்வது அவர் கவிதைகளைப் படிக்க வழி காட்டும்.

இங்கே குறிப்பிடுவது கவிமணியினுடைய மருகர் கே. குமாரசுவாமி யவர்கள் கார்த்திகைத் திங்கள் கலைமகளில் எழுதியதிற் கண்ட பகுதிகள் :

"கவிதையைப்பற்றி அவர்களிடத்தில் விளக்கம் கேட்கும் அன்பர்களுக்கு அவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். 'கவிதை என்பது இன்பம். இன்பத்தைத் தரக்கூடியதுதான் கவி. சன்மார்க்க போதனை செய்வதே கவியின் நோக்கம் என்று கொள்ள முடியாது. ஒரு நல்ல கருத்தை அழகாகவும் இன்பம் தரக் கூடிய விதத்திலும் சொன்னால், அது கேட்பவர் மனத்தில் நன்ருகப் பதிந்துவிடும். மருந்தைச் சீனியில் சேர்த்துக் கொடுப்பதுபோலக் கவிதை இருக்க வேண்டும். எதைச் சொல்கிறதென்பதல்ல கவியின் பிரதானம். எப்படிச் சொல்லப்படுகிறதென்பதுதான் கவியின் விசேஷம்,' என்று கூறுவார்கள்.

"இளங்கவிகள் பலர் தாம் எழுதியுள்ள கவிதைகளைக் கவிமணியிடம் காட்டி அபிப்பிராயம் கேட்பார்

கள். 'கவிதை அழகாக அமைந்திருக்கிறது. கருத்து நன்ருக இருக்கிறது. ஆனுல், கவிதைக்குரிய இலக்கணம் சரியாக அமையவில்லே. ஆதலால், கவிக்குரிய இலக்கணத்தை நன்ருகப் படித்த பிற்பாடு கவியெழுதத் தொடங்குவதுதான் நல்லது. முயற்சி செய்தால் சிறந்த கவிஞராக வரமுடியும்,' என்று கவிமணி அன்புடனும் ஆதரவுடனும் கூறி ஊக்கம் ஊட்டுவார்கள். இலக்கண வரம்பிற்குப் புறம்பான கவிதைகள் எழுதுவது கவிமணிக்குச் சிறிதும் விருப்பம் இல்லாத ஒன்ருகும். 'கவிஞனது கருத்தை வெளியிடுவதற்கு எதுகை மோனே முதலிய தளேகள் இருத்தல் கூடாது; அவற்றைத் தகர்த்து எறிபவனே புரட்சிக் கவிஞன் என்று பலர் சொல்வதையும், எழுதுவதையும் கேட்டும் படித்தும் இருக்கிருேம். அப்படி அவர்கள் சொல்வதன் உண்மையை ஆராய்ந்தால், கவியிலக்கணத்தைப் படியாத குறையும், இலக்கண வரம்பிற்கு உட்பட்ட கவிதை எழுதுவதற்கான திறமைக் குறைவுந்தான் காரணம் என்பது உறுதி. எத்தனேயோ பேர் இதற்கு முன்னும், இப்பொழுதும் இலக்கணப் பிழையின்றிக் கவிதைகள் எழுதிவந்திருக்கிருர்களே, அவர்களுக்கெல்லாம் இலக்கணம் விலங்காக இல்லேயல்லவா? உயர்ந்த கவிஞனுக்கு இலக்கணம் தாதிப் பெண்போல ஏவல் செய்யும்; அவனது மனத்தில் தோன்றிய கருத்துக்குத் தக்க சொற்கள் தங்கு தடையின்றி வந்துகொண்டேயிருக்கும்,' என்பது கவிமணியின் முழு நம்பிக்கை."

இவ்வாறு கவிமணியின் கருத்தென்று திரு. கே. குமாரசுவாமி அவர்கள் எழுதியுள்ளதை நோக்குமிடத்துக் கவிமணி இலக்கண வரம்புடன் கவிபாடுவதுதான் அழகாகும் என்று நினேப்பதாகத் தெரிகிறது.

"உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெளிந் துரைப்பது கவிதை."

என்னும் கவிமணியின் கவிதைப் பகுதி கவிதையின் இலக்கணத்தை ஒருவாறு விளக்குகிறது எனலாம்.

மற்றும், 'தனது மனத்தில் தோன்றிய உண்மைகளை வெளியிட வேண்டியது கவிஞனின் கடமை. மக்களுக்குப் பயன்படுமானல் பயன்படட்டும். அன்றேல் கால வெள்ளத்தில் அழிந்து போகட்டும்' என்பது கவிமணியின் கருத்தென அவர் மருகர் குறிப்பிடுவது கவிஞனின் உணர்ச்சி எப்படி இருக்குமென்பதைக் காட்டுகிறது. அவர் கூறியவாறு கவிமணியின் கவிதைகள் மக்களுக்குப் பயன்படக்கூடியவைகளாக, மாசற்ற முழுமணிகளாக நம் நாட்டிலே ஒளிவீசிக்கொண்டிருக்கக் கூடியவை.

கவிமணிக்குக் குழந்தைகளிடத்திலே விருப்பம் மிகுதி. ஆகவே, அவர் தம் கவிதைகளைச், 'செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு' உரிமைப்படுத்திஞர். குழந்தைகளின் உள்ளம் தூயது; இன்பதுன்ப உணர்ச்சிகள் படியாதது. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' ஆகப் படியும் என்பது இக்கருத்தைக் கொண்டு கூறப்பட்ட பழமொழி. ஆகவே, சிறுவர் சிறுமியருள்ளத்திலே கவிமணியவர்களால் வளர்க்கப்பட்ட கவிதைப்பயிர் அவர்கள் பெரியவர்கள் ஆனுலும் தழைத்தோங்கிப் பயன் தந்து கொண்டேயிருக்கும். மற்றும், 'குழந்தைச் செல்வம்' ஆக அவர்களால் தரப்பட்ட கவிதைகள் பெரியோர்களுக்கும் பெருநிதியாக இன்பம் பயப்பன.

1. குழந்தைச் செல்வம்

இப் பகுதியில் மழலைமொழி, இயற்கை இன்பம், காட்சி இன்பம், கதைப் பாட்டு, பஞ்சாமிர்தம் என ஐந்து நிதிகள் உள்ளன.

மழலைமொழி

மழலைக் குழந்தை நம் கவிமணிக்குக் கண்ணும் மணியும் கட்டிக் கரும்பும் வண்ணக் கிளியும் வாசக் கிளியும் தேனும் பாலும் தெவிட்டாக் கனியும் மானும் மயிலுமாகக் காட்சியளிக்கின்றது. தாலாட்டுப் பாட்டுத் தமிழ் நாட்டுப் பரம்பரைப் பாட்டேதான். ஆனால், கவிஞரின் கற்பனையோவியம், குழந்தையைத் துயிலினின்றும் எழுப்பும் பாட்டிலே குழந்தைகளின் கண்ணுக்கினிக்கும் ‘காகம் பறக்குது’ ‘கறவைப் பசுவை அதன் கன்று சுற்றித் துள்ளுது’ போன்ற காலைக் காட்சிகள் காணப் பெறுகின்றன. ‘அரசே! எழுந்திரு’ என்பது ஆண் குழவிக்கும், ‘காலைப் பாட்டு’ என்பது பெண் குழந்தைக்கும், துயிலெழுப்பும் பாட்டாக விளங்குகின்றன. காகம், கோழி, நாய், கிளி முதலியவற்றைக் குழந்தைகள் கூப்பிட்டு அவற்றுடன் பேசும் அழகை எவ்வாறு எடுத்துக் காட்டுவது! சிறுவன் கூண்டுக் கிளியை, ‘ஏன் சுற்றிப் பார்க்கிறாய்? குறைகளேதும் உண்டோ?’ என்று அன்புடன் வினவுகிறான். கிளியோ, ‘எனக்குச் சிறகைப் படைத்த இறைவன் அறியாத குழந்தையோ? சோலை எங்கும் கூவி நிதம் சுற்றித் திரிதல் வேண்டும்’ என்று குமுறுகிறது.

பச்சைப் புல்லைத் தின்னும் பசுவுக்கு வெள்ளைப் பால் தரும் ஆற்றல் எப்படி உண்டாயிற்றென்று சிறுவர் வியக்கின்றனர். தன் கன்றை நக்கிக் கொடுத்து உயிரூட்

டும் மாயம் அவர்களைக் கவர்கிறது. தோட்டத்தில் மேயும் பசுவும், அதன் அண்டையில் விளையாடும் கன்றும் சிறுவர்களுக்கு மட்டுமா, நமக்கும் இனிய காட்சியை நல்குகின்றன. பொம்மைக் கலியாணம், எலிக் கலியாணம், பாண்டி விளையாட்டு ஆகியவை குழந்தையுலகையே கும்மாளமிடச் செய்கின்றன. ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்த 'புலிக்கூடு' சிறுவர்களை அச்சமூட்டினும் பார்த்துக்கொண்டிருக்கவே தூண்டுகிறது.

இயற்கை இன்பம்

கவிஞருக்கின்பமளிப்பது இயற்கை. தான்பெற்ற இன்பத்தை உலகுக்களிக்கும் கவிஞன்தான் இயற்கையில் காண்பதைத் தான் கண்டவாறே படம்பிடித்துக் காட்ட வல்லவன். கண்டு மகிழ்வதைக் கண்டவாறே பிறருக்கு எழுத்து வடிவிலே மற்றோருக்குக் காட்டுந் திறன் சிறந்த கவிஞருக்கே இயலும்.

சிறுவர்கள் வானங் கறுப்பதைக் காண்கிறார்கள். அதனால் என்னென்ன படிப்படியாக விளையுமென்பதைக் கூறுகின்றவர்கள் இறுதியிலே காப்பி குடிக்கும் நன்மை கிடைக்குமெனக் களிப்புறுகிறார்கள். இவ்வாறு கூறும் போது பசுவினிடம் சுரக்கும் பாலைக் கன்றுக்கு ஊட்டி மிகுந்ததையே கறந்து காப்பியில் ஊற்றிக் கொள்ளலாம் என்பதைக் கொண்டு இக்காலத்துக்கு வேண்டிய அற மொன்றையுங் கூறுகிறார்கள்.

வசந்த காலம் வருகிறது. அதைக் கண்ட முகில் நிலத்திலுள்ள செடி கொடிகளைக் கூப்பிடுகிறது. 'கண் மலருங்கள்! பட்டுடுத்தும் பணிபூண்டும் பொட்டிட்டும் புறப்படுங்கள்! மணமிகுஞ் சிமிழைத் திறவுங்கள்! மணத்தை வாரியிறையுங்கள்!' என்று கூறும்போது,

நீங்கள் தரும் மலர்களால் இறைவனடியில் வழிபாடியற்றுங்கள் என்பதைக் கூறவும் மறக்கவில்லை.

ஆற்றைக் காண்கிறாள் ஒரு பெண். அது தன் ஓயா உழைப்பை அவளிடம் கூறியேனும் சிறிது ஆற்றிக் கொள்ளலாம் என்று கூறுகிறது. இப் பகுதியைப் படிக்கும்போது பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தம் மனோன் மணீயத்திலே—நடராஜன் என்பவன் ஒரு வாய்க்காலைக் கண்டபோது, அதன் ஓயாவுழைப்பை அது கூறுவது போலக் கூறுவதாக—அமைத்திருக்கும் பகுதி நினைவுக்கு வருகிறது. கவிமணி இப்பகுதியை ஆங்கிலத்தில் 'குட்ரிச்' என்பவர் எழுதிய பாடல்களைத்தழுவி எழுதியிருப்பதாகக் குறிப்புள்ளது. இம் மூன்று கவிஞர்களையும் ஓடும் நீர் கவர்ந்தது போலும்! கவிமணியின் ஆறு, 'கல்லும் மலையுங் குதித்து வந்தேன்' என்கிறது. சுந்தரம் பிள்ளையின் வாய்க்கால், 'கதித் தெழு சுனையாய்க் குதித் தெழுந் தோடினேன்' என்கிறது. ஆறு, 'நில்லும் எனக்கினி நேர மில்லை' என்கிறது. வாய்க்கால், 'இன்னமும் ஈதோ ஏகுவன்' என்கிறது. மற்றும் கவிமணியின் 'ஆற்றை'ப் படிக்கும்போது பண்டைத் தமிழ் நூல்களிலே காணப்பெறும் ஆறுகளின் செயல்களெல்லாம் நினைவுக்கு வருகின்றன; படித்துணர்க.

சந்திரனைப் பார்த்து மகிழ்ந்த குழந்தை 'மதியின் திருமணத்திற்கு முல்லை மலர்ப்பந்தர் இட்டனரோ எனவும், 'பாலாழிமீது படர்ந்த வெண்ணெய் ஒரு பந்தா யுருண்டு திரண்டதுவோ' எனவும், 'கண்ணுதல் உள்ளக் கருணையிதோ' எனவும் வியப்பது நம்மை வியப்படையச் செய்யுமுன், 'அம்புலிக் கூட்டில் முயல் வருமோ?' என்னும் வினா நகைச் சுவையைத் தருகிறது.

'பூமகளின் புன்னகைபோற் பூத்திடுவோம்' என்று நமக்கு அறிமுகம் ஆகும் மலர்கள் மண்ணகத்தை விண்ணகமாக மாற்றி மக்களுக்கியற்றும் நலத்தை யெல்லாம் பண்புறக் கூறுவது சிறுவர்களுக்கு விருந்து. சூரிய காந்தி மலரைப் பார்க்குங் குழந்தை 'செங்கதிர் செல்லும் திசையது நோக்கி-உன்-செல்வ முகமும் திரும்புவதேன்?' என்று வினவுகிறது. அவ்வாறு திரும்புகிறதா என்பது ஆராய்ச்சிக்குரியது.

'சரத்காலம்' மகாகவி ரவீந்திரரின் கருத்தை யொட்டி நமக்கு அறிமுகமாகிறது.

காட்சி இன்பம்

காலத்தைக் காட்ட இயற்கையன்னை பல கருவிகளைத் தந்திருக்கும்போது, கடிகாரம் வாங்கித் தரும்படி அடம் பிடிக்கும் தன் குழந்தைக்கு ஏழைத் தாய் கூறும் அறிவுரை, அழகுக்காகவே கடிகாரம் கட்டித் திரியும் நாகரிகரைக் கண்டு நகையாடுகிறது.

'சைக்கிள்' ஓடும் அழகைத் தங்கைக்குக் கூறுகிறான் ஒரு சிறுவன். அக்காளும் தங்கையும்போல் இரு சக்கரங்களும் ஒற்றுமையாய்ச் செல்வதை அவன் கூறுவதைக் கண்டு மகிழும் நாம், ஆகாய விமானம் தன்னைப் போரில் மாட்டிவிட்டு மக்கள் செய்யுங் கொடுமையைக் கூறும்போது, 'ஏன் இந்த விஞ்ஞான வளர்ச்சி' என்று எண்ணத் தூண்டுகிறது.

சுசீந்திரத்தின் இயற்கை யழகும் சிறுவர்களுக்கு விருந்தாகிறது. இறுதியிலே நாம் நம் கைக்கு நன்றிகூறும் முறையிலே கைத்திறன் எடுத்துக் கூறப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. செய்ந்நன்றி மறத்தல் கொடுமையிலும் கொடுமையன்றோ?

கதைப் பாட்டு

ஊகமுள்ள காகத்தின் கதை எல்லோராலும் கூறப்படுவதற்குக் காரணம் முயற்சியின் சிறப்பை விளக்கவே. ஆகையால், கவிமணியும் கதைப் பாட்டில் இதைக் காட்டியிருக்கிறார். 'நெற்பானையும் எலியும்' என்னும் கதை ஈசாப் கதை ஒன்றை நினைவுக்குக் கொண்டு வருகிறது. அக்கதையில், மரப் பொந்திலிருந்த உணவை உள்ளே நுழைந்து அளவுக்கு மீறித் தின்ற நரி ஒன்று வயிறு பெருத்துவிட்டதனால், வெளிவர முடியாமல் திண்டாடுகிறது. இங்கே, சுண்டெலி யொன்று பானையின் ஓட்டை வழியே உள்ளே புகுந்து தின்றுவிட்டுப் பருத்துவிட்டதனால், வெளிவர முடியாமல் திண்டாடுகிறது. கள்ள வழியிற் செல்லலாகாது என்ற நீதியை இக் கதை அறிவிப்பதாகக் கூறிய கவிமணி 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்' என்ற பழமொழியை விளக்க அப்பம் திருடின எலி மற்ற எலிகளுக்குக் கொடாமல் தின்றதனால், 'யாத்திரை போன' வரலாற்றையுங் கூறுகிறார். 'சுட்ட பழமா சுடாத பழமா' என்ற கதை ஔவையும் இடைச் சிறுவனும் என்று நம் முன் நிற்கின்றன. செருக்கைத் தடுக்கும் இக்கதை எத்தனை தரம் கூறினாலென்ன? மெருகேறிக் கொண்டே இருக்கும்.

மக்களுள் பிறப்பால் உயர்வு தாழ்வில்லை; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவர் கூறுகிறார். நாம் இவ்வுண்மையைக் கூறினால் தம்மை உயர்த்திக்கொண்டிருப்போர் ஒப்புக்கொள்வதில்லை இன்றைக்கும்! இந்தக் கசப்பான உண்மையைப் புத்தரும் ஏழைச் சிறுவனும் என்னும் கதை மிக அழகாக விளக்குகிறது. இக் கதை இப்போது 'ஆசிய ஜோதி'யிலே சேர்க்கப்பட்டுள்ளது.

'எல்லோரும் இன்புற்றிருக்க' நினைத்த புத்தர் உலகைச் சுற்றி வருகையில் வழி நடந்த இளைப்பாலே சோர்ந்து விழுந்து கிடந்தார். ஆடு மேய்க்கும் சிறுவன் கண்டான் அவரை. உள்ளந் துடித்தான்! தொடக் கூடாதவன் தான் என்ற உணர்வாலே அவரைத் தொட முடியாமல் வருந்தினான்.

பின்பு அருகிலிருந்த தழைகளைக் கொய்து வந்து நிழல் படும்படி அவர் அருகிலே நட்டான்; ஓர் ஆட்டைக் கொண்டுவந்து அதன் பாலை அவர் வாயிலே கறந்து விட்டான். மயக்கந் தெளிந் தெழுந்தார் புத்தர். 'கலத்தினிலே கொஞ்சம் பாலைக் கறந்து தருவாய்' என்று கேட்டார். அவன், 'ஐயையோ! ஆகாது; இடையன் ஓர் காட்டு மனிதன்' என்று கூறி மறுத்தான். அந்த நாட்டிலே இடையன் தீண்டாதவனாக விலக்கப்பட்டிருக்கிறான் போலும்! புத்தர் அச்சிறுவனுக்குக் கூறும் அறிவுரையில் 'நன்மை செய்பவரே உலகம் நாடும் மேற்குலத்தார்' என்று விளக்குகிறார். அக்காலத்திலே புத்தர் கொண்ட சீர்திருத்தம் இது! இக் காலத்திலும் எத்துணையோ உயர்குல மாக்கள் தீண்டாமையை ஆதரிக்கின்றனரே! அரசாங்கம் இறைவன் கோயிலைத் திறந்து விட்டது தீண்டாதாருக்காக; ஆனால், பல்லோருடைய மனம் திறக்கவில்லையே. மனிதனை மனிதன் தீண்டினால் நீரில் முழுகித் தூயவனாக வேண்டுமாமே! மனந்தூயராகாத மாந்தரின் உடம்புத் தூய்மை, இதிலேதான் உள்ளதோ?

பஞ்சாமிர்தம்

குழந்தைப் பருவம் நீங்கி வளர்ந்த சிறுவர்களுக்கும் மற்றையோருக்கும் இந்த ஐந்து அமிர்தங் கலந்த பண்

டம் சுவையூட்டுகிறது. கவிமணிக்கு இயற்கைக் காட்சி தெய்விகக்காட்சியாகத் தெரிகிறது. **நாஞ்சில்நாடு** தன் இயற்கை அமைப்பை அழகுற அறிவிக்கிறது. பேய்ச்சிப் பாறை ஏரியும், பழையாறும் நாஞ்சில் நாட்டை வளமுறச் செய்கின்றன. நாஞ்சில் நாட்டின் ஆட்டு மந்தை கண்ணுக்கு அழகு தருகிறது. மூவர் தமிழும் முழங்கும் நாடாகிய—சேரர் ஆளும் நாடாகிய—வெற்றிச் சுதந்திரம் வேண்டும் நாடாகிய—நாஞ்சில் நாடு 'வையத்து ஏதும் இணையின்றி' மேம்பட்டு நிற்பதில் வியப்பில்லை. 'கூழுக் காகக் கவிபாடும் கூனக் கிழவி' யாகிய ஔவை—கதைப் பாட்டிலே வந்தவள்—'பஞ்சாமிர்த'த்திலும் காட்சி தரு கிருள். இங்கு இலக்கிய மும்மணியாக இருப்பதே பிறகு, 'இலக்கியப் பஞ்சக' மாக மாறிவிட்டது. ஆதிப் பொது மறை கீர்த்தனையாலும் புகழப் பெறுகிறது. திருவள்ளுவரும் கம்பனும் பாரதியாரும் வருகின்றனர் இப் பகுதியில்.

உயிர்களிடம் இவருக்குண்டாகிய இரக்கம் 'குதிரைகள் புலம்ப' லிலே தெளிவாகிறது. இருபக்கமும் திரும்பா மற் குதிரைகளின் பார்வையைக் கட்டி மறைப்பது எத் துணைக் கொடுமை! நொண்டினலும் விடாமல் ஆறாக் குக் காணத்திற்காக ஆயிரம் வேலைகள் வாங்க, மூலை முடுக்குகளிலெல்லாம் நோவ அடித்து, மூச்சுவிடாமல் துரத்தும் கொடுமை நம் உள்ளத்திலே இரத்தங் கசியச் செய்கின்றது. இப்பகுதியிலுள்ள தேசக் கொடி மிகச் சிறப்பாக வானிற் பறக்கிறது. நாட்டுப் பற்றையும் வீரத் தையும் ஊட்டும் 'ஒற்றுமை' 'வீரத்தாய்' 'நாட்டுக்கே உழைப்போம்' என்னும் பாட்டுக்கள் மிகவும் பயன் தருவன.

2. ஆசிய ஜோதி

பாரத நாட்டிலே தோன்றி ஆசியாக் கண்டம் முழு தும் தம் பேரொளியைப் பரப்பிய புத்த ஞாயிறே கவி மணியால் ' **ஆசிய ஜோதி** ' என்று குறிப்பிடப் பெற்றனர். புத்தர் கொள்கை பலவும் எல்லாராலும் ஒப்புக்கொள் ளப் பெற்றவை. அவர் வரலாற்றை ஆங்கிலத்திலே **எட்வின் அர்னூல்டு** என்பவர் 'ஆசியாவின் ஒளி' (Light of Asia) என்னும் பெயரால் எழுதிய கவிதை நூலைப் பின் பற்றியே ஆசிய ஜோதி எழுந்தது.

ஆசிய ஜோதியிலே பழமையும் புதுமையும் கலந்த செய்யுள் நடை யுள்ளது ; இசைத் தமிழ்ச் சுவை கனிந் திருக்கிறது. புராணமும் வரலாறும் பொருந்தியுள்ளன. திருமாலே புத்தராக அவதரித்தார் என்று நம் நாட்டினர் கூறுவர். அதே கருத்துப்பட இறைவனே, ' வையகத் துயிர்கள் மிக வாடக் கண்டு ' வந்தவதரித்தார் என்கிறது இந்நூல். இந்நூலிலே கவிமணியின் இரக்கவுள்ளத்தின் மாண்பு தெளிவாகிறது. இவர் இளமையிலே தம் ஊரில் நல்ல மாடனுக்கு உயிர்ப்பலி யிடுவதைக் கண்டு கலங்கிய துன்பவுள்ளம் இந்நூலிலே மிகவும் கனிவுறக் காணப் பெறுகிறது.

உண்மையான தமிழ் மரபுணர்ச்சிக்கும் வருங்காலத் தமிழுக்கும் பழங்காலத் தமிழுக்கும் இந்நூல் ஆதரவாக இருக்கிறதென்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை கூறு கிறார். அவர் இந்நூலை மீண்டும் மீண்டுங் கற்க வேண்டு மென்று வற்புறுத்துகிறார்.

கதைச் சுருக்கம்:

சாக்கியர் மன்னன் சுத்தோதனனின் பட்டத்தரசி மாயாதேவி மக்களில்லாக் குறையால் வருந்தியிருக்கிறாள்.

ஒருநாள் ஆறு சிறு கொம்புள்ள-காமதேனுவே போலும் வெண்மை நிறமும் மத வேழம் போன்ற உருவமும் உடைய-வியத்தகு விண்மீன் ஒன்று வந்து தன் வயிற்றிலே பதிவதைப் போன்ற கனவை மாயாதேவி கண்டாள்; துயில் நீங்கிக் கனவை யெண்ணிக் களிப்புற்ருள். அப்போது உலகமே இனிய காட்சியளித்தது. கதிரவன் கிழ்த்திசையிலே எழுந்தான். 'புத்தர் பெருமான் புவியில் உதித்தனன்' என்னும் மொழி எங்கும் வானெலியாகக் கேட்டது; மக்கள் வியப்படைந்தனர். மாயாதேவி கண்டது நற்கனு என்று அறிஞர்கள் மன்னனுக்குக் கூறினர். மாயாதேவி கருவுற்ருள். பத்துத் திங்கள் கழிந்தன. ஒருநாள் அசோகின் அடியிலே மலரணையிலே மாயாதேவி கருவுயிர்த்தாள். வானவர் தலைவர்களெல்லோரும் மக்கள் வடிவில் வந்து குழந்தைக்குப் பணி புரிந்தனர். பெரியோர்கள், 'ஓராயிரம் ஆண்டுக் கொருமுறை தோன்றுமவன்—சீரார் பெருமான் உன் செல்வ மகனுய் வந்தான்' என்று மன்னனுக்குக் கூறினர். நகரம் மகிழ்ச்சியிலே நிறைந்து விழாக் கொண்டாடியது. மன்னன் தன் புதல்வனுக்குச், 'சித்தார்த்தன்' என்று திருப்பெயரிட்டான். அப்போது மன்னனைக் காண வந்தவர்களில் அசிதர் என்னும் முனிவர் ஒருவர்.

அசிதமுனிவரை வரவேற்றுப் பணிந்த அரசன் மாயாதேவியுடன் குழந்தையை வரவழைத்து முனிவரடியிலே வணங்கப் பணித்தான். முனிவர் அதனை மறுத்துத் தாமே குழந்தையை வணங்கி,

> "மதலாய்! 'நின்னடி மலரிணை தொழுதேன்;
> அவனே நீயாம் ஐயம் அதற்கிலை;
>
> ....
>
> ஆயிர வாயிரத் தாழியன் நீயே."

என்று பலவாறு போற்றிப்புகழ்ந்தார். அரசனை நோக்கி, 'மானிடத் தருவில்-ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்-ஒருமுறை மலரும் ஒண்மலர் இதுவாம்' என்று கூறி, 'இன்றைக்கு ஏழாம் நாள் மாயாதேவி ஊனுடல் மறையும்' என்றும் கூறிச் சென்றார். அவ்வாறே மாயா தேவி மறைந்தனள்: அரசன் வருந்தினன்; தாயற்ற சித்தார்த்தனை வளர்த்தான்.

சித்தார்த்தர் இளவரசுக்குரிய வயதை அடைந்தார். ஒருநாள் தம் நண்பன் தேவதத்தனிடமிருந்து ஓர் அன்னப் பறவையை உயிரளித்துக் காத்தார். அறிஞர்கள் கூறியிருந்தவாறு சித்தார்த்தரை உலக இன்பத்திலேயே திளைக்கும்படி உலகத்துயரம் ஒட்டாமல் அரசன் வளர்த்தான்; உரிய வயதில் திருமணமும் நடந்தது; சித்தார்த்தர் தம் மனைவியாகிய யசோதரையிடம் காதல் மிகக் கூடியிருந்தார்.

ஒரு நாள் யசோதரையின் அந்தப்புரத்தில் இருக்கும் போது வீணையொன்றின் ஒலியில் உலகின் துன்பம் பொதிந்து விளங்கியது. அது இவரைத் துறவுகொள்ளும்படி தூண்டியது. பள்ளியறையில் யசோதரையும், 'காலம் வந்தது' என்று கனவிலே வாய்புலம்பினள். சித்தார்த்தர் துறவு பூண்டு வெளியேறினர்.

“ அழுது புலம்பி அரற்றும் புவியே
மகிழ்ந்து நீயும்உன் மக்களும் வாழ
என்குடி என்கிளை என்வாழ்வு என்சுகம்
என்இளம் பருவம் என்சிங் காதனம்
யான்வாழ் அரண்மனை யாவையும் வெறுத்தேன் ”

என்னும் மொழிகள், 'துறவென்பது மற்றோருக்கு நலம் புரிதற்பொருட்டுக் கொள்ளுதலே யொழிய, உலகை வெறுத்துத் தன் உயிர்மட்டும் நற்கதியடையத் தவம்

புரியச் செல்வதன்று' என்னுங் கருத்தை அழகுற எடுத்துக் காட்டுகின்றன.

துறந்து சென்ற சித்தார்த்தர் உலகெங்கும் சுற்றினர்; உலகின் துயர முணர்ந்தார்; பிம்பிசாரன் செய்யும் வேள்விக்குக் கொலையின் பொருட்டுச் செல்லும் ஆட்டு மந்தைகளுடன் சென்று, வேள்விச் சாலையில் ஆட்டின் கொலை நிகழாமல் தடுத்தார். பிறகு, அவர் சுஜாதை என்னும் ஒரு பெண்ணுக்கு உலகியலை உணர்த்திப் புத்த தருமத்தை உலகெங்கும் பரப்பினர்.

இதுதான் ஆசிய ஜோதியின் கதைச் சுருக்கம். இது புத்தர் அவதாரம், அருள் உரிமை, காதல் பிறந்த கதை, சித்தார்த்தன் கேட்ட தேவகீதம், சித்தார்த்தன் துறவு, புத்தரும் ஏழைச் சிறுவனும், கருணைக் கடல், புத்தரும் சுஜாதையும், புத்தரும் மகனிழந்த தாயும் என்னும் ஒன்பது பிரிவுகளாக உள்ளது.

இந்நூல் அழகிய சிறு காவியம். அளவில் சிறியதே யன்றிச் சுவையில் மிகவும் உயர்ந்தது; எல்லோரும் படித்தின்புறும் நிலையிலே எளிய சொற்களால் அமைக்கப் பெற்றுள்ளது. ஆசிய ஜோதியான புத்தர் கருணைக் கடலாகத் தோன்றுங் காட்சி கன்மனத்தையும் கனிவிக்கும் முறையில் அமைந்துள்ளது.

சிந்தை தளர்ந்து நடக்கவும் சீவனில்லாத மந்தையைப் பிம்பிசாரனின் ஆணைக்கஞ்சிய இடையர் ஓட்டிச் செல்லுங் காட்சியைப் படிக்கும்போது, இக்காலத்தில் 'அடிதொட்டிக்கு' ஓட்டிச் செல்லும் ஆட்டு மந்தை நினைவுக்கு வந்து உள்ளத்தைப் பிழிகிறது. நொண்டியாட்டுக் குட்டியைத் தூக்கிக்கொண்டு அந்த மந்தையுடன் வருகின்ற கருணைக் கடலை இராசக்கிருக மாந்தர்

கண்டு அடையும் பரபரப்பையும் வியப்பையும் கவிமணி தீட்டியிருக்கும் அழகை என்னென்பது!

'மானேந்தும் ஈசனுளம் நாண, ஆட்டின் மறி யேந்தும் பெருங் கருணைப் புனித வள்ளல் மாநகரின் திருவாயில் வந்தபோது' மாலைக் காலமாயிற்று.

அப்போது, 'செங்கதிர் வெம்மை தணிந்தது; தென்றல் உலாவி எழுந்தது; சோணை மாநதி பொன்னிறம் பொலிந்தது' போன்று காணும் காட்சிகள் கருணைக் கடலுக்காகவோ என்று மயங்கும்படி அமைகின்றன. தெருவிலே கண்ட மக்கள் தம்மை மறந்து வணங்குகின்றனர். ஆரவாரமெல்லாம் அடங்கி அமைதியுண்டாகிறது. கருணைக் கடலோ, 'செம்பு நிறைந்து பால் சிந்திடவே-சிலர்-சிந்தை மறந்து மயங்கி' நிற்பதையும் அறியாமல், வையமிசை உயிர்கள் படுந்துயரை எண்ணி ஆட்டு மந்தையுடன் சென்றார்.

வேள்விச் சாலையிலே அவர் கண்ட காட்சி: ஒரு வெள்ளாட்டைக் கண்டு பிடித்து வந்து பாரில் கிடத்தியிருந்தார்; தீட்டிய கத்தியும் கையுமாக ஒரு தீட்சிதர் வந்து முன் நின்றார். அவர் எண்ணருந் தேவரை விளித்து, மன்னன் செய்த பாவமும் பழியும் நீங்குமாறு இந்த அவியை யேற்குமாறு கூறினர்; வாளை ஓங்கினர். கண்ட கருணைக்கடல் ஓடிவந்து, ஆட்டை அவிழ்த்து விடுவித்தார். அறவுரை கூறி மன்னனைத் திருத்தினர். அந்த அறவுரைகளைப் படிக்கும்போது, ஆபுத்திரன் பசுவைக் காப்பாற்றும்போது பார்ப்பனருக்குக் கூறுவனவாக மணிமேகலையிலே வரும் அறவுரைகள் நினைவுக்கு வருகின்றன. கவிமணி கூறும் அறவுரைகள் மணிமேகலை

யில்வரும் அறவுரைகளினும் அழகுடன் காணப்பெறு கின்றன.

“ விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்ற மென்னை ?”

(மணிமேகலை, கரு : ருக-ரு.)

என்பது ஆபுத்திரன் அறவுரை.

“ காடு மலையெலாம் மேய்ந்து வந்து—ஆடுதன்
கன்று வருந்திடப் பாலை யெல்லாம்
தேடிட மக்களை ஊட்டுவதும்—ஒரு
தீய செயலென எண்ணினீரோ ?”

“ மண்ணில் வளர்ந்திடும் புல்லை யுண்ணும்;—வான
மாரி பொழிந்திடும் நீரை யுண்ணும் ;
எண்ணிநீர் செய்யும் உதவி யென்னும்?—இதை
ஏனோ உணர்ந்திலீர் மானிடரே ?”

என்பன கருணைக் கடலின் கனிவுரை.

இந்த ஒப்புமைக்குமேல், ‘மேடையில் நீங்களும் மூடிப்படுத்திட மெல்லிய கம்பளி தானளித்து, வாடையில் ஆடிக் கொடுகுவதும் அதன் வஞ்சகச் செய்கையோ?’ என்று வினவுவது மணிமேகலையிலிருந்து வளர்ந்த நிலைக்கு வந்த அறிவுரை போலில்லையா ?

மற்றும், ‘ஆடுகள் உம்மை அண்டிப் பிழைக்கும் உயிர்கள். இவற்றைக் கொல்வது அடைக்கலப் பொருளை அழிப்பதாகும். ஆகையால், தாயென நம்பி வரும் உயிரைப் பேயெனக் கொல்வதால் பேறும் பெருமையும் வருமோ ?’ என்கிறார். ‘ஆயிரம் பாவங்கள் செய்த வெல்லாம் ஏழை ஆட்டின்தலையோடு அகன்றிடுமோ ?’ என்று

வினவுவது எத்துணைத் தெள்ளிய அறவுரை ! 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதையும் 'முன்னைப் பிறப்பினில் செய்த வினை-யாவும்-முற்றி முதிர்ந்து முளைத் தெழுந்து, பின்னைப் பிறப்பில் வளர்ந்திடும் என்பது பித்தர் உரையென எண்ணினீரோ !' என்று எடுத்துக் காட்டுகிறார். 'பிள்ளையைக் கொன்று கறி சமைத்தீர்; அதன் பெற்றோரை உண்ண அழைத்து நின்றீர்' என்றும் அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு வாய் பேசா உயிர்களுக் கெல்லாம் கருணைக் கடல் பிரதிநிதியாக வாதாடி வழக்கிட்டு மன்னன் மனநிலையை மாற்றினர் என்று கவிமணி அமைத் திருக்கும் காவியம் எத்துணைப் பயனுடைய தென்பதை எண்ணிப் பாருங்கள்.

இனி, மற்றொரு காட்சியைக் காண்போம்:

'மானைப் பழித்த விழியுடையாள், ஒரு மாமயில் போலும் நடையுடையாள், தேனைப் பழித்த மொழி யுடையாள், பெண்ணின் தெய்வமெனத் தகும் சீருடை யாள்' ஒருத்தி தன் கையிலே ஆண் மகவொன்றை ஏந்தி ஆருகக் கண்ணீர் வடித்து நின்றாள். அவளைப் புத்தர் பிரான் அருளொழுகும் நோக்குடன், 'வெந்துயர் விளைந்த தென்னை ?' என்றார். அதற்கு விடையாகத் தன் மகனைப் பாம்பு கடித்துவிட்டதெனக் கூறுகிற அவள் கூற்றாக வரும் பேதைமை மொழிகளைப் பாருங்கள்:

"சிரித்த முகம் என மலர்ந்து செழித்த செடி நடுவே, சிறு மகனும் விளையாடித் திரிந்திடும் அவ்வேளை, விரித்த படம் எடுத்து அரவொன்று அடுத்து ஒருகை பற்றி, விளங்குமணிக் கடகமென வளைந்து கிடந்ததுவே" என்னும்போது கொடிய காட்சியாகவா தோன்றுகிறது ?

பாம்பின் கொடுமை பாலகன் அறிவானோ? அவன் அதனை விளையாட்டுப் பண்டமெனக் கொண்டு வாயையும் தலையையும் வயிற்றையும் வலித்து அந்த அரவுக்கு வருத்தமுண்டாகும்படி 'சிறு குறும்பு' செய்துவிட்டான். அவன் செய்த சிறு குறும்பைப் பாராட்டாமல் 'அன்பாக அரவிட்ட சிறு முத்தம்' அவன் ஆவிக்கும் இடையூறு செய்திடுமோ? என்று அப் பேதை வினவுவது நம் நெஞ்சை யுருக்கிக் கண்ணீர் வரச் செய்கிறது. அப்புறம் அவள், 'சிறுபொழுது சென்றிட என் செல்வ மகன் உடலில் சீதம் மிகப் பரந்து உணர்வு தீர்ந்து விட்டது! நிறுத்த விழி ஒரு நிலையில் நின்றுவிட்டது! நீட்டிய கால் மடக்காது நின்றுவிட்டது!' என்கிறாள்.

இவ்வாறு கூறி, 'வாடும் மலர்ச் செண்டுபோல் கிடக்கும் இந்த மைந்தன் உயிரெழச் செய்யும் ஐயா!' என்று தம்மை வேண்டிய அவளுக்கிரங்கி உலகியலை உணர்த்திட ஒருவரும் இறவா வீட்டில் ஒரு பிடி கடுகு வாங்கிவரச் சொல்கிறார். அவள் வீடு வீடாக அலைந்து வினவியதில் பிறந்தவர் இறப்பது இயற்கையென உணர்கிறாள்.

இத்தகைய 'ஆசிய ஜோதி' தமிழ்நாட்டின் பேரொளியாகத் தோன்றியது நாம் செய்த நல்வினை யெனலாம்.

3. மருமக்கள் வழி மான்மியம்

நாஞ்சில் நாட்டிலே தமிழ் நாட்டில் இல்லாத மாறுபட்ட ஒரு வழக்கம் இருந்தது. அந் நாட்டிலே ஒருவனுடைய சொத்து அவன் மக்களுக்கில்லை; உடன் பிறந்தாள் மக்களுக்கே உண்டு. இதனை **மருமக்கள் தாயம்** என்பர். இது சேர நாட்டிலுள்ள முறை. நாஞ்சில் நாட்டில்

உள்ள குடும்பங்கள் பலவும் தமிழ்நாட்டுக் குடும்பங்க ளாக இருந்தாலும், எப்படியோ இக் குடும்பத்தினர் சேர நாட்டுத் தாயமுறையைக் கைக்கொண்டு, தாங்கள் சேர நாட்டினரெனப் பிறர் எண்ணும் நிலைக்கு வந்துவிட்ட னர். ஒரு சேர அரசன் வற்புறுத்தலினாலேதான் இவர் கள் சேரர்தாயமுறையைக் கைக்கொண்டிருக்க வேண் டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

மக்கள் தாயமுறை இயற்கைநெறியை ஒட்டியது; பெற்றோர்களின் உழைப்பின்பயனை அவர்களுடைய குருதியிலே ஊறி வளர்ந்து, அவர்களுடைய அன்பிலே தோய்ந்து பயின்ற அவர்களுடைய மக்கள் அடைவதே தகுதி. 'தம் பொருளென்ப தம் மக்கள்' என்பர் வள்ளு வர். இதற்கு மாறாகச் சேர நாட்டிலே ஒருவன் தன் செல்வக் குழந்தைகளுக்கு 'உகந்துடைமை' என்னும் ஒரு சிற்றுரிமையையே அளிக்க முடியும். உடன்பிறந் தாள் மக்களே 'அவகாசிகள்' என்றும் 'சேஷகாரிகள்' என் றும் அந் நாட்டினர் கூறும் உரிமையாளர். சொத்தை வைத்திருக்குந் தலைவன் 'காரணவன்' எனப்படுவான். காரணவன் இறந்தால் அவன் மனைவி மக்கள் அவகாசி களின் ஆதரவிலே அவர்கள் கொடுப்பதைப் பெற்று அமைந்திருக்க வேண்டும். காரணவன் தன் மருமக் களின் கருத்துக்கு மாறாக நடந்தால், மன்றத்திலே வழக் குத் தொடுத்துக், 'குடும்ப தோஷி' என விலக்கிவிடுவர்.

நாஞ்சில் நாட்டிலே பிறந்த நம் கவிமணிக்கு இவ் வகைத் தாயமுறை வெறுப்பை யளித்தது. இதனை ஒழிக்க இவர் கல்லூரியில் ஆசிரியராக இருக்கும்போதே முயற்சியெடுத்தார். 'மலபார் குவார்ட்டர்லி ரிவியூ'[1] என்ற இதழிலே நாஞ்சில் நாட்டு வேளாளர்க்கு உணர்ச்சி

1. Malabar Quarterly Review.

யுண்டாக ஆங்கிலக்கட்டுரை வரைந்தார்; வேளாள ரிடையே பேசும்போ தெல்லாம் எடுத்துவிளக்கினர். சட்டசபை உறுப்பினரிடம் கூறிச் சட்டங் கொண்டுவர வகை செய்தார். 'நாஞ்சில்நாட்டு வேளாளருக்கு ஒரு கோட்டை வினுக்கள்' என்ற இருபத்தொரு வினுக்கள் அடங்கிய அறிக்கையை வெளியிட்டார். **மருமக்கள் வழி மான்மியம்** என்னும் இந்நூலை ஆசிரியர் பெயரின்றிப் பழைய ஏட்டுச்சுவடியைப் பதிப்பிக்கும் முறையிலே, திருவனந்தபுரத்தில் அக்காலை வெளிவந்துகொண்டிருந்த 'தமிழன்' என்ற இதழிலே 1917 மார்ச்சு முதற்கொண்டு பல பகுதிகளாக வெளியிட்டார். 1918 பிப்ரவரியிலே நூல் முடிந்தது. இந்நூல் பழைய ஏட்டுச்சுவடி யென்று பிறர் நம்பும்படி ஏடுமுரிவினுலே சில வரிகளும் எழுத் துக்களும் இல்லாமலே நூலை வெளியிட்டார். இப் போதும் அப் பகுதிகள் புள்ளிகளால் காட்டப்பட்டுள் ளன, பண்டித-முத்துசாமிப்பிள்ளையவர்கள் அப்போது தமிழன் இதழாசிரியரா யிருந்தார்கள். தமிழ்மக்களின் கருத்தை இந்நூல் கவர்ந்தது. இதிலுள்ள இலக்கியச் சுவையைக் கவிமணியின் நண்பர்களான சேஷையர் முதலி யோர் கண்டு இந்நூலைப் பலரும் அறிந்து மகிழப் பரப் பினர். இது ஒருவகைப் புரட்சி நூலாக எல்லோரையும் கவர்ந்துவிட்டது. இந்த நூல் ஒன்றே அங்கு மக்கள் தாயத்தைக் கொண்டுவர ஆதரவாயிருந்தது என்பது மிகையாகாது.

இந்நூலின் கதைச் சுருக்கம் :

நாஞ்சில் நாட்டு வேளாளப் பெண் ஒருத்தி மருமக் கள் தாயமுறையினுலே தான் அடைந்த துன்பத்தை உலகுக்கு எடுத்துரைக்கிருள். இவள் ஏழைக்குடும்பத்

திற் பிறந்தவள்; பதினாறாவது வயதில் ஒரு செல்வருக்கு ஐந்தாம் மனைவியானாள்; கணவன் வீட்டிலே மாமி, சக்களத்திகள், மதனி முதலானோரால் அளவற்ற துன்பம் அடைந்தாள். இவளுக்கு மணமான சில நாட்கள் கழித்து இவள் கணவனுக்கும், கணவன் தங்கை கணவனுக்கும் மனமாற்றம் உண்டாயிற்று. இருவரும் நீதிமன்றத்துக்குச் சென்று வழக்காடிப் பொருளையெல்லாம் இழந்தனர். வழக்கு முடியு முன்னரே கணவன் நோயில் வீழ்ந்தனன். அப்போது அவகாசி செய்த இடையூறு சொல்லிமுடியாது. கணவன் இறக்கும்போது அவன் மருமகனிடம் தன் மக்களையும், மனைவியையும் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டு உயிர்விடுகிறான். ஆனால், அவன் இறந்தபின் மனைவி மக்கள், வீட்டைவிட்டு வெளியேறும்படி நேர்கிறது. இவ்வாறு அவள் தன் துயரத்தை நமக்குரைக்கிறாள்.

இந்நூல் ஒரு சமூகத்தை எள்ளித் திருத்தும் முறையிலே அமைக்கப்பெற்றது; பல்லவ மகேந்திர வர்மன் எழுதிய 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற நூலைப் போன்றது. ஒரு சமூகத்திலுள்ள குறைகளை எடுத்துக் கூறினால், சமூகத்தைப் பழிக்கும் முறையிலேதான் அக்குறைகள் அமையும். எனினும், கசப்பான மருந்தினாலே நோய் நீங்குவதைப்போல, இக் குறைகளை உணர்ந்து சமூகம் திருந்தும். இந்த நோக்கத்துடனேதான் இந்நூல் அமைந்தது.

இந்நூல் குலமுறை கிளத்து படலம், மாமி அரசியற் படலம், கேலிப் படலம், கடலாடு படலம், பரிகலப் படலம், நாகாஸ்திரப் படலம், கருடாஸ்திரப் படலம், வாழ்த்துப் படலம், கோடேறிக் குடி முடித்த படலம்,

யாத்திரைப் படலம், கும்பி யெரிச்சல் படலம் எனப் பதி ஞெரு படலங்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. படலப் பெயர்களே நூலின் சுவையைக் காட்டும்.

விநாயகர் வணக்கத்தில், "எல்லோராலுங் கைவிடப் பட்டுச், 'சந்தியும் தெருவும் தண்ணீர்க் கரையும், மரத்தி னடியும் வாழிடமாக' இருந்தனே. ஆதலால் நடுநிலை கண்ட நாயகன் நீயே" என்று வேண்டுகிறுள் அப்பெண். அவையடக்கத்திலும், 'ஒருத்தி ஏழை, ஒரு துணை யில்லாள்....புலம்பும்பொழுது....விகாரம் முற்றும் விரவி வரும்; இலக்கண வழுக்களைச் செய்யுள் விகாரமாகவோ எப்படியோ பொருந்துமாறு விதியறிந் தமைத்துக் கொண்டு, "என் கருத்தைக் குறைவறக் கண்டுகொள்வது பெரியவர் கடன்," என்கிறுள். இம் முறையிலே கடவுள் வணக்கமும் அவையடக்கமும் புதுமையாகத் தோன்று கின்றன.

குலமுறை கிளத்து படலத்திலே, தான் ஏழைக் குடியிற் பிறந்ததையும், பதினுரும் வயதிலே ஐந்தாம் மனைவியாக வாழ்க்கைப்பட்டதையும், தனக்கு முன் வந்த மனைவியராகிய நால்வரும் பென்ஷன் பெற்ற விளக்கத்தை யும் கூறும்போது, நாலாம் மனைவியை இவள் கணவன், "தங்கப் பெண்ணே! தாராவே! தட்டான் கண்டால் பொன் என்பான்; தராசிலே வைத்து நிறு என்பான், எங்கும் போகாமல் இங்கேயே இரு" என உடனேயே இருத்திக்கொள்வதைச் சொல்வதில் எவ்வளவு அழகாகப் பெண்ணியல் சித்திரிக்கப்படுகிறது என்பதைநோக்குக.

மாமி அரசியற் படலம், மாமியின் கொடுமையும் பெண்ணியல்புறக் கூறுகிறது. 'கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு' வைக்கும் மாமியின் அரசியலிலே,

'கஞ்சியோ, கூழோ, காடி நீரோ கும்பியாரக் குடித்ததே யில்லை' என இப் பெண் கூறுகிருள்! எத்துணைக் கொடுமை! மற்றும், 'மாமியின் ஒரு கண்ணுக்கு இணை அவ்விந்திரன் ஆயிரங் கண்ணும் ஆகாதுண்மை' என்னும் போதும், 'கணகண என்றெக் கணமும் நாக்கின் அடிக்கும் மணிவிசை அடங்கிவிடுமென்று, எவரும் எண்ணி இருந்ததேயில்லை' என்னும்போதும் மாமியின் அரசாட்சிச் சிறப்புத் தெற்றெனத் தெரிகிறது. மாமியின் மகளும் கணவனுடைய தங்கையுமாகிய மதனி இவளை 'அம்மியில் வைத்துச் சம்மந்தியாக' அரைத்து விடுவாளாம்.

கடலாடு படலத்திலே, கூறுகிருர்: இவள் கணவன் இவர்கள் ஐவரையும் தனித்தனியே கைப்பற்றி ஐந்து முறை கடலில் நீராடியதனுல் அறுபதுநாள் விடாச்சுரம் அடைந்தானும். நாட்டு மருத்துவர் நாளைக் கடத்திஞராம். மிஷியன்தெரசர் இவள் கணவனை மீட்டு இவள் கையிற் கொடுத்தாராம்.

பரிகலப் படலத்திலே, மனைவியர் சண்டையில் இவள் கணவன் அடைந்த துன்பம் கூறப்படுகிறது.

நாகாஸ்திரப் படலத்திலே இவள் கணவனை ஒருநாள் மருமகன் கண்டு தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் காரணவன் என்ற முறையிலே தன் அம்மாஞகிய இவன் ஒரு நலமும் செய்யாததையும், செய்துவரும் வீண் செலவுகளையும், ஐந்து மனைவியரைக்கொண்டு 'பஞ்சகல்யாணிப் பிள்ளை'யெனப் பட்டம் பெற்றதையும் எடுத்துக் காட்டிக் 'குடும்பதோஷி' என்று உமைக்கொண்டு கோர்ட்டில் கேசு கொடுப்பேன்' என்றும், 'கூட்டில் ஏற்றிக் குறுக்குமறுக்காய்க் 'கிராசும் கேட்டுக் கேவலமாக்கி விடவில்லை

யானால் தான் வீரபத்திரன் மகனென்று மதிக்க வேண்டாம்' என்றும் கூச்சல் போடுவது கூறப்படுகிறது.

இவன் மாமனென்று மதிப்பில்லாமற் போட்ட கூச்சலாலே, இவள் கணவன் சீற்றங்கொண்டு கூறியவை கருடாஸ்திரப் படலமாகக் காட்சியளிக்கிறது. கூறி முடியாத அளவுக்குப் பெருகிவிட்ட குடும்பச்செலவின் பெருமையும் 'ஆலடி மாடன் கொடை'க்குக் கொஞ்சமாகாத செலவும், வில்லுக்காரிக்குப் புடைவையும் ரூபாயும் மருமகனும் கூட இருந்து கொடுத்ததும் பிறவும் அவன் கூறும் அழகே அழகு! ஆத்தாள் செத்த அடியந்திரச் செலவு ஆறுயிரம் பணமான கணக்கை அவன் எடுத்துக் காட்டுவது வியப்பிலும் வியப்பு! மற்றும் இவன் 'சார்னல் வாச்சர்' சந்தனத் தேவர்க்கு 'அட்ரஸ்' கொடுக்கவும், 'கார்டர் அண்ணன்' காடு மாறிப் போகும்போது சும்மா போகச் சொல்லக்கூடா தென்பதற்கும் செய்த செலவு நம் நாட்டு மக்களின் அறியாமை எப்படியிருக்கிறதென்பதை விளக்குகின்றன. மற்றும், இவன் தன் மருமகனை மட்டந்தட்ட, 'ஏழு வருஷமாய், இங்கிலீஷ் படித்தையே! ஏ. பி. சி. டி எழுதத் தெரியுமோ?' என்று கூறும்போது தம் நாட்டு இளைஞர்கள் படிக்காமல் திரியும் இழிதகவு கவிமணியின் உள்ளத்தை எவ்வாறு சுடுகிறதென்பதையும் காட்டுகிறது.

மேலும் தன் மருமகனும் அவன் தந்தையும் சோம்பித் திரிவதை எடுத்துக்காட்டித் தன்னைப்போல நல்லோர் இல்லை என்கிற பகுதி படித்தின்புறத் தக்கது.

தான்விட்ட நாகக்கணை தன் மாமன் விட்ட கருடக் கணையாலே சிதறிப் போனதை யறிந்த மருமகன், தன் பெற்றோரிடம் இச் செய்தியைக் கூறியதனுல், இவன்

தந்தை வந்து தன் மைத்துனனை வையும் படலமே வாழ்த்துப் படலம். மைத்துனனுடைய வஞ்சகச் செயலையும் பேச்சையும் இவன் எடுத்துக்கூறி, 'வாழ்த்தி நல்ல வரங்களுங் கொடுத்துத்' தெருவரைக்கும் போய்த் திரும்பி வருகிறான். வரும் படபடப்பிலே, 'மண்டை படீரென வாசற்படியிலே மோத,' வெகுண்டு, மைத்துனன் 'குடவண்டி (தொந்தி) யைக் கலக்கிப் போடுகிறேன் பார்' என்று படபடவென்று பற்பல மொழிகளைப் பொரித்துக் கொட்டுகிறான். இச் செயலைக் கூறும் இவள் தன் கணவனுடைய பொறுமையை, 'வையவைய வைரக் கல்லும், திட்டத் திட்டத் திண்டுக்கல்லும்' ஆக இருந்து விட்டான் என்று எடுத்துக் காட்டுகிறாள்.

இப் படலத்தின் இறுதியிலே சில தொடர்களும் வரிகளும் ஏடு சிதிலமாகப் போய்விட்டதன் அடையாளமாகப் புள்ளிகள் உள்ளன!

கோடேறிக் குடிமுடித்த படலம் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய பகுதியாகும். இவள் கணவனுடைய மைத்துனன், 'அண்டப் புரட்டன் வக்கீல் ஆபீஸில்—ஆனைப் பொய்யன் 'குமஸ்தனை அறிந்து' காரணவனை மாற்ற வந்ததைக் கூறுவதற்குப் பட்டினி கிடக்கும் பாம்பின் வாயிலே தேரை குதித்துச் சென்று வீழ்வதை உவமையாகக் கூறுகிறார். இங்கு நாகம் முன் செய்த நல்வினைப் பயனும் தேரை முன் செய்த தீவினைப் பயனும் கூடின என்று காரணங்காட்டுகிறார். அமீனாவை 'ஆ ஆ என்று அலை ஆமீன்' என்கிறார். நீதிமன்றம் செல்வோர் கட்டும் படிகளையும் ஏறும்படிகளையும் இவர் எடுத்துரைப்பதுபோல எவராற் கூறமுடியும்! 'கோர்ட்டுப் பீஸு குமஸ்தாப்பீஸு' எனத் தொடங்கிக், 'கண்டு

பீஸு காணுப் பீஸு—முண்டுத் துணிக்கு ஒரு முழு மல் பீஸு—அந்தப் பீஸு இந்தப் பீஸு—ஆனைப் பீஸு பூனைப் பீஸு—ஏறப் பீஸு இறங்கப் பீஸு' என்று அடுக்கும் சுவையை என்னென்பது! நீதி மன்றத்தில் எதிர்க்கட்சி வக்கீலின் வல்லமையைத் தெளிவுறக் கூறி அவர் நீதி மன்றத்திலே எப்படியெல்லாம் வினமூலம் மடக்கிப் பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யா கவும் கூறும்படி செய்துவிடுவார் என்பதை நகைச்சுவை மிக எடுத்துக் காட்டுகிறார்.

இவ்வாறு கூறி வரும்போதே, 'முட்டாள் முதலெ லாம் வக்கீல் முதலாம்' என்று நீதிமன்றத்திற்குப் போகும் மூடர்களின் செல்வம் கரைந்து அவர்களுடைய நிலைமாறும் வகையை மிக அழகுற எடுத்துக்காட்டு கிறார். 'படிப்படியாய் இப்படி அவர் பாடு—குறைந்து குறைந்துகொண்டே வந்தது. 'அண்டைவீடாகி அறைப் புரையாகிப்—படிப்புரையாகிப் பாயிலும் ஆனார்' என்று அவள் கூறும்போது நம் நெஞ்சம் நெகிழ்கிறது; மேலும் 'எழுந்து நடக்க இயலாதானார்—நடந்தவர் கீழே கிடந் தாரம்மா!' என்று அவள் அலறும்போது கண்ணீர் வரு கிறது.

யாத்திரைப் படலத்திலே, படுக்கையில் வீழ்ந்த கணவன் தன் மருமகனை அழைத்துத் தன் மனைவி மக் களை ஆதரிக்க வேண்டுகிறான். அப்போது தங்கை வருகிறாள். தன் மகன் தன் அண்ணன் பக்கத்தில் அண் ணன் சொல்லுக்கு மாறு பேசாமல் குந்தியிருப்பதைக் கண்டு சீறுகிறாள். சொத்தை யெல்லாம் பார்த்து வசப் படுத்திக் கொள்ளாவிட்டால், 'பொதிய மலையும் பொட் டணமாகிப்—புழக்கடை வழியாய்ப் போய்விடும்' என்

கிருள். அவனுக்குப் 'பாலும் அன்னப் பாலே' யாகி யது. இறந்து போகும் நிலையிலிருக்கின்ற அவன் பக்க லில் அமர்ந்து திருவாசகம் படிக்கும்படி அவன் மகனை ஒருவர் தூண்டுகிருர். அப்போது அவன் தமிழ் படிக்கத் தெரியாமல், 'ஆரே தமிழை அறிபவர் என்ருன்; பள்ளியில் தமிழும் படித்தேனே? என்ருன். பரிட்சை யில் தமிழொரு பாடமோ? என்ருன்' என அவன் கூற்ருகத் தமிழ்மொழி நாஞ்சில்நாட்டிலே புறக் கணிக்கப்படுவதைக் கவிமணி எடுத்துக்காட்டி வருந்துகிருர். மற்றும் 'நாஞ்சில்நாட்டில் நல்ல ஆண் பிள்ளை' இருந்தால் இப்படிப் போயிராது என்றும் குமுறுகிருர்.

இப் படலத்திலே தம் சமய ஆசிரியர் உமையொரு பாகத் தேசிகரிடம் உபதேசம் பெற்ற ஒருவர் வந்து அவன் நற்கதியடையத் திருவாசகம் படித்ததாக எடுத் துக் கூறியிருக்கும் பகுதி இவருடைய நன்றியறிவைக் காட்டுகிறது.

கும்பியெரிச்சல் படலத்திலே, 'மருமக்கள் வழி' எத்துணைக் கொடிய வழியென அவள் குமுறிக் கூறு கிருள். 'இது—மக்கள் வழியென மதிக்க வொண்ணுது; மருமக்கள் வழியாகவும் மாட்டாது' என்றிடித்துக் கூறி 'ஐயோ இவ்வழி ஆகாது ஆகாது' என்கிருள். பிறகு, இந்த நாட்டிலே, 'கற்றவர் உளரோ? அறிஞர் உளரோ? நீதியும் உளதோ? தெய்வமும் உளதோ?' என்று கதறு கிருள். இப் பகுதி மொழிகள் சிலப்பதிகாரத்திலே கண்ணகி தன்கையிலே ஒற்றைச்சிலம்பை யேந்தி மதுரை மாநகர்த் தெருவிலே வரும்போது கூறும் மொழி களை நினைவூட்டுகின்றன.

இறுதியில் ஒரு வெண்பா சிதைவுடன் உள்ளது.

மருமக்கள் வழி மான்மியம் சிறந்த காவியமாவ துடன் நாஞ்சில் நாட்டின் பழக்க வழக்கங்களும் அங்கு வழங்கும் பழமொழிகளும் மரபுத் தொடர்களும் பிற வும் பொதிந்த இலக்கியமாகவும் திகழ்கிறது. அம் மட்டோ. நாஞ்சில்நாட்டைச் சீர்திருத்தம் புரிந்த பெருமையையும் உடையது.

4. உமார்கய்யாம் பாடல்கள்

பாரசீக நாட்டில் நிஷபூர் என்ற நகரில் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கியாதுடீன் அபுல் பாத் உமார் என்பவர் பிறந்தார். அவரே உமார்கய்யாம். கய்யாம் என்பதற்குக் கூடாரம் செய்பவர் என்று பொருளாம். இத் தொழிலை இவர் செய்யாவிட்டாலும் இவர் தந்தை செய்திருக்கலாம் என்கின்றனர். இவரும் இவருடைய பள்ளி நண்பர்களிருவரும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பயனாலே, பள்ளியைவிட்டு இவர்கள் வாழ்க்கையைத் தொடங்கியபோது, அந்த நண்பர்களில் ஒருவராலே வாழ்க்கை முழுதும் கவலையின்றி வாழ ஆண்டுதோறும் பொருள் வந்தது. ஆகவே, உமார்கய்யாம் மக்களுக்குப் பயன்தரக் கூடிய 'ருபாயத்' என்னும் செய்யுட்களை இயற்றினார். நான்கடிச் செய்யுளைப் பாரசீகத்தில் ருபாயத் என்பர்.

உமார்கய்யாம் பாடல்கள் உலகெங்கும் புகழ்பெற்றவை. பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டவை. இப் பாடல்களைத் தமிழில் முதன்முதலாக மொழிபெயர்த்தவர் நம் கவிமணியே. இப் பாடல்களில் இந் நிலையற்றவுலகிலே மதுவும் மங்கையரின்பமும் இனிய

இசையுமே அகம் மகிழப்பெறக்கூடிய பேறுகள் என்னும் பொருள் அமைந்திருப்பதாக யாவரும் கூறுகின்றனர்; இக் கூற்று மணிமேகலையிலே ஆதிரையின் கணவன் சாதுவன் என்பவனிடம் நாகர் தலைவன், 'பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மாக்கட்கு—உண்டோ ஞாலத் துறுபயன்?' என்று வினவியதாக வரும் பகுதியை நினைவிற்குத் தருகிறது.

இவ்வகைக் கொள்கை சிறந்ததன்றென நம் தமிழ் நூல்கள் கூறும். உலகத்தில் நம் வாழ்வு நிலையற்றதாகையால், உலகில் உள்ளபொழுதே, 'ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும்' என்று அவை வற்புறுத்துகின்றன.

ஆனால், உமார்கய்யாம் பாடல்களில் மறுமையைப் பற்றிய கருத்துக் காணப்படவில்லையேயன்றி ஒழுக்கத்திற்குரிய மற்றைய சிறந்த கருத்துக்கள் பல வருகின்றன.

நிலையாமையை, 'மலரும் மலர்கள் வாடலும் இவ் வாழ்வு நிலையா தோடலுமே உலகங் கண்ட உண்மைகளாம்' என்றும், 'கொற்ற மன்னர் முடிசூடிக் கொலுவில் அமர்ந்த திருக்கோயில், முற்றுங் கூகை ஆந்தையொடு முதுபேய் வாழுங் காடாமே' என்றும் இவை போன்ற பல தொடர்களாற் குறிப்பிடுகிறார், மற்றும், 'யானும் நீயும் இறந்தபினும், இராஜராஜன் பட்டபினும், ஊனம் இன்றி இவ்வுலகம் ஊழிஊழி நின்றிடும்' என்பது உண்மையுரை.

உலகிலே உயர்வு தாழ்வு நேர்வதற்கும் அறியாமை வளர்வதற்கும் படைத்தவனே காரணன் என்பது இவர் கருத்து; 'அந்த நாள் அக் குயவன் கை ஆட்டத்தாலே நேர்ந்த பிழைக்கு, இந்தநாளில் ஏழையென ஏனோ குறை

கள் கூறிடுவார்?' என்பதையும், 'படைத்த மண் நல் மண்ணுனூற் பழிதான் எவரைச் சார்ந்ததுவாம்?' என்பதையும் நோக்குக. 'வழியிற் குண்டு குழி வெட்டி வலையுங் கட்டி மதுவுண்டு, விழவோர் விதியும் அந்நாளே விதித்து வைத்தென் கேடெல்லாம், அழியாப் பாவம் அதனாலே ஆன விளைவென்று அறைவாயோ?' என்பது 'படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்' என்ற கருத்தைக் காட்டுகிறது. 'மானை வளர்த்த கையாலே வஞ்சப் புலியும் வளர்த்திந்தக்—கானில் வேட்டை காணுமவர் கருணையுடையர் ஆவாரோ?' என்பதையும் காண்க.

உள்ளே நற்பண்பிலாத, 'புறஞ்சுவர் கோலஞ் செய்வாரை'ப் 'பூசும் நீறும் கண்டிகையும் புரிமுந்நூலும் பூண்டதலால் காசு பணத்தின் ஆசையவர் கடந்ததில்லை இல்லையடா!' என்ற தொடர் சுட்டுகிறது. இது உமார் கய்யாம் கருத்தை வைத்து நம் நாட்டொழுக்கத்தைச் சுட்டிக் கவிமணி எழுதியது. நம்நாட்டிலும், 'தத்தமக்குக் கொண்ட குறியே தவமல்ல' 'காதிலே திருவேடம் கையிலே செபமாலை கழுத்தின் மார்பின்—மீதிலே தாழ்வடங்கள் மனத்திலே கரவடமாம் வேடமாமோ?' என்பன போன்ற கருத்துக்கள் உலவியுள்ளன.

'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பதற்கிணங்க அழியக்கூடிய இவ்வுடலுள்ளபோதே இன்பத்தை நுகர்ந்துவிட வேண்டும் என்பது இவர் கருத்து.

"உலகில் வாழும் இவ் வாழ்வின் உண்மை யறியாக் குயவன்செய்
கலச வாயை என் வாய்தான் கலந்து கொண்ட கதைஇதுவாம்:
உலக வாழ்வு நிலையில்லை உண்இம் மதுவை உண்எனவே
கலசவாய்என் வாயோடு கனிந்த சொல்லைச் சொன்னது அம்மா"

இது நம் நாட்டு உலகாயதர் கொள்கைதான்.

பாவிகளை இறைவன் மன்னிப்பார் என்ற கருத்தும் வருகிறது.

" நாடும் ஈசன் பாவிகளை நரகில் வீழ்த்தி விடுவான் என்(று)
ஏடு நிறையப் பண்டிதர்கள் எழுதி வைத்துப் போய்விட்டார்
ஈடி லாத அவனருளை என்றும் அன்பால் உள்ளுருகி
ஆடிப் பாடும் அடியரலால் அயலார் அறிய வல்லாரோ ?"

மற்றும்,

"தண்ணார் மதியும் புரிசடையும்
தாங்கும் தையல் பாகனென
எண்ணு தொருவன் சொன்னதுகேட்
டெவனே சொன்னான்; அவனைக் கேட்(டு)
அண்ணு சொன்னான்; அதுபோலின்
றடுத்த தம்பி சொல்கின்றான்
கண்ணால் ஈசன் திருமேனி
கண்டார் எவரும் உண்டோ? சொல்"

என்னும் செய்யுள் உமார்கய்யாம் கருத்தைக் கவிமணி நம் நாட்டு மொழியாற் கூறியதாகும். இது,

" மைப்படியும் கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையன் என்னி னல்லால்...
இப்படியன் இவ்வுருவன் இவ்வண் ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே "

என்ற அப்பர்சுவாமிகள் கருத்தைத் தழுவ வில்லையா? இவ்வாறு இறைவனைத் தனியே காட்ட முடியா தாயினும், உலகெங்கும் இறைவன் உருவமே என்ற கருத்தும் வருகிறது :

" எங்கும் மனிதர் உனைத்தேடி இரவும் பகலும் அலைகின்றார் ;
எங்கும் உள்ள துன்னுருவம் எனினும் குருடர் காண்பாரோ ?
எங்கும் எழுவ துன்குரலாம் எனினும் செவிடர் கேட்பாரோ?
எங்தும் என்றும் எவ்வுயிரும் யாவு மான இறையவனே !"

இதில்'இறைவன் எங்கும்நிறைந்திருக்கின்ருர்'னென்பதும் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் உயர்ந்த தத்துவக் கொள்கையும் எளிமையிற் செறிவு தோன்ற அமைத்த கவிமணியின் ஒட்பத்தை உணர்க.

தூய உள்ளமே இறைவன் இருப்பிடம் என்கிருர்:

"ஆல யங்கள் ஏனையா? அபிஷே கங்கள் ஏனையா?
கோலங் கொடிகள் ஏனையா? கொட்டு முழக்கம் ஏனையா?
பாலும் பழமும் வைத்து நிதம் பணிந்து நிற்ப தேனையா?
சீலம் பேணும் உள்ளத்தைத் தெய்வம் தேடி வாராதோ?"

இது, 'நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்' என்ற சிவவாக்கியர் பாடலையும், 'என்னுளம் நிற்றிநீ....நான் பூசை செய்யன் முறையோ?' என்ற தாயுமானவர் பாடலையும் நினைவூட்ட வில்லையா?

'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே!' என்னும் மணிவாசகர் மணிமொழியை, "அன்னே! அப்பா! நின் கோயில் அடிமையாக அணுகிய பின், என்னே யானும் அறிவேனே? யான் செய் கருமம் எனதேயோ?" என்னும் அடிகள் நினைவூட்டுகின்றன.

ஓரிடத்தில், 'வெய்யிற்கேற்ற நிழலும், வீசுந் தென்றற்காற்றும், கையிற் கம்பன் கவிதையும், கலசம்நிறைய மதுவும், தெய்வ கீதம் பலவும், தெரிந்து பாட நீயும்' இருக்கும்போது 'இவ் வனமே வாழும் சொர்க்கம்' என்கிருர். கம்பன் கவிதை கவிமணியின் சரக்கு. மற்ருேரிடத்தில்,

"ஆழி சூழ உலகாளும் அரச ஞக வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னைநீ மறந்து வாழ வேண்டுமடா!
ஏழை யாகி எளியவரின் எளிய ஞக வேண்டு மடா
தோழ ஞகி யாவர்க்கும் தொண்ட ஞக வேண்டுமடா!"

என்று உண்மை வாழ்வையுங் குறிக்கிருர்.

5. மலரும் மாலையும்

இதுவரையிற் கூறிய நான்கு நூல்களுமன்றி மற்றைய செய்யுட்களை யெல்லாம் 'மலரும் மாலையும்' எனத் தொகுத்திருக்கின்றனர். முற் குறித்த 'ஆசிய ஜோதி'யும் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இது பல பிரிவுகளாக உள்ளது.

முதற் பிரிவாகிய பக்தி மஞ்சரியிலே அழகம்மை ஆசிரிய விருத்தமும், முருகன் புகழ்மாலை, செந்திற் குமரன் என்னும் பாடல்களும் உள்ளன. கவிமணி ஆஸ்துமா நோயாற் கலங்கிப் பாடியவை செந்திற் குமரன் பாடல்கள். கோவில் வழிபாடு உள்ளம் ஒருமையிலார்க்குப் பயன் தராது என்னும் கருத்தைத் தருகிறது.

"தில்லைப் பதியுங் கண்டேன்-அங்குச்-சிற்றம்பலமும் கண்டேன்
கல்லைக் கனி செய்வோனைத்-தோழி!-கண்களாற் கண்டிலனே'

"உள்ளத்தில் உள்ளான் அடி!-அது நீ-உணர வேண்டும் அடி!
உள்ளத்தில் காண்பாய் எனில்-கோயில்-உள்ளேயுங் காண்பாயடி"

என்கிறார் கவிமணி.

இரண்டாவது இலக்கியப்பகுதி. இதனில் வள்ளுவனும் குறளும், கம்பனும் ஔவையும் பாராட்டப் பெற்றுள்ள பகுதிகள் முன்னமைந்துள்ளன. 'வையம் புகழ் ஞானி' யான வள்ளுவன், 'தறியில் ஆடை நெய்தோன்-தமிழில்-தரும நூல் நூற்றேன்' எனவும், 'நாலாரணப் பசுவை நாடிக் கறந்தளித்த பாலாகும் என்று குறளை உலகம் பாராட்டும்' எனவுங் கூறுகிறார். கம்பனை, 'நயந் தெரிந்து கதை நடத்தும் நாடகக் கவிஞன்' என்றும், கம்பன் எழுதிய 'காலை மாலை ஓது கவி கனலில் வெந்து எரிந்திடாது' என்றும் கூறுகிறார். 'நெல்லிக் கனியைத் தின்றுலகில் நீடு வாழும் தமிழ்க் கிழவி ஔவை' என்கிறார்.

பிற்காலக் கவிஞர்களிற் பாரதியைப், 'பாட்டுக் கொரு புலவன் பாரதியடா' என்று பாராட்டிப் பாடியதைத் தமிழ் நாடறியுமே. அப் பாட்டிலே பாரதியின் பாடல்க ளெல்லாம் வந்து கிளர்ச்சி செய்கின்றன. பாரதி மண்ட டங் கட்டியதற்கும் அதனைத் திறந்ததற்குங்கூடப் பாடி யிருக்கிறார். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளைக்குப் பாமாலையே புனைந்து வைத்துள்ளார். 'செந்தமிழின் தெய்வச் சிறப்பெல்லாம் யாருரைத்தார் சுந்தரனைப் போலத் தொகுத்து' என்று பேராசிரியரைப் பாராட்டு வது நம்மை யெலாம் களிப்பூட்டுகிறது. 'ஆறுமுக நாவலர் கோன் தோன்றிய நன்னாள் புண்ணிய நாள்' என்கிறார்.

மூன்றாவது சரித்திரக் கவிதையில் முதலில் மீராபாயின் வரலாறு மிக அழகாக அன்புச்சுவை ததும்ப அமைந் துள்ளது. பின்னர், 260 ஆண்டுகட்கு முன் திருவிதாங் கூரை ஆண்ட உமையம்மை இராணி மக்களை இழந்து மன மொிந்து கூறியதாக அமைத்த பகுதி நெஞ்சைக் கனற்று கிறது. இயேசுப் பெருமான் சிலுவையில் அறையுண்ட செய்தி இரக்ஷகர் என்னுந் தலைப்பிலே வந்துள்ளது. 'யாதும் அறியாதார்-அவர்பிழை-யாவும் பொறுத்திடு வாய், நாதனே!' என அப் பெருமான் வேண்டும் வேண்டு கோள் நம் நெஞ்சைச் சிலிர்க்க வைக்கிறது.

குழந்தைச் செல்வத்தில் வந்தவைகளே மழலை மொழி, இயற்கை இன்பம், காட்சி இன்பம், கதைப் பாட்டு என்பவை.

உள்ளமும் உணர்வும் என்னும் பிரிவில் பல ஆங்கிலப் பாடல்களின் கருத்துக்கள் வந்துள்ளன. குழந்தை என் னும் பாடலில் 'எங்கும் நிறை வெளியில் இருந்தேன்— சற்றே—இங்கும் இருக்க வந்தேன் அம்மா!' என்று தன்னை அறிமுகம் செய்துகொள்ளும் குழந்தையிடம்

அன்னை வினவும் வினாக்களும் குழந்தையின் விடைகளும் இனிமை மிக்கவை. குழந்தையின், 'இன்பச் சிறுகரங்கள் எவ்வாறமைந்தன?' என்னும் அன்னைக்குக் குழந்தை கூறுகிற, 'அன்பு விளைந்திவ் வுருவாகி-என்னை-அண்டி அணைந் திருக்கு தம்மா!' என்னும் விடையிலே இன்பம் நிறைந்திருப்பதை நோக்குக! முதல்துயரம் என்னும் பாடலிலே தம்பியை இழந்த தமக்கையான சிறுமியின் அவல நிலை கண்ணீர் வரச் செய்கிறது. தம்பியில்லாமல் எவையும் அவளுக்கு அழகு தருவதில்லை. அவனை அழைத்து வரும்படி அன்னையை வேண்டுகிறாள். அன்னையோ, 'ஈசன் சந்நிதியில் விளையாடி யிருக்கிறான்' என்று தேறுதல் கூறுகிறவள் துயரத்தால் நிலை மறந்து, 'நம்மையெல்லாம் மறந்து போனானோ?' என்னும்போது நாம் நம்மை மறக்கிறோம். இயற்கைக் காட்சியிலே இறைவனைக் காணும் கவிமணியின் கருத்துக்கள் **எனது சுக துக்கங்கள்** என்னும் பாடலில் வருகின்றன. இப்பாடலில், 'புல்வளர் கானத்திலே-கலையினம்-பொங்கிக் குதிக்கையிலே-கொல் கடுவாய் வரவே-நெஞ்சத்தில்-கூரம்பு பாய்ந்ததடி' என்பது போன்ற இன்ப துன்பக் காட்சிகளும் அமைந்துள்ளன. பறவையின் சிந்தனைகள் சிறிது சிறிதாக உலக அறிவு பெருகுந்தோறும் உண்டாம் வியப்பைச் சித்திரிக்கின்றன. முதற் சிந்தனை ஆங்கிலப் பாடலொன்றைத் தழுவியது. **குருட்டுப் பையன்** 'ஆதித்தன் சோதிமயம் என்பீர்; எனதளவில் வெம்மை யெனத் தோன்று மிவன் செயலால் இரவு பகல் மாறிவரல் எங்ஙன் அறிவேன்?' என்றாலும், உலகைக் காணாதிருப்பதால், 'ஒரு காலும் நீக்க முடியாத இக்குறை வந்தென் உளத்திலெழும் பெருங் களிப்பை அழித்திடலாகாதே' என்கிறான். உண்மைதானே!

வையமும் வாழ்வும் என்னும் கவிதைகளில் இயற்கை வாழ்வு என்னும் கவிதை பறவை வாழ்வைக்கண்டு பொருமைப்படுவதுடன், ருஷியாவும் பறவையிடம் பாடங் கற்றிருக்க வேண்டும் என்கிறது. ஞாேேபதேசம் ஒரு வங்காளிப் பாடலைத் தழுவியது. இராம கிருஷ்ண பரம அம்சர், அவருடைய பிரார்த்தனை, சாரதாதேவி, விவேகானந்தர், இராமதீர்த்தரின் போதனை, வாழ்க்கைத் தத்துவங்கள், புல்லின் தன் வரலாறு, மலையும் அணிலும், உத்தம ஜீவிதம், அழியா உயிர்ப்பு, உண்மை கண்டவர் யார்? ஒத்துழைப்பு என்னும் பாடல்கள் இனிமையாக இருப்பதுடன் நன்னெறியையும் கற்பிக்கின்றன.

சமூகத்திற்குக் கூறும் அறவுரைகள் சமூகம் என்னும் பிரிவில் உள்ளன. பெண்களின் உரிமைகளைக் கூறும் போது 'மங்கையராகப் பிறப்பதற்கே-நல்ல-மாதவஞ் செய்திடவேண்டும் அம்மா!' என்று பாராட்டுகிருர். பெண்ணொருத்தி மனைவியாகவும் தாயாகவும் இருந்து செய்யும் பணிகள் வாழ்க்கைக்கு எவ்வாறு இன்பஞ் செய்கின்றன என்று தெளிவுற எடுத்துக்கூறுகிருர்; ஒற்றுமையே உயிர்நிலை என்னும் பாடலில் சாதிக் கொடுமை வேண்டா என்பதை அழகுற எடுத்துக் காட்டுகிருர். இதுவும் தீண்டாதார் விண்ணப்பமும் கவி மணிக்குச் சாதிப்பிரிவினையால் உண்டான மனத்துய ரைக் காட்டுகின்றன.

'ஈனசாதி யெனும் பேச்சினைப் போல்-நெஞ்சை-ஈர்த்திடும் வாளொன்று வேறுளதோ?' 'வேதியராலே மழை வருமேல்-வயல்-வேலைசெய்யாது விளைந்திடுமோ?' என்று வினவுகிருர்.

'பூவாரம் அணிந்த பிரான் பொன்னடிக்கீழ் நின் றெளியேம் - தேவாரம் பாடில்அவர் செவிக்கின்பம் ஆகாதோ?' என்று கூறும் கவிமணியின் பொன்னுள் ளத்தை நோக்குக. அவருக்குத் தீண்டாமைமேல் வரும் வெறுப்பைக், 'கள்ளுடனே ஆடு கோழி கலந்துண்ணும் காளிதேவி-உள்ளிருக்கும் கோயிலிலே உரிமை எமக் கிலேயோ?' என்னும் வினவில் காண்க. தீண்டாதார்க் காக அவர் உள்ளம் வருந்தியதை 'ஹரிஜனர்க்காக வருத் தம்' என்னும் இசைப்பாட்டுக் காட்டுகிறது. அப் பாட லில், 'இந்தப் பிறப்பு வேண்டாம்-இது வொழிய-எந்தப் பிறப்பும் வரட்டும்' என்னும்போது நாமும் அவ்வாறே விரும்பி நிற்கிறோம். தீண்டாமைப் பேயின் கொடுமை யைப் 'பாரத நாட்டைப் பாழாக்கிய பேய்' என்னும் ஒரு சொல்லே நமக்கு விளக்கி வைக்கிறது.

'முன்னம் பெரியோர் இதனை—வெட்டி
மூடிப் புதைத்தும் உயிர்வலி கொண்டு
பின்னும் முளைத்ததே! ஐயா!—இது
பேய்களும் அஞ்சும் பெரிய பேய் ஐயா!'

எத்துணை உண்மை! இந்தப் பேயைக் கப்பலில் ஏற்றி நடுக்கடலில் தள்ளுவோம் என்று நம்மைக் கூப்பிடுகிறார்.

பிச்சைக்காரர் கும்மாளம் கவலையில்லாமையைக் கூறுவதுபோல், அவர் தாழ்நிலையை எடுத்துக் காட்டு கிறது. செல்வச்சிறுமியர் களிப்பும் ஏழைச்சிறுமியர் மனப் புழுக்கமும் ஏழைக்குழந்தைகளின் நிலையை எதிர் மறையாலும் உடன்பாட்டாலும் அமைத்துக் காட்டு கின்றன. இப் பகுதிகள் குசேலர்குழந்தைகள் தாயிடம் முறையிடும் பகுதியை நினைவூட்டுகின்றன. ஏழைச் சிறுமியர் 'அன்னப்பால் காணாத ஏழைகட்கு- நல்ல -

ஆவின்பால் எங்கே கிடைக்கும் அம்மா' என்று கூறுவது உள்ளத்தைப் புண்படுத்துகிறது. 'சுற்றிய கந்தை ஒரு முழமாம் - அதில் - தோன்றிய பீறலும் ஆயிரமாம்' என்னும் உண்மையை எடுத்துக் காட்டும்போது இத்தகைய உலகிலும் பிறந்தோமே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

தொழிலாளியின் முறையீட்டிலே, 'பாடுபடுபவர்க்கே-இந்தப் பாரிடம் சொந்தம்' என்பது, 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்-உண்டு களித் திருப்போரை நிந்தனை செய்வோம்,' என்னும் பாரதியின் கொள்கையினும் விஞ்சி நிற்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தில், வீடு விற்றும் விளை நிலம் விற்றும் பெற்ற படிப்பு, வாடும் பசியை மாற்றவில்லை என்கிறார் ஒரு பண்டிதர். அவர் பண்டிதர் பலரிடம் மட்டிலாத மதிப்புரை வாங்கினாராம். எனினும் துட்டிலாது சுழன்று கறங்கும் இக் கட்டம் நீங்க வழியினும் கண்டிலராம்! இரக்கம் மிகுகிறது இவர் நிலை! 'இனி, நெஞ்சில் நூலை நினைப்பது விட்டுப் பஞ்சின் நூலிற் பழகத் துணிகுவேன்' என்கிறார். கவிமணிக்கு நூல் நூற்றலும் கதர் உடுத்துவதும் நாட்டின் வறுமையைப் போக்கும் என்பதில் உள்ள நம்பிக்கையே இவ்வாறு கூறச் செய்தது. அந்தோ! பஞ்சின் நூலிற் பழகும் பல்கோடி நெசவாளர் படுந்துயரம் பகர்தற் குண்டோ?

தேசியம் என்னும் பகுதி, தேசக் கொடியின் சிறப்பு, காங்கிரஸ் கப்பல், கதர் விற்பனை, வட்ட மேசை மாநாடு, சுதந்திரம், குடியரசு வாழ்த்து என்னும் பாடல்களால் நிரம்பிக் கவிமணியின் தேசியப் பற்றை அறிவிக்கிறது.

'நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துப் பெற்ற சுதந்திரத்தைப் பேணுவோம்' என்கிறார். 'அண்ணல் காந்தி வழிபற்றி அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்' என்கிறார். 'கதர் விற்பனையிலே தொழிலாளிகளையும் 'மில்'லையும் ஒன்றாக எண்ணலாமா?' என்பதை அழகுற எடுத்துக் காட்டுகிறார். 'மில்லினுக்கு வாயுமுண்டோ வயிறுமுண்டோ- அதை-விட்டு விலகாத மக்கள் கூடவுண்டோ?' என்று வினவுகிறார்.

வாழ்த்துப் பகுதியில் கவிமணியால் வாழ்த்தப் பெற்றோரெல்லாம் வருகின்றனர். திருவிதாங்கூரில் கவிமணி காலத்திலே ஆண்ட மன்னர்கள், உமையொருபாகக் குருக்கள், அண்ணாமலை மன்னர், ஆர். கே. சண்முகஞ் செட்டியார், இராஜாஜி, வ. உ. சி., சுத்தானந்த பாரதி முதலாகப் பலரும் வாழ்த்தப்படுகின்றனர். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் 'எண்பதாண்டான இளைஞர்' ஆகக் காட்சியளித்தனர். டி. கே. சி. அறுபதாவது ஆண்டு நிறைவுக்குக் கூறிய ஆசியில் 'பன்னும் நம் நாடு மகிழச் சிதம்பர நாத நண்பா! நீடு நீ வாழ்க நிலைத்து' என்பது நட்பின் சிறப்பைக் காட்டுகிறது.

சரமகவிகள் நெஞ்சுருக்குந் தன்மையன. காந்தியடிகளின் பிரிவாற் கலங்கி, 'உடம்பனைத்தும் வாயாக அழுதாலும் உறுதுயரம் ஒழிந்திடாதால்' என்கிறார். உண்மையே.

இறுதியாகக் கதம்பம் உள்ளது. இப்பகுதியில் நாஞ்சில் நாட்டின் வாழ்த்தும், நாஞ்சில் நாட்டு வேளாளர் பாக வழக்கும் கவிமணிக்குத் தம் நாடு நன்னிலையடைய வேண்டும் என்பதில் உள்ள மட்டற்ற ஆர்வத்தைக் காட்டுகின்றன. பல பள்ளிகளையும் நிலையங்களையும்

பத்திரிகைகளையும் வாழ்த்தியிருக்கிறார். இவற்றை வாழ்த்துப் பகுதியிற் சேர்த்திருக்கலாம். வீர பாண்டியக் கட்ட பொம்மனைப் பாடியிருக்கும் செய்யுட்கள் வீரத்தை விளைவிக்கின்றன. 'மானங் காத்த பாண்டியன்' 'காய்ந்து போரில் வெள்ளையரைக் கலங்கச் செய்த ஆண் சிங்கம்' ஆகிய கட்ட பொம்மன் 'மான முற்றும் விலை கொடுத்து மண்ணை வாங்கி அரசாளும், ஈன வாழ்வை உள்ளத்தில் எள்ளத்தனையும் எண்ணாதோன்' ஆக நம் முன் நிற்கும் போதாவது நம் உள்ளம் வீரச் சுவையைச் சிறிது சுவையாதா?

முத்துக் குவியலில் அமிழ்ந்துறையும் மணிகள் ஓர் ஆங்கிலப் பாடலைத் தழுவியனவாக வருகின்றன. ஆழ் கடலின்கீழ் அளவிறந்த மணிகளும் பாழ்நிலத்தில் பூத்த பல கோடிப் பனி மலர்களும் போலவே, 'கடல் சூழ்ந்த உலகு புகழ் காவியம் செய்யாமல் கண்மூடும் கம் பருக்கும் கணக்கில்லை' யென்று கூறுவது எத்துணை உண்மை! இப் பகுதியில் வரும் டி. கே. சி. இரங்கற் பாவில், தம்முடைய 'பண்பமைந்த பாவின் நய மறிந்து' பாராட்டியதும், 'அன்னைபோல் அருவியில் நீராட்டி இன்னமுதும் பக்கத்திருந் தூட்டித் தங்கு தங்கு!' என்று சொன்னதும் எடுத்துக் கூறப்படுகின்றன.

'என்னருமை நண்பா! இனிய கலை ரசிகா!
தன்னிக ரில்லாத் தமிழ்ச்செல்வா!—மன்னுமுளம்
தத்தளித்து நின்றுன் சரமகவி பாடுதற்கோ
இத்தனைநாள் வாழ்ந்திருந்தேன் யான்?'

என்னும் செய்யுள் நம் நெஞ்சை உருக்குகிறது.

பொதுவாக 'மலரும் மாலையும்' நம் தமிழன்னைக்கு நறுமணம் மிகுந்த பொன்மலராக என்றும் நிலவும் என்பதில் ஐயமில்லை.

6. தே. வி. கீர்த்தனங்கள்

இவை தமிழிசை இயக்கத்தின்போது மலர்ந்தவை. பலவும் கலைமகள் முதலான இதழ்களிலே வெளிவந்தவை. இக் கீர்த்தனங்கள் சிவபெருமான், உமையம்மை, முருகன், கணபதி, திருமால், கலைமகள் முதலான தெய்வ வழிபாட்டுப் பாடல்களாகவும் காந்தியடிகள், அண்ணுமலை செட்டியார், ஆறுமுக நாவலர் போன்ற பெரியோர்களைப் பற்றியவைகளாகவும், கல்விச்சாலை, சரத்காலம், சுதந்திரக்கொடி, ஆதிப் பொதுமறை, பாரதி மண்டபம் முதலானவற்றைக் குறிப்பனவாகவும் உள்ளன.

தெய்வ வழிபாட்டுப் பாடல்களிலே சிலவற்றில் உலக நிலையாமை, தெய்வ அருளின் இன்றியமையாமை முதலான கருத்துக்கள் நம் நாட்டுப் பெரியோர்கள் கூறியவாறே அமைந்துள்ளன. சில பாடல்களில் இறைவன் காதலனுக அமைத்துப் பாடும் முறை உள்ளது. அறவாழி அந்தணன், எங்கும் நிறைந்தவன், ஏக பரம் பொருள், இயற்கையில் ஈசன் என்பன போன்ற சமயப் பொதுப் பாடல்களும் உள்ளன. இவையாவும் உள்ளத்தை உருக்கும் இனிய சொற்களும் பொருள்களும் உடையவை. நாடு செழிக்க அருளும்படி இறைவனிடம் வேண்டும் விண்ணப்பம் இராக தாள மாலிகையில் விருத்தப் பாவில் அமைந்துள்ளது மிக இனியது. இது 'மலரும் மாலையும்' என்ற தொகுதியிலும் கதம்பத்தில் வந்துள்ளது.

பழந்தமிழ் நூல்களிலே கீர்த்தனை முறை இல்லை. பண்ணும் இசையுமே அமைத்துப் பாடி வந்தனர். பரிபாடல் என்னும் நூலிலே பண்ணும் இசையுமே காணப் படுகின்றன. இந்நூல் பாடுபவர் ஒருவராகவும் பண்ணும்

இசையும் அமைப்பவர் வேருெருவராகவும் இருக்கலாம் என்பதற்கும் சான்ருக இருக்கிறது. இக் காலத்தும் இம் முறை பின்பற்றப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாருரையிலே காணப்பெறும் நூல்களும் கீர்த்தன முறையிலே அமைந்தவை என்பதற்குச் சான்றெதுவும் இல்லை. தேவாரம் பண்ணும் இசையும் கொண்டதே. திருவாய்மொழியும், திருப்புகழும் கீர்த்தனை முறை கொண்டவை யல்ல. அருணசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனையே கர்நாடக இசையைத் தமிழில் சேர்த்த முதல்நூல் எனலாம். இவர் நூலுக்குப் பிறகு கீர்த்தனைகள் பெருகியுள்ளன. கவிமணியின் கீர்த்தனங்கள் இம் முறையிலே அமைந்தவை. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற பிரிவுகளையுடையவை. சில இடங்களிற் பல்லவியும் சரணங்களுமே உள்ளன. சில இடங்களிற் பல்லவி, கண்ணிகள் என்ற அமைப்பும் உள்ளன. தனிக் கண்ணிகளும் உள்ளன.

நம் கவிமணி இயற்றமிழிலே யன்றி இசைத்தமிழிலும் பாடல்கள் அமைப்பதிற் சிறந்தவர் என்பதற்குக் கீர்த்தனைகள் சான்ருக உள்ளன.

உ. உரைமணிகள்

தே. வி.-அவர்களைக் கவிமணி என்பதுடன் உரைமணி என்றுங் கூறலாம். அவர் உரைநடைகளைக் கவிமணியின் உரைமணிகள் என்னும் பெயருடன் வெளியிட்டிருக்கின்றனர்.

இந்நூல் அவருடைய சொற்பொழிவுகள், கட்டுரைகள், கல்வெட்டு ஆராய்ச்சி என்னும் மூன்று பிரிவுகளாக அமைந்துளது. சொற்பொழிவுகள் மூன்றும் மேடைப் பேச்சு என்னும் பெயருடன் உள்ளன. அவை தலைமையுரை, வரவேற்புரை, திறப்புரை எனப்படும்.

1. சொற்பொழிவுகள்

1. தலைமை உரை:

சுசீந்திரம் தேவாரப் பாடசாலையின் எட்டாவது ஆண்டு விழாவின் போது (15-9-1924) கவிமணி தலைமையேற்றுப் பேசினர். அப்போது கூறிய சிறந்த கருத்துக்கள் வரவேற்கத் தக்கவை.

சிவபிரான் திருக்கோயில்களில் தேவாரம் ஆகிய தமிழ் மறையை, வந்து வணங்கும் அடியாருடைய உள்ளம் இறைவனன்பிலே ஈடுபடவே ஓதும்படி தமிழ்மன்னர்கள் மானியங்கள் கொடுத்து ஓதுவார்களை அமர்த்தி இருக்கிறார்கள். இறைவன் திருமுன்னே உள்ளத்தை உருக்கும் இசைப் பாடல்களைப் பாடும் பேறு—அவ்வாறு பாடுவதை மற்றோரும் கேட்டு மனத்தையுருக்கி நிற்கும் பேறு—எல்லார்க்கும் கிடைப்பது அரிது. அப் பேற்றுக்குக் கைம்மாறாகக்—கரும்பு தின்னக் கூலி கொடுப்பது போல-மானியங்களும் முதலிராசராசன் காலத்திலிருந்து கிடைத்துள்ளன. ஆகவே, இப் பணியிலே மனம் நன்

ருக ஈடுபட்டு ஒழுங்காகச் செய்ய ஓதுவார்கள் கடமைப் பட்டுள்ளனர். அத்தகையோர் தேவார திருவாசகங்களைப் பொருளறியாமற் பாடுவது எத்தகைய தவறென்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமா? கவிமணியின் மனம் ஓதுவார்கள் இவ்வாறு பாடுவதைக் கண்டு கொதிப் படைந்து விட்டது.

ஆகவே, அவர்கள் பொருளறியாமற் பாடுவதைக் கவிமணி இடித்துக் காட்டி யிருக்கிறார். 'அரியானை அந் தணர்தம் சிந்தையானை' என்னும் பாசுரந்தான் பலருக் குந் தெரியுமாம். வழிபாட்டின் இறுதி வேளையில் அடி யார் குழு ஆரவாரத்தில் ஈடுபட்டிருக்கும்போது இதனைப் பாடுவார்களாம். 'அரியானை என்ற மொழி மட்டும் எடுப்பாகக் கேட்கும். இடையிடையே சில ஆனைகள் வரும். சங்கு ஊதுகிறவனிடம் சொல்லிவைத்திருப்பார். இவர் கடைசி அடி எடுக்கும்போது அவன் சங்கு முழக்கி விடுவான்' என்கிறார். சாதாரணமக்கள் இதனை ஆனைப் பாட்டு என்பார்களாம். எவ்வாறிருக்கிறது தேவாரப் பத்திப் பெருக்கு! சில ஓதுவார்கள் 'காட்டினாய் கழுக் குன்றிலே' என்பதைக் 'காட்டில் நாய் கழுக்குன்றிலே' என்று பிரிப்பார்களாம். இத்தகைய ஓதுவார்களைப்பற்றி அழுவதா? நகைப்பதா? இவர்களை நல்ல தமிழறிவில்லா மல் ஓதுவதற்கு இடந்தரலாகாது என்னுங் கவிமணியின் விருப்பம் நிறைவேறுமாக!

தேவாரத் திருமுறைகள் பன்னிரண்டுடன் திருப் புகழையும் திருவருட்பாவையும் சேர்த்துவிட வேண்டும் என்று கவிமணி கூறுகிறார். சித்தாந்த சைவர்கள் மனந் திரும்புமா? இன்னும் அருட்பா மருட்பா மருட்சி இருக் கிறதா?

திருக்கோயில்கள் சிற்பக் கலைக்கும் இடமாயுள்ளன. நம் நாடு திருக்கோயில்களிலுள்ள சிற்பங்களாலேதான் கலையுணர்ச்சிக்குப் பெயர் பெற்றுள்ளது. எனினும், சிற்பங்களினிடையே கண்ணால் காண அருவருக்கும் இழிந்த சிற்பங்களும் இருக்கின்றன. இவை எப்படிப் புகுந்தனவோ? உடனே அவற்றை அகற்ற வேண்டும் என்பது கவிமணியின் கருத்து.

கவிமணி கூறிய மற்றொரு கருத்து அரசாங்கத்தாரின் சிந்தனைக்கு வரவேண்டியதேயாகும். புராணச் சார்பான சிற்பங்களை விளக்கிக் கூற ஒருவரை அமைக்க வேண்டும். திருக்கோயிலில் வழிபடும் முறையையும் அவர் வருவோருக்குக் கூற வேண்டும். இவ்வாறு இல்லாததால் அறிஞர்களும் மயங்கி விடுகிறார்கள் என்று அவர் பல சான்றுகள் எடுத்துக்காட்டியுள்ளார்.

மற்றும் முற்காலத்தில் கோயில்களிற் பள்ளிக்கூடங்களும் மருத்துவக்கூடங்களும் இருந்தன என்பதைக் கல்வெட்டுக்கள்மூலம் அறியலாம் என்று எடுத்துக் காட்டி இனியும் அவ்வாறு அமைக்கவேண்டும் என்கிறார்.

2. வரவேற்புரை :

நாகர்கோவிலில் (14-5-1948-இல்) நடைபெற்ற எழுத்தாளரின் மூன்றுவது மாநாட்டிலே நிகழ்ந்தது வரவேற்புரை.

இவ்வுரையிலே பல அரிய கருத்துக்கள் உள்ளன. சேரர்களிலே ஞானவுலாவும் பொன்வண்ணத் தந்தாதியும் பாடிய சேரமான் பெருமாள் நாயனரும், பாலைக் கலி பாடிய பெருங்கடுங்கோவும், புறப்பொருள் வெண்பா மாலை பாடிய ஐயனரிதனரும், பெருமாள் திருமொழி

பாடிய குலசேகர மன்னரும் தமிழ்த்தொண்டு புரிந்ததை எடுத்துக் காட்டுகிறார். தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டபோது தலைமை பூண்ட அதங்கோட்டாசிரியர் நாஞ்சில்நாட்டிலே விளவங்கோட்டுத் தாலூகாவில் உள்ள அதங்கோடு என்னும் ஊரினர் என்கிறார்.

திருவிதாங்கோடு என்பது கல்வெட்டுக்களில் முதாங் கோடு என்று காணப்படுகிறது. திருவிதாங்கோட்டுக் கோயிலில் வடமொழியில் பொறிக்கப்பட்ட கல்வெட் டொன்றில் 'வடக் ரோட தேவ' என்னும் பெயர் உள் ளது. வடக் ரோட தேவ என்பது ஆலமரப் பொந்தி லுள்ள கடவுள் என்று பொருள்படும். அப்படியானால், மூதாலங் கோடு என்பது நாளடைவில் முதாங்கோடு என மாறிப் பிறகு 'திருமுதாங்கோடு' 'திருவிதாங் கோடு' ஆகியிருக்க வேண்டும். இது ஆங்கிலத்தில் 'ட்ரா வன்கோர்' என ஆகித் திரும்பித் தமிழிலும் திருவாங் கூர் ஆகிவிட்டது என்று கவிமணி கூறுகிறார். இவ் வாறு தமிழ்நாட்டின் ஊர்கள் எத்துணையோ திரிந் துள்ளன.

நாஞ்சில் நாட்டில் முன்னாளில் தமிழ் வழங்கி வந்த தென்பதற்குத் திருவிளையாடலிலுள்ள வலைவீசு பட லத்தை மலையாளமொழியில் வலைவீசு புராணம் என எழுதி வைத்திருப்பதையும், அப் புராண எழுத்துக்கள் மலையாளமே ஒழிய ஒலியெல்லாம் தமிழாகவே யிருப் பதையும் எடுத்துக் காட்டுகிறார். அரிச்சந்திர வெண்பா என ஒரு நூல், திருவாங்கூர் அரண்மனையிலுள்ள கையெ ழுத்துப் பிரதிகளில் ஒன்றாக இருந்ததாம். அதுவே அரிச்சந்திர புராணத்திற்கு முதனூலாக இருந்ததென, 'அரிச்சந்திரன்றன் வியன்கதையாம் வெண்கவியை

விருத்தமாக்கி' என வரும் ஒரு செய்யுளின் அடி தெரிவிக்கிறது.

3. திறப்புரை :

இது கன்னியாகுமரியில் (6-1-50-இல்) நடைபெற்ற தமிழ் நாட்டின் தென்குமரி எல்லை மாநாட்டைத் திறந்து வைத்தபோது நிகழ்த்தியது. கன்னியாகுமரியில் பகவதியைத் தென்னவர் தங்குல தெய்வம் என்றும், பாண்டியனைக் குமரிச் சேர்ப்பன் என்றும் கூறுவதையும் கன்னியாகுமரியில் உள்ள கோயில்களில் உள்ள கல்வெட்டுக்கள் சோழர்கள் பராந்தக பாண்டியன் ஆகியவர்களுடையனவாக இருப்பதையும் வேறு பல சான்றுகளையும் எடுத்துக் காட்டித் தமிழ் நாட்டின் தென் எல்லையிலே நாஞ்சில் நாடு வருவதை நிறுவி யிருப்பது கவிமணி யவர்களின் வரலாற்றுராய்ச்சித் திறனை விளக்குகிறது.

2. கட்டுரை மணிகள்

இப் பகுதியில் திருவள்ளுவர், தெய்வப் புலவர் என்னுங் கட்டுரைகளில் திருவள்ளுவர் சமணர் என்று குறிப்பிடுகிருர். 'ஒருக்கால், திருவள்ளுவர் சைவராகவோ, வைணவராகவோ, சமணராகவோ, பௌத்தராகவோ இருக்கலாம். ஆம்; அவர் சமணராகவே இருக்க வேண்டும். அதற்குரிய காரணங்களைப்பற்றி இங்கு நான் விரித்துக் கூற விரும்பவில்லை' என்று திருவள்ளுவர் என்ற கட்டுரையிலே குறிப்பிடுகிருர். இது சிந்தனைக்குரியது. இன்ன சமயத்தினர் என்ற முடிவுக்கு வரத் திருக்குறளில் எவ்வகைச் சான்றும் இல்லை. இதற்கு மாருக எல்லாச் சமயத்தினரும் தம் தம் நூல் என்று கூறவே சான்றுகள் உள்ளன.

தெய்வப் புலவர் என்ற கட்டுரையில்,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'

என்ற திருக்குறளுக்குப் பரிமேலழகர், 'தன் கணவனை யன்றிப் பிற தெய்வங்களைத் தொழாத கற்புடைய மங்கை மழையைப் பெய்யச் சொன்னால் அது பெய்யும்' என்ற கருத்துப்படக் கூறுகிறார். இக் கருத்து மணிமேகலை யிலும், 'மழை பெய்விக்கும் தலை சிறந்த கற்புடையவ ளாக நீ ஆக முடியாது; எனினும், கற்புடையவளே' என்று சதுக்கப் பூதம் ஒன்று ஒரு பெண்ணிடம் கூறியதாகக் கதையுண்டு. எனவே, தலைசிறந்த கற்பு டைய பெண்கள் மழை பெய்விக்கும் ஆற்றலுடையவர் கள் என்ற கருத்தொன்று தமிழ் நாட்டில் உலவி வரு கிறது. இது நிகழத்தக்கதன்றென்று கருதிய ஒருவர் இத்தகைய மங்கை, பெய்யென்றவுடனே பெய்யும் மழை யைப் போன்றவள் என்ற பொருள் கூறினார். இதில் கற்புடைய பெண்ணுக்கு மழை பெய்விக்கும் ஆற்றல் உண்டாகும் என்பது உயர்வு நவிற்சியெனக் கொள்ளலா மென்பது கவிமணியின் கருத்து. இக் கருத்தைக் கூறி ஆசிரியர் கருத்தை நன்றாக அறிந்தே பொருள் கூற வேண்டும் என்கிறார். இது வரவேற்கத் தக்கதே. ஒருவர் நூல்செய்யுங் காலத்திலே உள்ள சூழ்நிலை அவர் செய்யும் நூலிற் பதிந்திருக்கும். அதனையறிந்து நூலை மதிப்பிடுதலே ஆராய்ச்சிக்குத் தகுதியாகும். நம் கருத்தை யெல்லாம் ஒரு நூலிலே ஏற்றுதல் தகவன்று. பெண்களுக்குச் சமவுரிமை நல்க விழையும் இந் நாளிலே, வாழ்க்கைத்துணைவியாக வந்த ஒருத்தி, தன்னைத் தெய் வத்தினும் மேலாக மதிக்க வேண்டும் என்று ஒருவன் கொள்ள வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள

மாட்டோம். வள்ளுவர் காலத்திலிருந்த தமிழ்நாட்டின் நிலை அது என்று கொள்ளவேண்டும். ஆனால், இத்தகைய சிறுமாறுதல்கள் வள்ளுவர் கூறும் அறம் எப்போதும் நிலைபெறக் கூடியது என்ற உறுதிக்கு மாறான தன்று.

மாணிக்கவாசகரைப் பற்றிய கட்டுரையிலே மாணிக்க வாசகர் காலம் தேவார ஆசிரியர்களின் காலத்திற்குப் பிற்பட்டதாகவே முடிவு செய்கிறார். மாணிக்க வாசகர் முற்பட்டவர் என்று கூறுவோர் கூறுங் காரணங்கள் சரியானவை அல்ல என்கிறார். ஆனால், பிற்பட்டவர் என்பதற்கு இவர் கூறுங் காரணமும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

'பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதம் கொடுத்தி'

என்ற மணிவாசகம் அப்பருக்கு ஏற்பட்ட சூலை நோயைத் தீர்த்ததைக் குறிக்கலாம் என்பதும்,

'பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தான்'

என்னும் திருவாசகம் திருஞானசம்பந்தருடைய பாடலுக்குப் பொற்றாளமும் முத்துச் சிவிகையும் பிறவும் சிவபிரான் பரிசாகக் கொடுத்ததைக் குறிக்கலாமென்பதும்,

'பாற்றிரு நீற்றெம் பரமனைப் பரங்கருணையோடும் எதிர்ந்து
தோற்ற மெய்யடியார்க் கருட்டுறை யளிக்கும் சோதியே'

என்பது சுந்தரருக்குத் திருமண நிகழ்ச்சியின்போது எதிர்வந்து தடுத்தாட்கொண்டதைக் குறிக்கலாமென்பதும் கவிமணியின் கருத்து. நடுநிலையாக ஆராய்ந்தால்

இத்தொடர்கள் பொதுவாகவே அடியார் பிணி தீர்க்கும் பெற்றியையும், பாடலுக்குப் பரிசுகொடுத்தருள்வதையும் அடியார்க் கெதிர்ந்து அருட்டுறை யளிப்பதையும் குறிக்குமென்று கொள்வதே பொருத்தம் என்றுணரலாம்.

தமிழிசையைப்பற்றிய கட்டுரையில் பாட்டை எழுதுவோரும் அதற்கு இசையமைப்போரும் ஒருவராகவே இருக்கவேண்டுமென்பதில்லை என்கிறார். அஃதொடு "தமிழிசைக்கென, தனிப் பத்திரிகை வேண்டும்; அது புதுப்புது வெளியீடுகளையும், புதிய கீர்த்தனங்களையும் சாகித்திய கர்த்தாக்கள் சங்கீத வித்துவான்கள் என்போரின் வரலாறுகளையும் தாங்கிவரலாம். அஃதோடு பாடகர்கள் பாட்டுக்களைக் கொலை பண்ணுமல் இருப்பதற்கான வழிவகைகளை எடுத்துக்காட்டி அறிவுறுத்திக் கொண்டுமிருக்கலாம்.........அதனுல் தமிழிசை பல வழிகளிலும் வளர்ந்து வருமென்று நம்புகிறேன்," என்று கூறியுள்ளனர்.

நம் கவிமணியவர்கள் தமிழிசைக்கு வாழ்த்தும் வழங்கியுள்ளனர்.

'வெந்தழல் நீராகும் வெள்ளெலும்பு பெண்ணுகும்
வந்தமத வேழம் வணங்கிடுமே—சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்.'

என்பது தம் உயரிய கருத்தைத் தமிழிசைக்குத் தெளித்துரைத்திருப்பதால் அறியலாம்.

கவிமணியவர்கள் தமிழிசைப் பாடல்கள் பல இயற்றி நாடக உலகிலும், திரையுலகிலும் நிலைபெற்ற இடம் பெற்றுவிட்டார். **'கோவில் முழுதும் கண்டேன்,' 'பாட்டுக் கொருபுலவன் பாரதியடா,' 'நல்ல சகுனம் நோக்கிச்**

செல்லடி,' 'சொன்னதெல்லாம் மறந்தாரோ,' 'தெள்ளத் தெளிந்த தையா' என்று தொடங்கும் இசைப்பாடல்கள், கேட்டார்ப் பிணிக்கும் தகைமையுடையன. தமிழிசை தழைக்க வேண்டும் என்ற பெருநோக்குடன் நம் கவிமணி இயற்றிய இத்தகைய இசைப்பாடல்கள், அவர்கள் நமக்கு விட்டுச்சென்ற செல்வங்களில் சிலவாகும்.

நாடகமே உலகம் என்னுங் கட்டுரையில் இக்காலத்தில் உள்ள நாடக வளர்ச்சியை இவர் ஒப்புக்கொள்கிருர் என்று தெரிகிறது. இங்கு நாம் ஒன்று சிந்திக்க வேண்டும். நாடகம் என்பது மக்களுக்கு வெற்றுப் பொழுதுபோக்காக இராமல், அவர்களை நல்ல நெறியிலே செலுத்துவதற்கும் பயன்படவேண்டும். அவர்கள் நாடகங்களிற் காணுங்காட்சிகள் அவர்களுள்ளத்திலே ஒரு நெறியை எப்படியாவது உருவாக்குகின்றன என்பது சிறிது சிந்தித்தாலும் உணரக்கூடியது. ஆகையால், இக்கால நாடகக் காட்சிகளும் படக்காட்சிகளும் பெரும்பாலும் மக்களுக்குத் தீமையையே விளைவிக்கின்றன எனலாம். ஆனல், நடிப்புக்கலை மிகச்சிறந்த முறையிலே வளர்ந்துள்ளது என்பது உண்மையே. இது மக்களுக்கு நன்னெறியை ஊட்டுந்திறமுடன் அமைந்துவிட்டால், 'பொன்மலர் நாற்றமுடைத்து' எனலாம்.

வ. உ. சி. அவர்களைப் பற்றிய கட்டுரையிலே, 'வட நாட்டிலே திலகர் பெருமான் எப்படிப் பூசிக்கப்படுகிருரோ, அப்படி வ. உ. சி. அவர்களும் பூசிக்கப்பட வேண்டியவர்' என்று பாராட்டுவது நம் உணர்ச்சிக்குரியதாகும்.

காந்தியண்ணலுக்குக் கைம்மாறு, 'அந்த மகான் என்னென்ன போதித்தாரோ, அவற்றை நாம் கற்றுக்

கடைப்பிடிக்க' வேண்டுவதே என்று கவிமணி கூறுவது வரவேற்கத்தக்கது. மற்றும், 'கோபுரம் எழுப்புவதும் நினைவு நிலையங்கள் கட்டுவதும் சிலைகள் அமைப்பதும் நம் பணக்கொழுப்பைப் புலப்படுத்துகின்றன' என்று கூறுகிறார். நம் நாட்டுமக்கள் இக்கருத்தைப் பின்பற்றுவார்களானால், நன்றாக இருக்கும்.

கவிமணி தமது இலட்சியம் என்று திருச்சிராப்பள்ளி வானொலிநிலையத்தார்க்கு அளித்த 'பேட்டி'யில் கூறியவற்றில், 'தமிழ்வளர்ச்சிக்கு முதலாவது வேண்டியது கலாசாலைகளில் தமிழின் மூலமே எல்லாப்பாடங்களும் கற்பிக்கவேண்டும். காரியாலயங்கள் அனைத்திலும் கடிதப்போக்குவரத்துக்குத் தமிழையே உபயோகப்படுத்தவேண்டும்....அநேக நூல்களை வேற்றுமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கவேண்டும். முதல்நூல்களைத் தமிழ்மொழியிலேயே எழுதவேண்டும்' என்று கூறுகிறார். தமிழ்வளர்ச்சியிற் கருத்துடையோர் வேறெங்ஙனங் கூறமுடியும்?

3. கல்வெட்டு ஆராய்ச்சி

கவிமணியவர்களுக்குத் தென்னிந்தியக் கல்வெட்டுக்களும் தென்னிந்திய சரித்திரமும் விருப்பமானவை என்று அவரே 'எனது இலட்சியம்' என்னும் கட்டுரையிலே கூறுகிறார். அவர் கூறியவாறே கல்வெட்டு ஆராய்ச்சிக்கு மிகுந்த பயிற்சி வேண்டும் என்று தெரிகிறது. கல்வெட்டு ஆராய்ச்சி செய்வோர் நன்கு உணராமலே ஒரு முடிவுக்கு வருவது வரலாற்றுக்கே மாறாக முடியும் என்பதைப் பல சான்றுகள் மூலம் அவர் விளக்குகிறார்.

திருவனந்தபுரம் ஹூஸூர் ஆபீஸ் செப்பேடு ஒன்றில்,

‘ஆய்குல மாதேவி யாயின முருகஞ் சேந்தியைத் திருவடிசார்த்த இவளுக்குக் குடியாக அட்டிக் கொடுத்த பூமி’

என்று வருந்தொடரில் உள்ள ‘திருவடி சார்த்தல்’ என்பது ‘திருமணஞ் செய்து கொடுத்தல்’ என்னும் பொருளுடையது என்று காலஞ்சென்ற திரு. கோபிநாதராவ் கூறியிருந்தார். அது தவறென்றும் திருமாலின் திருவடிகளிற் சேர்ப்பித்தல் (இவ்வுலக வாழ்வை நீத்தல்) என்று பொருள்படுமென்றும் பல காரணங்களைக்கொண்டு நம் கவிமணி நிறுவுவது பாராட்டத்தக்கது.

‘ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி’ என்று வருந் தென்னிந்திய கல்வெட்டு வரிசையில் உள்ள தொடருக்குப் பொருள் கூறும் பதிப்பாசிரியர் ‘ஐம்படைப் பருவம்’ என்பது மன்மதன் காதல் எழுப்புகிற பருவம் என்ற பொருளுடையது என்று எழுதியுள்ளாராம். காத்தற் கடவுளான திருமாலின் ஐம்படைகளைக் கோத்துக் குழந்தையின் கழுத்தில் அணிவார்கள் என்றும், அதற்கு ‘ஐம்படைத்தாலி’ என்று பெயரென்றும் அறியாத குறையால், அவர்எழுதியது நகைச்சுவையளிக்கவில்லையா?

மற்றொரு கல்வெட்டிலே ‘பறவைக்கரசு’ என்று படிக்காமல், ‘பறவைக் காசு’ என்று படித்து இது ஒரு நாணயம் என்று பதிப்பாசிரியர் பொருள் கூறியதைச் சுட்டிக்காட்டுகிறார், ஒரு மனிதர் பெயர் நாணயத்தின் பெயராகிவிட்டது.

ஒரு கல்வெட்டிலே திருவாடிச்சோதி திருவடிச் சோதியாகிவிட்ட கதையை விளக்குகிறார். ஆடித் திங்க

D-1MRLW
N53

ளிலே சுவாதிநாள் என்பது இறைவன் திருவடிச்சோதி யாக மாறிவிட்டது.

ஒரு கல்வெட்டிலே கரைக்கோட்டை என்பது காரைக்குடியாகப் படிக்கப்பெற்ற நகைச்சுவையைக் குறிப்பிடுகிறார். இது மாணவருக்கெழுதப்பட்ட பாடப் புத்தகமாம். 'வேணாட்டரசனுடைய போர்வீரர்கள் பாண்டியர் சேனையைக் காரைக்குடி வரையிலும் ஓட்டி னார்கள்' என்று அத்தொடர்உள்ளதாம். கரைக் கோட்டை, திருவாங்கூர் இராச்சியத்தில் அழிந்துகிடக் கும் ஒருகோட்டை. காரைக்குடி செட்டிநாட்டி லுள்ளது.

கல்வெட்டு ஆராய்ச்சியில் கவிமணியவர்கள் எழுதி யுள்ள கட்டுரைகள் சாசன ஆராய்ச்சி, தெலுங்குநாட் டுச் சாசனம், புலைப்பேடி சாசனங்களும் விநோத வியாக் கியானங்களும், திரிபுவனதேவி சாசனம், சோழபுரம் சாசனம், உலக முழுதுடையாள் சாசனம், பராந்தக பாண்டியன் சாசனம் என்பவை, இவைகள் ஆராய்ச்சி யாளருக்குப் பெரும்பயன் தருபவை. ஆகவே இவரைச் **சாசனமணி** என்றுங் கூறலாம்.

கவிமணியின் நூல்களின் மூலம் அவர் புகழுடம்பு தமிழ்மக்கள் உள்ளத்திலே என்றும் நின்று நிலவுக!

கழக வெளியீடு : எசுo

பதிப்பாளர் :
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம் :
24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை அணா 14.

அப்பர் அச்சகம், சென்னை - 1—C. 950.